# இனிய இலக்கியங்கள்

சேது சமஸ்தான மகாவித்வான்
ரா. இராகவய்யங்கார்

8252



# நூலாசிரியரைப் புகழ்ந்த பேராசிரியர்கள்

□

## நாவலர் சோமசுந்தர பாரதியார்

அறங்கூறும் வள்ளுவனாம் அருங்கவிசொற்
கபிலனுமாம் அஞ்சா நெஞ்சத்
திறங்கூறும் கீரனவன் திட்பமதி
யொட்பமிகத் திகழும் செஞ்சொல்
மறங்கூறும் பாவரசன் வண்புகழா
ரிராகவப்பேர் வம்பக் கம்பன்
புறங்கூறும் பழியஞ்சும் புலவனைநம்
தமிழிழக்கும் புதுமை என்னே!

அம்புவியான் செம்பியர்மூ வரசர்தொழத்
தமிழாண்ட கூத்தர் போலச்
செம்பியர் சீர்ச் சேதரசர் மூவர்முறை
முதல்வரிசைச் சிறப்புச் செய்யத்
தம்புலமை வீறுபுதுச் சங்கச்செந்
தமிழ்த்தலைமை தாங்கி ஓங்கிப்
பம்பிசையார் பாவலர் இராகவனார்
பெருமையெவர் பகர வல்லார்?

## பேராசிரியர் மு. இராகவையங்கார்

'கம்பன் பிறப்போ கபிலாவ தாரமோ
இம்பரிவ ரென்ன இருந்தா னிறந்தானே
செம்பதுமை ஈன்றருளும் சீரா கவனோடும்
அம்புவியிற் காண்டற் கரும்புலமை மாய்ந்ததுவே!

மன்றேறி வாதிப்போர் வாயடங்க வேகல்விக்
குன்றேறி நின்று குமுறுகின்ற கோளரியே
சென்றே பிரிந்தனையேற் சீராகவ வுன்றன்
இன்றேன் மொழிகேளா தெஞ்செவிகள் தூராவோ.

கீதை மொழிபெயர்த்தான் கேடில் புகழ்க்காளி
தாசனார் சாகுந் தலத்தைத் தமிழ்செய்தான்
தீதகல எம்மான் திருவடிமேற் பாமாலை
ஓதியே யுய்ந்தான் உரைத்தான் தொழிற்சிறப்பே.

வஞ்சி நகரை வறையறுத்தான் வண்புவியின்
விஞ்சு நலம்விரித்தான் வேள்பாரி பாட்டிசைத்தான்
செஞ்சொற் பொருளுரையாற் செந்தமிழை
(மேம்படுத்தான்
எஞ்சும் இவைநிதிகள் இராகவனார் வைத்தனவே.

தென்சொற் கடல்பருகித் தெய்வமொழி யிற்றிளைத்து
மன்சொற் கடலாடி மன்றிவரும் மாமுகிலே
இன்சொற் பொருட் பொழிவால் இராகவநீ
ஈங்கிறைத்த
நன்சொல் மணிபொறுக்கி நாவலர்கள் வாழ்வாரே.

நாடுபுகழ்ச் சாமி நாதனையாம் அன்றிழந்தோம்
ஈடில் பெரும்புலவன் ராகவனை இன்றிழந்தோம்
பீடுபெற வாழ்ந்த பெருந்தமிழின் தாயந்தோ
கூடுமிரு கண்போய்க் குருடாய் வருந்தினளே.

# மகாவித்துவான் படைப்புகள்

## பதிப்பு நூல்கள் (15)

**(அ) சங்க நூல்கள் (4)**

| | |
|---|---|
| அகநானூறு | 1901, 1921 |
| குறுந்தொகைவிளக்கம் | 1946 |
| பெரும்பாணாற்றுப்படை | 1949 |
| பட்டினப்பாலை | 1951 |

**(ஆ) பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் (4)**

| | |
|---|---|
| இனியவை நாற்பது | — பழையவுரையுடன் |
| ஐந்திணை ஐம்பது | — ,, |
| திணைமாலை நூற்றைம்பது | — ,, |
| நான் மணிக்கடிகை | — ,, |

**(இ) இலக்கண நூல்கள் (3)**

| | |
|---|---|
| நேமிநாதம்—மூலமும் உரையும் | 1903 |
| பன்னிரு பாட்டியல் | |
| தொல்காப்பியம் : செய்யுளியல் நச்சினார்க்கினியருரை | 1917 |

**(ஈ) பிற நூல்கள் (4)**

கனா நூல்
திருநூற்றந்தாதி
புலவராற்றுப்படை
முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்

## ஆசிரியர் இயற்றிய நூல்கள் (22)

### (அ) செய்யுள் நூல்கள் (5)

| | |
|---|---|
| புவி எழுபது | 1927 |
| தொழிற் சிறப்பு | 1932 |
| திருவடிமாலை | 1933 |
| நன்றியில் திரு | |
| பாரி காதை | 1937 |

### (ஆ) உரைநடை பாடல்கள் (9)

| | |
|---|---|
| சேதுநாடும் தமிழும் | 1924 |
| வஞ்சி மாநகர் | 1932 |
| நல்லிசைப் புலமை மெல்லியலார்கள் | 1933 |
| அண்டகோள மெய்ப்பொருள் | 1934 |
| தமிழ் வரலாறு | 1941 |
| தித்தன் | 1949 |
| கோசர் | 1951 |
| இராசராசேசுவர சேதுபதி ஒருதுறைக் கோவை | 1984 |
| ஆத்திசூடி உரை | 1985 |

### (இ) மொழிபெயர்ப்பு (1)

| | |
|---|---|
| அபிஜ்ஞான சாகுந்தலம் | 1938 |

### (ஈ) அச்சிடப்படாத நூல்கள் (7)

பகவத்கீதைத் தாழிசை
பாரத நீதிவெண்பா
காவல் தலைமை
கடவுள் மாலை
திருப்புல்லையமகவந்தாதி—உரையுடன்
திருவேங்கட மாயோன் மாலை
பல்லட சதகம்

# அறிமுகம்

## 1

## மகா வித்துவான்
## ரா. இராகவய்யங்கார்
## (1870-1946)

இக்கட்டுரைத் தொகுதியின் ஆசிரியரின்முன்னோர்கள் காஞ்சிபுரம் ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள திருப்புட் குழியில் வாழ்ந்தவர்கள். இவ்வூர் பல நூற்றாண்டுகள் வடமொழி, தென்மொழி வல்ல புலவர்கள் வசித்த இடம். மன்னர் இவர்களில் ஒரு சிலர் வேதம் தமிழ் செய்த நம்மாழ்வார் 'அவதரித்த ஆழ்வார்திருநகரிக்குக் குடி யேறினார்கள். நைத்ருவ காசிப கோத்திர வைணவ அந்தணர்களுக்கு அத்தலத்து எம்பெருமானார் ஜீயர் மடாதிபத்யம் உரியதாகும். கட்டுரை ஆசிரியரின் குடும் பத்தார் பின் சேது நாடு வந்து தமிழ், வடமொழி வல்ல வராய்த் திகழ்ந்தனர்.

1870 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் நாள் பிறந்த ஆசிரியரின் பெற்றோர் இராமாநுஜ ஐயங்கார், பத்மாசனி ஆவர். பிறந்த ஊர் சிவகங்கை அருகில் உள்ள தென்னவராயன் புதுக்கோட்டை. இளமையிலேயே தந்தையை இழந்து மாமா சதாவதானம் முத்துசுவாமி ஐயங்கார் ஆதரவில் தமிழ் இலக்கியங்களைக் கற்றார். தமிழார்வத்தால் உந்தப்பட்டு பள்ளிப் படிப்பை நடுவிலே விட்டு, தமிழை ஆதரிக்கும் வள்ளல்களிடம் தம் தமிழறிவைக் காட்டி அவர்களால் ஆதரிக்கப்பெற்றார்.

மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சிலகாலம் தமிழாசிரியராகப் பணி புரிந்தார். திருமணத்துக்குப்பின் திருச்சி தேசிய உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியராக அமர்ந்தார். இவர் தமிழார்வத்தினால் பெரிதும் ஊக்கப் பட்டு, இவர் மாணவர்களில் பலர், தமிழையே வாழ்க்கைத் துணையாக எடுத்துக்கொண்டார்கள். இக்காலத்தில்தான் டாக்டர் ஐயரவர்களுடன் குடந்தையில் தொடர்பு ஏற்பட்டது. இருவருக்கும் சங்க நூல்கள் பதிப்பிப்பதில் ஆர்வம் ஏற்பட்டது.

இராமநாதபுரம் சேதுபதிகள் தமிழை நன்கு வளர்த்த வள்ளல்கள். நவராத்திரித் திருவிழாவில் பல புலவர் களையும், அருங்கலை விநோதர்களையும் அழைத்துப் பரிசுகள் வழங்குவதுண்டு. பாஸ்கர சேதுபதி தம் அவையில் அமர்ந்திருந்த இராகவய்யங்காரின் புலமையில் ஈடுபட்டு அவரைத்தம் சமஸ்தான வித்வா னாக இருக்கப் பணித்தார். இது போலவே இசைத் துறையில் தேர்ந்த பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார் சமஸ்தான வித்வானாக உபசரிக்கப் பெற்றார். சுவாமி விவேகா னந்தர் சிகாகோ செல்ல விரும்பிய பொழுது பலநாட்கள் இராமநாதபுரத்தில் தங்கி சேதுமன்னரின் பொருளுதவி யால் அமெரிக்கா சென்றார். அவர் அவைக்களப் புலவர்களோடு இந்து சமயம் பற்றிய சர்ச்சைகள் பல செய்து இன்புற்றது உண்டு.

சேதுபதியின் உறவினரான பாண்டித்துரைத் தேவர் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை 1901இல் நிறுவி இராகவய்யங்காரைச் ''செந்தமிழ்'' என்னும் ஆராய்ச்சி இதழுக்கு ஆசிரியராக்கினார். இதன் மூலம் தமிழன்னை பெற்ற ஆராய்ச்சி முத்துகள் எண்ணிலடங்கா. விஞ்ஞான, பகுத்தறிவுக்கு ஏற்பத் தமிழாராய்ச்சி செய்தற்குத் தம் கட்டுரைகளின் மூலம் இலக்கணம் வகுத்தார். கம்பர், சங்ககாலச் சான்றோர் வரலாறுகள், ஊர்கள், நூல்களின்

திருவள்ளுவர், ஆசிரியர் பெயர்கள் தமிழுலகுக்குத் தெரிய ஆரம்பித்தன. எல்லாவகை அபிப்பிராயங்களுக்கும் இடம் அளிக்கும் இதழாகத் திங்கள்தோறும வெளிவந்தது. சில ஆண்டுகளுக்குப்பின் தம் தாய் மாமன் மைந்தரும், தமிழ்ப் பெரும் புலவருமான மு. இராகவய்யங்காரிடம் ஆசிரியப் பொறுப்பை அளித்தார். மீண்டும் சேது சமஸ்தான அவைக்களப் புலவரானார்.

அண்ணாமலை நகரில் 1935ஆம் ஆண்டு தமிழா ராய்ச்சிப் பகுதி திறக்கப்பட்டு, அப்பகுதித் தலைவராக நியமிக்கப் பெற்றார். இதுவரை சொந்த முயற்சியால் நூல்கள் வெளியிட்டும், சொற்பொழிவுகள் புரிந்தும் தமிழுக்குத் தொண்டுபுரிந்தவர்க்கு இப்பதவி மூலம் மிக விரிவாகத் தமிழாராய்ச்சி செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. தம் 65ஆம் வயதில் அளிக்கப் பெற்ற பெரும் பொறுப்பை மிகச்சிறப்பாக ஆறு வருடங்கள் நிறைவேற்றினார். இக் காலத்தில் இவர் செய்த சொற்பொழிவுகளைக் கேட்டு மயங்கியவர்களில் டி. கே. சி, ராஜாஜி, சத்யமூர்த்தி, நீதி பதிகள், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் போன்றோர் பலர். தமிழ் வரலாறு, பாரிகாதை, தித்தன்௫ கோசர், பட்டினப்பாலை உரை, பெரும் பாணாற்றுப் படை ஆராய்ச்சி, அபிஜ்ஞான சாகுந்தலம் இந்த ஐந்தாண்டுகளில் வெளியானவை. குறுந்தொகை விளக் கத்தின் ஒரு பகுதி பின்னர் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வாறு தென்னாட்டுத் தமிழ்த்திலகமாய் விளங்கிய புலவர் பெருமான் 1946ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் நாள் தமது 77ஆம் வயதில் தம் இராமநாதபுரத்து இல்லத்தில் காலமானார். அவரால் வெளிவந்த நூல்கள் கட்டுரைகள், தனியே கொடுக்கப்பட்டுள்ளன. பரிமேலழகரை ''ஈசனதருளால் உய்த்து உணர்வுடைய வோர் உண்மையாளன்'' என்பர். அத்தகைய ''அநுக்ரக சக்தி'' இம் மகாவித்வானிடம் அமைந்திருந்தது.

# 2

> "எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
> ஆன்ற பெருமை தரும்"

என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவரின் குறளைக் குறிக்கோளாகக் கொண்ட "செந்தமிழ்' என்னும் தமிழ் ஆராய்ச்சி மாத இதழைத் தொடங்கியவர் என் அருமைப் பாட்டனார் மகா வித்வான், பாஷா கவிசேகரர் ரா. இராகவையங்கார் அவர்கள். இவர் சேது மன்னரின் அவைக்களப் புலவராகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழக முதல் ஆராய்ச்சித் துறைத் தலைவராகவும் பணியாற்றிய பொழுது எழுதிய கட்டுரைகளின் ஒரு பகுதி இத் தொகுதியில் வெளிவருகிறது. என் இனிய நண்பர் திரு. சுஜாதா அவர்களின் பெரு முயற்சியால் வெளியாகும் இக்கட்டுரைத் தொகுதிக்கு அவர் என்னைச் "சில நினைவுகள்" என்ற தலைப்பில் எழுதச் சொன்னார்.

திரு. சுஜாதா அவர்களை, சங்கச் செய்யுட்களைத் தொகுத்த, தொகுப்பித்த புலவர், புரவலர்களோடு சேர்த்து நான் எண்ணுவதால், அவர் அன்புக் கட்டளையை மீற இயலாதவனாய் உள்ளேன்.

இப்புலவர் பெருமானின் மகன் வழிப் பேரன் நான். எனவே பிள்ளைப் பிராயம் தொடங்கும் பொழுது இவரால் பேணி வளர்க்கப்பட்டவன். பல பெரும் புலவர்களும், அறிஞர்களும் இவருடன் உரையாடும் பொழுது அவர் மடியிலும், அருகிலும் அமர்ந்து தமிழ் இன்பம் நுகர்ந்தவன். வாழ்க்கைக்கு விஞ்ஞானத் துறையை நான் மேற்கொண்டாலும், தமிழ்ப் பற்றும், ஆராய்ச்சி முறையும்

இளமையிலேயே அவரால் எனக்கு அளிக்கப்பட்ட பெரும் பரிசுகள். என்னை நிலைக்களனாகவைத்து அவர் பாடிய பாடல் இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது.

''சங்குச் சக்கரச் சாமி வந்து சிங்கு சிங்கென ஆடுமாம்
அது சிங்கு சிங்கென ஆடுமாம்
உலகம் மூன்றும் அளக்குமாம்—அது
ஓங்கி வானம் பிளக்குமாம்
கலகல எனச் சிரிக்குமாம்—அது
காணக்காண இனிக்குமாம்.
கொட்டு கொட்டச் சொல்லுமாம் அது
கூத்தும் ஆடப்பண்ணுமாம்
எட்டு எழுத்துச் சொன்ன பேர்க்கு
எந்த வரமும் அளிக்குமாம்.
யாரும் காண அரியதாம் அது
யாரும் காண எளியதாம்
பேரும் ஊரும் உள்ளதாம் அது
பெரிய பெருமை கொண்டதாம்
ஆதி மூலம் என்ற சொன்ன
யானை முன்பு வந்ததாம்
ஜோதி ரூபம் ஆனதாம்; அது
தூய வீடு தருவதாம் (சங்குச்...)

இப்பாட்டுக்குக் காலில் வெள்ளிக் கொலுசுடன் அவர் கைபிடித்து ஆடிய பேறு பெற்றவன் நான்.

சங்கச் செய்யுளில் குறிக்கப்பெறும் வஞ்சிமாநகர் பற்றிய சர்ச்சை பலகாலம் நடந்தது. கொங்கு நாட்டுக் கருவூரே வஞ்சி என்று அவர் நிலை நிறுத்தி அவர் வாதம் செய்யும் பொழுது நான் இளநிலைப்பள்ளி மாணவன். உண்மையை நிலை நிறுத்துவதில் இறைவனோடு வாதம் புரிந்த நக்கீரனை அவர் எனக்கு நினைவில் நிறுத்தினார்.

இன்று அகழ்வாராய்ச்சிக்காரர்கள் அவர் கூறியதை அப்படியே ஒப்புக் கொண்டுள்ளனர். வளரும் பருவத்தில் என் உறவினர் மூலம் அவர் செய்த சொற்பொழிவுகளின் ஒரு சில துளிகள் என் மனதில் பசுமையாய் அமைந்துள் ளன. நகைச்சுவை ததும்பப் பேசுவதிலும், அங்கதம் (Satire) முறையைக் கையாளுவதிலும் அவருக்கு நிகர் யாருமில்லை. காவிரி நீர்த்தேக்கத்தின் மூலம் மின்சாரம் கிடைத்தபொழுது, மணிமேகலையில் காவிரியை "வேண வாத் தீர்த்த விளக்கே! வா" என்று குறிப்பிட்டதை வேடிக்கையாகச் சுட்டிக் காட்டுவார்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவுக்கு ஆண்டு தோறும் சென்று சொற்பொழிவாற்றுவார். கூட்டம் கலையும் போல் இருந்தால் சாதுரியமாக தஞ்சை சரசுவதி மகாலில் கண்ட தனிப்பாடல்களை எடுத்து விளக்கி யாவரையும் மயக்கி விடுவார்.

"பிரம்பைக் கரம் பற்றிப் பின்னி அந்தக் கூடை
நிரம்பக் கவியை நிரப்பி — சிரம் பற்றிக்
கற்றார்கள் வாழும் தஞ்சைக் கடையெலாம் கூவி
விற்றாலும் கொள்ளார் விலைக்கு"

என்று தஞ்சைவாசிகள் தமிழ் அறிவு இல்லாதவர்கள் என்பது போல இது அமைந்தாலும், உண்மையில் கொல்லன் உலையில் ஊசி விற்பது போல், கவிகள் நிரம்பிய தஞ்சை வாசிகள் மத்தியில் எந்தக் கவியும் விலை போகாது என்று கூறி மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

மங்கல மங்கையராய் மன்னவர் கன்னியராய்
மைந்தர் வயிற்றினராய் வாழ்வினராயதிலே
திங்கள் நிறைந்து வரும் சேயிழையார் நடை
போல் தென்றல் அசைந்து வரும் செந்தமிழ்
நாடுடையாய் (சரசுவதிமகால் படிப்பகம்)

என்ற அருமையான பாடலின் முதல் இரண்டடியைக்கூறி "வாழ்வினராயதிலே" என்பதற்கு அழகான விளக்கம் கூறி

னார். வீரர்கள் யுத்தத்தின் பொருட்டு வெளிநாடு செல்லாமல் மனைவிமார் கணவரை விட்டுப் பிரியாமல் இருவரும் ஒருங்கே சேர்ந்து வாழ்வதைக் குறிப்பிடுகிறார் கவி (இதற்கு எதிர்ப்பதம் வாழா வெட்டி) என்று நயத்தை விளக்கினார்.

இது போல் பல துணுக்குகள் என் மனதில் பசுமையாய் உள்ளன.

''நடையினின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடை நிகழ்ந்த ராமாவதாரப் பேர்த்
தொடை நிகழ்ந்த தோமறு மாக்கதை''
—கம்பராமாயணம்

என்ற பாடலில் இரு அரிய செய்திகள் உள்ளன. பரசுராம, இராம, பலராம என்ற மூன்று ராம அவதாரங்களில் இடையில் உள்ளது இராமாவதாரம். கம்பன் தன் காவியத்துக்கு இட்ட பெயர் இராமாவதாரம்.

இது போன்றே தம் வட மொழிப் புலமையால், சாகுந்தலம், வால்மீகி இராமாயணம், காளிதாசன் காவியங்கள், மகாபாரதம், பாகவதம் போன்ற இனிய, இலக்கிய, இலக்கண நூல்களை அலசி ஆராயும் வாய்ப்பு அமைந்தது. சாகுந்தலத்தை மொழி பெயர்க்கும் பொழுது ஒவ்வொரு வார்த்தைக்கும் தக்க தமிழ் வார்த்தை கண்டு பிடிக்க பல இரவு தூங்காமல் இருந்ததுண்டு. பல பெரியோர்களுடன் கலந்துரையாடியதுமுண்டு: ''தெய்வந் தொழாள்கொழுநற் றொழுது எழுவாள்'' என்ற குறளை ஒட்டி அமைந்த வால்மீகி இராமாயண சுலோகம் ஒன்றை அவர் விவரித்தது இன்று போல் உள்ளது. (அபியா நீர் நமஸ்காரா) துஷ்யந்தன் சகுந்தலையின் தலையைச் சிறிதே நிமிர்த்தி முத்தமிடப் போகும் தறுவாயிலே இடையூறு ஏற்பட்டதாகக் கூறிகாளிதாசன் தன் திறமையையும் நாயக நாயகி ரூபாஸமீபத்தையும் சிருங்கார ரசம்ததும்பக் கூறி துஷ்யந்தன் பிரிவிலே கூறியதாக அகத்திணை

இலக்கணம் அமையக் கூறினான். இதே போல் வால்மீகியும் லட்சுமணனிடம் இராமன் வாக்காக கடற்கரையில் சீதையை நினைத்துக் கூறுவதும் அமைந்துள்ளதாக விளக்கினார் (ஈஷதுன்னம்ய பாஸ்யாமி ரஸாயன மிவாதுர), வடமொழி, தென் மொழி இரண்டிலும் புலமை இருந்தாலன்றி எந்த ஒரு மொழி இலக்கியத்தையும் பூரணமாக உணர முடியாது என்பதை அவர் பன்முறை உதாரணங்களுடன் தெளிவு படுத்தியுள்ளார்.

சங்க இலக்கியங்களைப் போல் கரடு முரடான கவிகளைப் பாடுவதில் வல்லவராயிருந்தும் எளிய இனிய நாடோடிப்பாடல்களில் மனதைப் பறி கொடுப்பார். இரயில் வண்டிகளில் கையினால் ஓசை எழுப்பிச் சிறுமிகள் பாடும்,

''சந்தனம் அள்ளிய கையால் சாணி வாரலாச்சே
குங்குமம் அளைந்த கையால்
குப்பை வாரலாச்சே''

போன்ற அவலச்சுவை நிறைந்த பாடல்களை மிகவும் பாராட்டுவார். முத்தொள்ளாயிரம், ஐந்திணை ஐம்பது போன்ற எளிய சங்க இலக்கியங்களை உலகுக்கு அறிமுகப் படுத்தியவர் இவரே. இதில் இவர் பாலை நிலத்தைப் பற்றிய ஒரு பாட்டில் மனமுருகிப்போவார்.

''சுனைவாய்ச் சிறு நீரை எய்தாது என்று எண்ணிப்
பிணைமான் இனிது உண்ண வேண்டி-கலை மாத்தன்
கள்ளத்தின் ஊளச்சும் சுரம் என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி'' (ஐந்திணை ஐம்பது)

ஆண்மான் தன் இணையான பெண்மானுக்காகச் செய்யும் தியாகம் மிக அழகாக விளக்கப்பட்டுள்ளது. சிறியஅளவில்

உள்ள தண்ணீரைத் தான் குடிப்பது போல் பாவனை செய்கிறதாம். பிணையும் அதை நம்பி முழுநீரையும் குடித்து விடுகிறதாம். விலங்கிற்கே இவ்வளவில் அன்பு இருந்தால் மனிதர்க்கு எம்மட்டில் இருக்கும்?

இது போல் பல சொல்லிக் கொண்டே போகலாம். இவர் சுதந்திரமானசிந்தனையாளர் விஞ்ஞான பூர்வமான தமிழாராய்ச்சிக்கு வழி வகுத்தவர். மாற்றுக் கருத்துக்கு மதிப்புக்கொடுத்து, அதைப் பலரறிய ஒத்துக் கொள்ளும் பெரும் உள்ளம் உண்டு. நச்சினார்க்கினியர் உரையை மறுக்கும் அதே நேரத்தில், புது மாணாக்கர்களின் கருத்துக்குமதிப்பும் தருவார். சமரச சன்மார்க்கவாதி. பிறப்பில் வைணவ அந்தணராயினும், ஆண்டுதோறும் சைவ சித்தாந்தக் கழகச் சொற்பொழிவுகளில் சைவ சமயக் குரவர்களின் பேரிலக்கியத்தைப் புகழ்வார். தானம், தயை, தபஸ் என்ற மூன்றும் இஸ்லாமிய அன்பர்களின் பெருநாள் நோன்பில் எவ்வாறு வெளிப்படுகிறது என்று காட்டுவார். தேம்பாவணி போன்ற கிறிஸ்துவ இலக்கியத்தைப் பெரிதும் பாராட்டுவார். எல்லாவித உண்மைகளையும், எங்கிருந்தாலும் அறியும் ஆர்வம் இருந்தது. இவர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் இதற்குச் சான்றாக அமைவன.

வாழ்க்கையில் வறுமையால் பன்முறை அல்லற்பட்ட பொழுதும் ஆராய்ச்சியையும், பதிப்பித்தலையும் விட்டதே இல்லை. வேடிக்கையாகப் பகவானே மகாபலியிடம் மூன்றடி மண் யாசித்தபொழுது உடல் குறுகி பிறந்தவர்களே நகையாடும்படியான தோற்றத்தில் வாமனனாய் அமைந்தான் என்றால் சாதாரண மனிதர்கள் எவ்வளவு கூனிக் குறுகவேண்டும் என்றுகூறிக் கம்பராமாயணத்தில் அப்பகுதியைக் காட்டுவார். தம்மைப் புரந்த சேதுபதி மன்னர்களையும், இராஜா சர். அண்ணாமலைச்செட்டியாரையும், கம்பன் சடையப்ப வள்ளலைப் புகழ்ந்தது

போல் கவிபாடி நன்றிக் கடனைத் தீர்த்தார். பெண்களிடமும், பெண்கல்வியிலும் பெருமதிப்பு வைத்தவர். சங்க இலக்கியத்தில் கண்ட பெண் புலவர்களை ''நல்லிசைப் புலமை மெல்லியலாார்கள்'' என்ற நூலை எழுதி உலகுக்கு அறிவித்தார்.

இவர் சிறந்த நாவலர். மகாவித்வான் என்ற பட்டம் தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதய்யரால் அளிக்கப் பட்டது. வடமொழி அன்பர்கள் நிறைந்த சம்ஸ்கிருத சமிதி ''பாஷா கவிசேகரர்'' பட்டம் அளித்துக் கௌரவித்தது. மூன்று சோழப் பேரரசர்கள் அவையில் ஆஸ்தான வித்வானாக இருந்த ஒட்டக்கூத்தன் போல் இவரும் மூன்று சேதுமன்னர்கள் அவைப்புலவராக அமைந்தார். சங்ககாலக் குறுநில மன்னர்களான வேளிர், கோசர், பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இவருடைய சுதந்திரமான தனிவழிப்பாதை காண்பதில் உள்ள ஆர்வத்தைப் புலப்படுத்தும். தித்தன் வேளிர் குறுநில மன்னன். வஞ்சியருகில் வதிந்தவன் என்பதைச் சமீபத்தில் கருவூர் அமராவதிப் படுகையில் கிடைத்த தித்தன் பெயர் பொறித்த நாணயம் வலியுறுத்தும். கோசர் வேளிரை அடுத்துத் தமிழ் நாடு வந்தவர்; கோசர் புத்தூர் பின்பு கோயம்புத்தூர் எனத் திரிந்தது; வேளிர் காச்மிர நாட்டிலிருந்து மிகப் பழைமையான காலத்தில் தமிழ்நாடு போந்தவர். பொருநராற்றுப் படைத்தலைவன் கரிகாலன், பட்டினப்பாலைத் தலைவன் திருமாவளவன் என்றும் இன்னோரன்ன புதிய செய்திகளை வெளியிட்டவர். இவற்றில் சில காலத்தால் வேறுபடலாம்.

இக்கட்டுரைத் தொகுதியைக் கொண்டு வர விரும்பிய என் தந்தையார் வித்வான் ரா இராமாநுஜ ஐயங்கார் இது வெளிவரும் பொழுது காலமாகிவிட்டார். அவர் இருக்கும் பொழுதே வெளிவந்திருப்பின் அப்பெரியார் மிக மகிழ்ந்திருப்பார். இக்கட்டுரையின் முதல் தொகுதி New Era

Publishers, Madras மூலம் என் உறவினர் டாக்டர் S. ஸ்ரீநிவாசன், என் மைத்துனர் காலஞ்சென்ற N. ஸ்ரீநிவாசராகவனால் வெளிவந்தது. ஆங்கில நூல்களை மட்டும் பதிப்பிக்கும் New Era Publishers, Madras விதிவிலக்காக இத்தமிழ் நூலை வெளியிட்டது என் மைத்துனரின் பெருமுயற்சியால் தான். அவர் இந்நூல் வெளிவரும் பொழுது இல்லாதது பெரிய குறையேயாகும். என் மைத்துனர்க்கும், என் தந்தைக்கும் இந்நூலை அர்ப்பணித்து நான் மனச்சாந்தி அடைகிறேன்.

இத்தொகுதியை வெளியிட்ட பாரதி பதிப்பகத்தார்க்கும் உரிமையாளர்க்கும் என் நன்றி. தமிழ்ப்பெரு மக்களின் ஆதரவுடன் இதுபோல் அடுத்துத் தொகுதிகள் வர விரும்புகிறேன். மீண்டும் என் நண்பர் திரு. சுஜாதாவுக்கு என் அன்பு கலந்த நன்றி.

டாக்டர் ரா. விஜயராகவன்
(சிறப்புப் பேராசிரியர்,
டாடா ஆராய்ச்சிக் கழகம்
பம்பாய்)

□ □ □

# அணிந்துரை

மகா வித்துவான் ரா. இராகவையங்கார் அவர்களின் கட்டுரைகளை முதலில் படிக்கும் சந்தர்ப்பம் எனக்கு அவருடைய பேரரும் இயற்பியலில் இந்தியாவில் சிறந்த ஆராய்ச்சியாளரில் ஒருவருமான பேராசிரியர் விஜய ராகவன் மூலம் கிடைத்தது.

என் நண்பர் பேராசிரியர் விஜயராகவன் இயற் பியலில் மட்டும் அல்லாது தமிழிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். தமிழ் ஆர்வம் அவருடைய குடும்ப ரத்தத்தில் உள்ளது. மு. இராகவையங்கார், ரா. இராகவையங்கார் என்று ஒரு பெரும் தமிழ்ப் புலவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு தமிழில் இத்தனை ஆர்வம் இருப்பது வியப்பல்ல.

விஜயராகவன் தன்னுடைய பாட்டனார் எழுதி வைத்திருக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அனைத்தையும் வெளியிட விரும்பினார். இந்தக் கட்டுரைகள் சில சிறு புத்தகங்களாகவும் சில 'செந்தமிழ்' போன்ற பத்திரிகை களிலும் வெளிவந்து அங்கங்கு சிதறியிருக்கின்றன. அனைத்தையும் ஒரே புத்தகத்தில் கொண்டு வந்தால், இராகவையங்காரின் சிந்தனைத் தெளிவும் தமிழ் அறிவும் ஆராய்ச்சித்திறமையும் முழுவதும் வெளிப்படும். அப்படிப் பட்ட புத்தகம் வெளியிட வசதிகளோ, ஆதரவோ இல்லாத சூழ்நிலையில் சில தேர்ந்தெடுத்த கட்டுரை களை மட்டுமே இப்போது வெளியிட முடிந்திருக்கிறது. இராகவையங்கார் போன்ற ஆராய்ச்சியாளரின் தமிழ்ச் சேவையை தற்காலத்து அரசாங்கமோ ஆராய்ச்சியாளர் களோ பல்கலைக்கழகங்களோ அதிகம் கண்டு கொள்ளா மல் இருப்பதற்கு பலவிதமான சமூக இயல் காரணங்கள் இருக்கலாம். இருப்பினும் உண்மை உயர்வு ஒரு நாள் உணரப்படும் என்ற நம்பிக்கையுடன் தமிழன்பர்களுக்கு இந்தப் புத்தகத்தை முன்வைப்பதில் பெருமைப்படு கிறோம்.

இப்புத்தகத்தை சிறப்பாக வெளியிடும் பாரதி பதிப் பகத்தார் சித. மணி சித. ராஜேந்திரன் இருவரின் தமிழார்வம் பாராட்டுக்கு உரியது.

பங்களூர் — சுஜாதா
10 டிசம்பர், 91

# தமிழ்த் தாய் வாழ்த்து

(தமிழ் அன்பர் மகாநாடு சென்னைப் பச்சையப்பன் கலாசாலைக் கட்டடத்தில் 23-12-1933 ஆம் நாள் செட்டிநாட்டு அரசர் பெருந்தகை டாக்டர் ராஜா ஸர். அண்ணாமலை வள்ளல் அவர்களால் சீர்பெறத் திறக்கப் பெற்றபோது, மகாவித்வான் அவர்களால் பாடப்பெற்றது இவ்வாழ்த்து. தமிழ்த்தாய் வாழ்த்தாக அமைந்த இப் பாடல்கள் தமிழின் மேன்மைகளை அழகுற எடுத்தியம்பு தல் கண்டு மகிழத்தக்கதாம்.)

1. அன்பக மேவினை நன்புறந் தூயாய்
   ஆரும் வியப்புறும் வீரம் நிறைத்தாய்
   என்பு முருக்கு மிசைத்திறங் கண்டாய்
   ஏவர்க்கு மொத்த வுயர்நெறி விண்டாய்
   முன்பொரு மூவரைப் பெற்றர சாக்கி
   மும்முர செங்கு முழங்க வளர்ந்தாய்
   இன்புரு வாயினை யின்றமிழ்த் தாய்நீ
   ஈண்டமர்ந் தன்பர்க் கினிதருள் வாயே.

2. தெண்ணெடு நல்வாடை முருகு மணக்கும்
   செவ்வியை குண்டல கேசிநற் றெய்வம்
   சேரற்கு வந்த திருமுகம் உள்ளாய்
   தேமிகு காவியங் கண்மகிழ் செய்வாய்
   தண்டிரு வாய்மொழி வேத மொலிப்பாய்
   தந்தமென் முல்லை யிலக்கண மிக்காய்
   சங்கக் களம்பரி பாட லிசைப்பாய்
   சார்வளை யாபதி யுங்கையின் மின்னும்

3. மண்டிய தேவார மாரிபணி யாவை
வான்மதி யிற்கலை சூழ வுடுப்பை
மன்னிய நூலிடை வைப்பைபல் காஞ்சி
மற்றதன் மேன்மணி மேகலை பூண்பை
பண்டைச் சிந்தாமணி யாலெழில் தோய்வை
பல்சந்த மாலைகள் கோவைகள் கொள்வை
பாதஞ் சிலப்பதி காரந் தொடுப்பை
பைந்தமிழ்ப் பாவை யினிப்பையிப் பண்பே.

4. தெள்ளிய சங்கக் கபிலர்நல் லோராற்
செய்யுள் வளஞ்செய்வித் தாய்தென் னிலத்தே
வள்ளுவ ராலுல கூட்டினை முப்பால்
வண்கம்ப ராலிரு ளோட்டினை யப்பால்
ஒள்ளிய நெஞ்சிற் பெரும்புல வோரால்
ஓரரு ளின்சுவை யுணவும் வைத்தாய்
எள்ளலில் தெய்வத நூலேணி யால்வா
னேறவும் நேர்வழி கண்டனை யெம்மோய்.

5. தத்துவ ராயரி னத்துவி தத்தின்
தத்துவ நாடெங்கு முய்த்துணர் வித்தாய்
பத்த மிலாத மகாவீரர் கொள்கை
பற்றுந லோரையும் வைத்துயர் வித்தாய்
சுத்தநல் லேசு தெளித்த மதத்திற்
றோயும் பலோரையு மார்பி லணைத்தாய்
ஒத்தம கம்மது ரைத்த நெறிக்கே
உமறுப் புலவரை யுய்த்தளித் தாயே.

6. வில்வித்தை வேல்வித்தை மேவிச் சிறந்தாய்
மேதினிக் கொத்த மரக்கல மூர்ந்தாய்
பல்வித்த கத்துந் தலைக்கொள நின்றாய்
பார்வளங் கண்டுநல் லேர்வளங் கண்டாய்
கல்விக்கண் மெல்லிய லாரை வளர்த்தாய்
கற்றவர் வீறக் கழக மமைத்தாய்
செல்வத்தி னாலிவண் வாழத் தெரித்தாய்
சீரரு ளாலுயர் வீடுந் திறந்தாய்.

7. தேவினை நெஞ்சிற் றிகழவும் வைத்தாய்
சித்தியை ஞானியர் செப்பவும் வைத்தாய்
பாவினை நூலிற் சுவைக்கவும் வைத்தாய்
பத்தியைத் தொண்டர் புகழ்க்கிடை நட்டாய்
பூவினைக் காக்கென வேத்தியல் சொற்றாய்
புத்தியைக் காக்கப் புலவரை யுய்த்தாய்
யாவினைக் குங்குடி மக்களை வைத்தாய்
எத்தனை செய்தனை நற்றமி ழன்னே!

□

# இனிய இலக்கியங்கள்

## சங்கத் தமிழரும் கொள்கைகளும்

### (1) பண்டைத் தமிழரின் புலமை:

பல்மொழி வளமையையும் தன்பாற்கொண்டு, வட வேங்கடம், தென்குமரி, குணகடல், குடகடல் என்னுமிந் நான்கெல்லைக் கண்ணடங்கிய நாட்டில் என்றும் அழியா இளமையுடன் வளர்ந்த நம் தமிழ்மொழி தலை, இடை, கடை என்னும் முச்சங்கங்களாலும் தன்வளத்தைப் பெருக்கிக் கொண்டது. முதல், இடை என்னும் இவ் விரண்டு சங்கங்களைப் பற்றி நமக்கு விசேஷமாக ஒன்றும் தெரியவில்லை. கடைச்சங்கத்துப் புலவர்கள் பாடிய பாடல்கள் மஹாமஹோபாத்யாய வித்வான் டாக்டர் உ. வே. சாமிநாதய்யரவர்களின் மஹாப்பிரயத்தனத் தினாலும் அருளாலும் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

இனி கவி எனின் என்னவென்று யோசிப்போம். கவி என்பது உள்ளத்துணர்வாலே நுகரப்படுவதாய், உள்ளத் திற்பிறங்கி, ஓங்கி, கடல்மடை திறந்தன்னப் பீறிட்டு வெளிவருவதாய், இன்ப வடிவமாய், சொல் பொருள் நயங்கள்மிக்கு, பயிலுந்தோறும் பயில்வார்க்கு இன்ப மளிப்பதாய், எக்காலத்திலும் அழியாத அழகியதாயிருக் கும் இன்னோசைத் தொடர்நிலையாம், சொல்லும் பொருளும் ஒன்றையொன்று மேவியழகுற அமைந்திருத் தல் வேண்டும். இக்காலத்திலே நாம் பார்க்கின்றோம் நல்ல பொருள் தோன்றும். சொன்னயமிராது. சொற்கள் கம்பீரமாயிருக்கும். ஆயின் பொருள் தினையளவு மிராது. இவ்வாறின்றிப் பண்டையோர் கவிகள் சொல்லும், பொருளும் ஒருங்கே அமையப்பெற்று விளங்குவதைக் காணலாம். அத்தகைய கவி முயன்று உண்டாக்கக்

கூடியது அன்று. அது உள்ள எழுச்சியின் ஊக்கத்தால் தானே எழுகின்றதாகும். அத்தகைய கவிதான் படிப்போன் உள்ளத்தைக் கவர்கின்றது.

இத்தகைய உள்ளங்கவரும் கவிகளைச் சொன்னயம், பொருணயம் மிக்குத் தோன்ற அமைக்கவல்ல புலவர்கள் யாவரினும் கபிலரே கடைச் சங்க காலத்தில் தலைசிறந்து விளங்கியவராவார். அவர் பாடிய பாடல்கள் ஒவ்வொன்றினும், ஒவ்வோரடியும், ஒவ்வொரு சொல்லும் உலகம் பெறுமான அழகுடையதாய்த் திகழும். படிப்போர் நெஞ்சு புலவர் மனதுடன் லயித்து உருகா நிற்கும். கபிலரது பாட்டல்களிற் சிலவற்றையீண்டு கூறி விளக்குகின்றேன்.

கடையேழு வள்ளல்களிலும் தலையாயவன் பாரி. இவன் பாரியெனும் பறம்பிற்குத் தலைவன். தமிழ்வல்லுநன். புலவரைப் போற்றுவதில் இணையற்றவன். மூவேந்தரும் தன் செங்கோல் போற்ற வாழ்ந்தவன். இவன் கபிலருக்கு நண்பன். பாரி சிற்றரசன். 'கபிலர்' பரிசிலன் மன்னும் அந்தணன்: இவ்விருவருக்கும் நட்பு உண்டாகியது வியப்பாகத் தோன்றலாம். ஆனால் நயம்படப்பாடுதல் கவிக்கும், அந்நயங்களை யறிந்து அனுபவிக்கும் அரசற்கும் சம்பந்தமேற்படுதல் இயல்பே. இத்தகைய பாரி ஒரு நாள் அவைக்கண்ணே, பல்புலவர்கள் சூழவிருக்கின்றான். புலவர்கள் அவனது வன்மையைப் பலவாறாகப் புகழ்கின்றனர். அச்சமயம் கபிலர் அங்கு வந்தார். வந்ததும்,

> ''பாரி,பாரியென்று ஒருவர்ப்புகழ்வர் செந்நாப்புலவர்
> பாரி யொருவனுமல்லன்''

எனக் கூறினார். யாவரும் என்ன நினைப்பர். ஆ! கபிலன் கூறுவதன் அர்த்தம் என்னவென்று தம் மனத்தே பல்படியாக ஆராய்வாராய்த் திகைத்தனர். இப்படி அவர்கட்குத் திடீரென ஒரு திகைப்பை (Suspense)உண்டாக்கிப் பின்னர் கபிலர்,

'மாரியு முண் டீண்டுலகு புரப்பதுவே' என்று தம் கூற்றைப் பொருட்பட முடித்த நயத்தை என்னவென்று கருதுகிறீர்கள்?

இக்கபிலர் சேரன் அவைக்களம் சென்றபொழுது, அவன் அவர் வந்த காரணம் தெரிய விரும்பிய காலை கபிலர் அவனை நோக்கிச் சொன்னதாகக் கூறப்படும் பாடல் ஒன்று பதிற்றுப் பத்தில் ஏழாம் பத்தில் காணப்படு கின்றது. அதில் அவர்

......மாவண்பாரி
முழவுமண் புலர விரவல ரினைய
......
வாராச் சேட்புலம் படர்ந்தோன் அளிக்கென
இரக்குவா ரேனெஞ்சிக் கூறேன்
ஈத்ததிரங்கான் ஈத்தொறு மகிழான்
ஈத்தொறு மாவள்ளியனென நுவலுநின்
நல்லிசை தரவந் திசினே.''

என்று கூறுகின்றார். இது பாரி திரும்பவாராவுலகஞ் சேர்ந்தனன். நான் பிறர் அளியை விரும்பி யாசிக்க வந்தேனல்லன். உண்மையின் எல்லையைக் கடந்து பொய்யே புகழ்ந்து சொல்லேன். புலவர்களுக்கு ஈந்த பின் கொடுத்தவற்றைப்பற்றி யிரங்குபவனல்லன். ஈந்ததைக் கொண்டு நாம் நன்கு சன்மானித்தோம் என்றுதன்னையே மகிழ்தலுமிலன். பல காலமீயினும் ஈயுந்தோறும் முன்னைய தடவையைக் காட்டிலும் வண்மைமிக்குத் தோன்ற ஈயவில்லை என்று கூறக் கேட்டனன். அத் தகைய நல்லிசை பாரியிடத்தேதான் யான் கண்டனன். அப்பெற்றியினி நின்னிடந்தர வந்தேனேயன்றிப் பிறிதின்று'' எனக் கூறுகிறார்.

இதில் ''ஈத்ததிரங்கான் ஈத்தொறும் மகிழான் ஈத்தொறும் மாவள்ளியன்'' என்று கபிலர் பாடுதலானது அக்காலத்துப் புலவர்கள் எவ்வாறு அரசர்களால் சன்

மானிக்கப்பட்டனர் என்பதையும், அவர்கள் மனம் சற்றும் மாறுபடாமல் அரசன் அவர்கள் கவியின்பத்தை அனுப வித்தான் என்பதையும், புலவர்கள் தங்கள் விசாலமான மனத்திற் தோன்றிய உண்மைகளை எவ்வாறு பயமின்றி எடுத்துரைத்தனர் என்பதையும் நன்கு விளக்கும். இதைக் கேட்ட சேரன் அவருக்கு மலை மேனின்று கட்புலனாகும் வரை நாடும், நூறாயிரம் காணமும் அளித்தான் என்று கூறப்படுகிறது.

இவர்காரியிடம் சென்றகாலைக் கூறியதாகக் காணப் படும் செய்யுள் மிகவும் அருமையானது. முன் பாரியிடம் 'பாரி பாரியென்று' என்று யாரும் முதலில் பாடியதை யொப்ப இங்குக் காரியை

''நினதென விலை நீ பெருமிதத்தையே''

என விளிக்கின்றார். காரியும் கடையெழு வள்ளல்களில் ஒருவன். பாரிக்கொப்பப் புலவர்களை ஆதரித்தவன். அவனை இங்ஙனம் இவர் விளித்தலும் மற்றையோர் இவர் உள்ளக்கிடக்கையை முதலில் அறிய உரனிலராய்த் திகைக்கின்றனர். இப்பதங்கள் கிடந்த கிடையில் 'உனது என்று கூறப்படும் பொருள் உலகிலொன்றுமேயுடையை யில்லை. ஆயினும் நீ வீறு தோன்ற விளங்குகின்றாய்!'' என்று பொருள் படும். இதை ஓர் அரசனவையிற் கூறின் திகைப்பேற்படுதல் இயல்பே. ஆயின் முன்னடிகளிற் கபிலர் கூறுதலானது இவ்வடிக்கு மிக உன்னதமான பொருளையளிக்கின்றது. அவர் கூறுவார் ''நின்நாடு அந்தணர் பாலாயது. மூவரீயும் கூழானது இரவலர் பாலது. நின்னுடல் நின்கற்புடை மனையாட்டியினது'' ஆக உனக்கென்று ஒரு பொருளையும் நீ உடையை யல்லை. எனினும் எல்லாம்உடையாய் போல் பெருமிதந் தோன்ற விளங்குகின்றாய்'' என்னே சாதுர்யம்! காரி தன் நாட்டை அந்தணர்க்கு அளித்து விட்டான். தன் பொருள்களை இரவலர்க்கு ஈத்து மகிழ்ந்தனன், தன் உடலைத் தன் கற்புடைத் தேவிக்கே உரித்தாக்கினன்

என்று கூறும் சொற்களில் உள்ள நயம் நம்மால் எடுத்து ரைக்க எளியதன்று. இச் செயல்களாலேயே அவன் பெருமிதம் தோன்றக் கிடக்கின்றது என்பது பொரு ளாகும்.

இவருக்கும் பாரிக்கும் இருந்த நட்பு மிகவும் போற்றத் தக்கதாகும். பாரியிறந்தும் தாமும் இனி உலகினிலிருத் தல் தகாதென்று அவருக்குத் தோன்றித் தாமும் தீப்பாய்ந் தனர் என்று கூறப்படுகிறது. அது நடந்தவிடம் திருக் கோவலூர்.

அவ்வூர் சாஸனத்தில் 'கபிலர் தீப்பாய்ந்த இல்லது' என்று கூறப்படுகின்றது. இத்தகைய நட்பு புலவர்கட்கும் அரசர்கட்கு மிடையே நிலவி வந்தது என்பதற்கு இதை விட மேலான சான்று வேண்டியதில்லை.

புலவர்களின் பொருணயங்களை யறியுமாற்றல் அரசனிடத்தே நிரம்பி இருந்தது. அரசன் புலமை நிரம்பிய வனாகவே இருந்திருக்கின்றான். புலவர்கட்குள்ளுந் தாரதம்மியமறிய வல்லனாய் அவனிருந்திருக்க வேண்டும். அரசகுலத்தார் தருமமாகத் தந்தைக்குப்பின் மூத்தவன் குடிபூணுவதாகக் கூறப்படினும்

'ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக வென்னா
தறிவுடையோனா றரசுஞ் செல்லும் மே''

என்று இருத்தலை நோக்குக மூத்தவனிருப்பினும் அறிவு மிக உடைய இளைஞோனையே அரசன் விரும்புவான்.

அத்தயை அரசன் தன்னுயிர் போல் மன்னுயிரை ஓம்பினான் என்பது பலகாலும் கூறப்படுகின்றது. மன்னு யிர் என்பது மக்களுயிர் மட்டுமின்றித் தாவர விலங்குகளி னுயிரையும் குறிப்பதாகும். இது பாரிமுல்லைக்குத் தேரீந்தனன் என்று சிறுபாணாற்றுப்படையிற் கூறப்படுவ தாற் பெறப்படும். காட்டின் வழி இரதமேற் சென்ற பாரி, கொள்கொம்பின்றித் தவிக்கும் ஒரு முல்லைக் கொடி

யைக் கண்டு, அதன் கவர்ச்சிக்குப் பெரிதுமிரங்கி, அது படர்ந்து வளரும்படி தானூர்ந்து வந்த தேரையதனருகே நிறுத்தி தான் கால்நடையே ஊர் திரும்பினன் என்று அவ்வரலாறு கூறும். இது மன்னவர் மனத்தில் நிறைந்த காருண்யம் எம்மட்டும் எட்டுகின்றதென்பதை நன்கு விளக்கும். பாரியவ்வாறு முல்லைக் கொடி தவிப்பதைக் கண்டு மனம் பரிந்த காலைத் தேர் கொண்டு வந்திலனா யிற்றானே முல்லை படரும் கொள் கொம்பா நின்றிருப் பன் என்று கூறுவர்.

இதைவிட மன்னவரின் கருணையையும், அவர் உயிர்களைப் பரிபாலித்ததையும் கூறுவதற்கு வேறென்ன வேண்டும்?

ஔவை:- நல்லிசைப் புலவராய் ஆண்மக்களிற்றலை சிறந்து எவ்வாறு கபிலர் விளங்கினாரோ அவ்வாறே மெல்லியலார் தம் குழுவிற்கெல்லாம் தலைசிறந்து விளங்கியவர் ஔவையார்.இவரைச் சிலர் கபிலரின் உடன் பிறந்தாரெனக் கூறுவர். வேறு சிலர் அவ்வாறு இல்லை யென்று உரைப்பர். அதைப்பற்றி நாமாராய்ச்சி செய்ய வேண்டுவதில்லை.

புலவர் குழுவில் ஔவை மிக மேம்பாட்டுடன் விளங்கு வதை நோக்க அக்காலத்தே நம்பெண்மணிகள் கல்வி யறிவு மேம்பட்டுத் திகழ்ந்து விளங்கினர் என்பது நன்கு புலப்படும். மாதர் அறிவிலாரென்று கூறும் கூற்றானது எத்துணைப் பொய்யானது என்பதை ஔவையின் வரலாறு நன்கு எடுத்துரைக்கும். அக்காலத்தில் அறிவு சம்பந்தப்பட்ட மட்டில் ஆண்பெண்என்னும் பேதமிருந்தது இல்லை. அறிவென்னும் துறையில் இருவரும் அபேத மாக ஒரேபடித்தாகப் போற்றப்பட்டு வந்தனர்: பெண்டிரும் மாறுபாடின்றித் தம் அறிவை வளர்த்து அவ்அறிவை உலகத்தார்க்கும் பயன்பெற வெளியிட் டனர் என்பது வெளிப்படை. இதைப்பற்றி நான்

'நல்லிசைப் புலவர் மெல்லியலார்' என்று என்னால் எழுதப்பட்ட புத்தகத்தில் விரிவாகக் கூறியுள்ளேன். அங்கு விரிவாகக் கண்டு கொள்க.

இனி ஔவையின் கவித்திறனை நோக்குமிடத்து அது கபிலர்பாடல் போலன்றித் தனக்கென்று தனியாய்த் தோன்றும் சுவையுடனும், நயத்துடனும் விளங்குகின்றது. இவரது பாடல்களிற் காணப்படும் வீரச்சுவை மிகவும் ரசமானது. இக்காலத்தே பெண்டிர் அரசியற்றுறைகளில் பயின்று கோடல் நன்றா இல்லையா என்று சங்கிக்கின்றதைக் காண்கிறோம். ஆனால் அக்காலத்தே பெண்டிர் அரசரால் மற்றைய அரசரிடம் தூதாக அனுப்பப்படும் படி அத்துணை அறிவும், வீரமும், சாதுர்யமும் பொருந்தியவர்களாக இருந்திருக்கின்றனர். தமிழ் நாட்டிலன்றி மற்றையெந் நாட்டிலும் பெண்ணைத் தூதனுப்பியதாக ஓர் அரசனின் சரித்திரத்திலும் நாம் இதுவரை கேட்டதில்லை.

அதியமானால் தொண்டைமானிடம் தூதாக அனுப்பப்பட்டாள் ஔவை. அம்மன்னன் அவளைத் தன் ஆயுத சாலையிற் கூட்டிக்கொண்டு போய் தன்னுடைய பல் வகைப்பட்ட ஆயுதங்களைக் காட்டுகின்றான். அவனது எண்ணம், 'வந்திருப்பவள் மன வலியில்லாத பெண். நம் ஆயுத வகைகளைக் காட்டினால் அவள் மருண்டு திரும்பிச் சென்ற பின் அதியமானிடம் தன்னுடைய படை வலிமையைப் பற்றி மிகவும் அவன் அச்சமுறும்படி கூறுவாள்'' என்பது. ஆனால் ஔவையின் வீரம் அவன் அறிந்திலன். படைக்கலம் முழுதும் பார்வையிட்டாயிற்று. அதைப் பற்றி அவள் அபிப்பிராயம் என்ன என்று அவ்வரசன் வினவுகிறான். இங்கே நாம் ஔவையின் நிலையைக் கவனித்தல்வேண்டும். அம்மன்னனிடம் அவன் படைக் கலச் சாலையைப் புகழ்ந்துரைப்பின் அது தன்னைத் தூதாக அனுப்பிய அதியமானுடைய பெருமிதத்திற்கு இழிவு உண்டாக்கியதாகும். அதுவன்றி அவன் முன்னிலையில் அதை இகழின் அவன்

கோபித்தலும் கூடும். ஆனால் அச்சாலையைப் பற்றிக் கூறுகையில் அவ்வரசனைக் காட்டிலும் அதியமான் படை வலியுடையான் என்பதைக் குறியாவிடில் அவள் தூதுவந்த கொள்கை பயனற்றதாகும். அவளும் வீரமற்ற வளாகக் கருதப்படுவாள். இவ்வளவையும் ஆராய்ந்து தெளிந்த அவ்வீரப் பெண்மணி பின் வருமாறு அவ்வர சனுக்குப் பதிலுரைத்தாள்:

''இவ்வே பீலியணிந்து மாலை சூடிக்
கண்திரள் நோன் காழ்திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியனகரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடு நுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ'' (புறம்)

மன்ன ! உன் ஆயுதசாலையைப் பார்வையிட்டேன். பீலியும் மாலையும் சூடப்பட்டு கைப்பிடிகள் நன்கு வலியுடையதாய் அமைக்கப்பட்டு நெய்யணிந்ததாய் காவலையுடைய உன் ஆயுத சாலையிலேயே உள்ளன. ஆனால் எங்கள் அதியமானுடைய படைக்கலங்களோ போரிலெதிர்ந்த பகைவர்களைக் குத்தி அதனால் முனை மழுங்கின தன்மை நீங்கும்படி பழுது பார்ப்பதற்காக கொல்லன் உலைக்களத்திலே கிடக்கின்றன. இது இதன் பொருள். இதிலுள்ள வீரம் ததும்பும் மொழிகளை நோக்குங்கள். இதனால் அவரவர் படைக்கலங்கள் இருக்குமிடத்தையே பொதுவாகக் குறிப்பதாய்க் காணப்படினும் உள்ளுறைப் பொருளினாலும் அவனை மறைபொருளாற் பரிகசிக்கும் வகையாலும் (Satire) ஊன்றி நோக்கின் அம் மன்னவனை நோக்கின் அது அம் மன்னவனை யிகழ்ந்து, அவன் படைக்கலங்கள் எப்போதும் போரில் பயன்படாவாய் அலங்காரமாய் அறைக்குள் வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அதியனின் படைக்கலங்கள் எப்போதும் போரில் வெற்றி கண்டு பின்னும் பகைவரைத் தடித்தற்காகப் பழுது பார்ப்

பதன் பொருட்டு கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றனவென்றும், அதியனுடன் முனையின் அம் மாற்றரசன் படைகள் வலியிழந்தனவாகும் என்றும் பொருள் படத் தொனிக்கின்றதாகும். இத்தகைய வீரம் ததும்பும் பாடலைப் பகையரசனிடம் அவன் ஆயுத சாலையிற் கூறியது ஒரு போர் வீரனன்று. வீரமற்றவரென்று மக்கள் தவறாகக் கருதும் பெண்டிர்க் குலத்திற்கே ஒரு திலகம் போன்று விளங்கும் ஔவையென்னும் கிழவி பாடியது. இப்பாடல் நம் நாட்டு மங்கையர் ஒவ்வொருவரும் பொற்ற கட்டிற் பொறித்து நெற்றியில் கட்டிக்கொள்ள வேண்டியதன்றோ!

இவ்வாறு வீரமிகவுடையவனென்று தன்னாற் பாராட்டப்பட்ட அதிகனின் வீரத்தை ஔவை ஓர் பழகிய யானையின் வீரத்திற்கும் காம்பீரியத்திற்கும் ஒப்பிடுவாள். ஊரிலுள்ள யானை குளிக்கப் போகுங்கால் பல்வகைச் சிறுவர்களும் சென்று ஊருணியில் அது கிடக்க நுண் மணல் கொண்டு அதன் வெள்ளிய தந்தங்களைத் தேய்ப்பர். அதற்கு யானை பணிந்து நிற்கும். அதே யானை மதங்கொண்டு போரிலேற்று நின்றால் வீரரும் அதனருகே செல்ல அஞ்சும்படி தோற்றும். இத்தகைய பணிவும், அச்சுறுத்தும் நிலையும் யானையிடத்தே அமைந்திருக்கின்றது. அதே போல அதிய! நீ எம் போல்வார்க்கு பணிவுடன் சிறுவர் விளையாடித் தேய்க்குமாறு யானை நிற்குமாறு போன்று இனிமையாய், மாற்றார்க்கு அச்சத்தை விளைக்கும்படி அந்த யானை மதங்கொண்டெழுதல் போல அச்சுறுத்தும் தகைமையினையுடையாய், என்று பொருள் படும்படி,

'ஊர்க்குறு மக்கள் வெண்கோடு கழாஅலி
னீர்த்துறை படியும் பெருங்களிறுபோல
வீனியை பெரும வெமக்கே மற்றதன்
றுன்னருங்கடா அம்போல
வின்னாய் பெரும நின்னொன்னா தோர்க்கே!

என்று பாடுகின்றாள். இவ்வாறு யானை குளிக்கையில் சிறுவர் தேய்ப்பதுண்டோ? இது கவி சாமர்த்தியமோ என்று நீங்கள் எண்ணலாம். ஆனால் நான் என் கையால் என் சிறுவயதில்ராமநாதபுரம்பட்டத்துயானையின்தந்தங் களை அது குளிக்கையில் தேய்த்திருக் கின்றேன். நானும் மற்றச்சிறுவர்கள் தேய்த்து முடிந்ததும் யானையெழுந்து நின்ற காம்பீர்யத்தை நிமிர்ந்து பார்க்கும் போது ஆ! இவ்வளவு பயங்கரமான யானையின் கொம்பையா நாம் அச்சமின்றியருகிருந்து தேய்த்தோம்' என்னும் பயத் துடன் கலந்த வியப்பையடைந்திருக்கின்றேன். பின்னால் புறநானூறு மஹாமஹோபாத்யாய ஐயரவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்ட பின் இப்பார்த்து யான் மிகவும் அனுபவித்ததுண்டு.

அதியனிறந்ததும் ஔவை அவனைப் பாராட்டிப் பாடிய பாடல் மிகவும் உருக்கமானது. அது கன்னெஞ் சனும் கண்ணீர் விடுமாறு பாடப் பட்டுள்ளது.

## சிலப்பதிகாரம் :

கவித்திறன் சிலப்பதிகாரமெங்கனும் சிறந்து விளங்கு வதை அதையூன்றிப் படிப்போர் உய்த்துணரலாம். ஓர் உதாரணம் இங்கு தருகின்றேன். பாண்டியனிடம் காணாமற்போன சிலம்பை விலைகூறித் திரிவானோர் வணிகன் உளனெனப் பொற்கொல்லன் கூறலும் பாண்டியன் 'கொல்ல நகையைக் கொணா, எனக் கூற நினைத்தவன் ஊழ்வினையுந்துதலால் நாக்குழறி 'கொன்று நகையைக் கொணா, வெனக் கூறலும் பொற் கொல்லன் கோவலனைக் கொன்று நகையைக் கொணர்ந் தனன். அரசனிழைத்த தவறினால் ஒரு நிரபராதி கொலை யுண்டான். அப்பாபம் அரசனைச் சார்ந்தது. இவ்வாறு அவன் தவறிழைத்தானென்பதை, கண்ணகி சிலம்பை யுடைத்து அரி மாணிக்கங் காட்டிக் கோவலனிட மிருந்த சிலம்புஅரசனதன்றெனக் காட்டலும் அரசன் தான் செய்த

பாபம் தன்னுயிரீதலாலே கழிய வேண்டும் என்றுணர்ந்த வனாய் சிம்மாசனத்தினின்றும் மனததுன்பம் சகியாது வீழ்ந்து மாண்டனன். இதை இளங்கோ அமைக்கும் அழகை நோக்குங்கள்.

"மன்னவன் வளைத்த செங்கோலைச்
செல்லுயிர் நிமிர்த்துச் சீராக்கியது"

என்று அவர் கூறுகிறார். அரசனது செங்கோல் கோட்ட மின்றி இருக்கவேண்டியது அவன் செய்த தவறால் கீழே நோக்கி வளைந்தது. அரசன் செய்த பாபம் உயிர்க்கு யிரீந்த தன்மையால் கழுவப்படலின் அந்நல்லுயிர் பாப சம்பந்தமற்றமையின், மேலுலகே செல்லுந்தகுதியுடைய தாகும். அவ்வாறு பாபத்தைக் கழுவி மேலே சுவர்க்கம் செல்லுங்காலை கீழே நோக்கி வளைந்த அந்தச் செங் கோலை நிமிர்த்துக் கொண்டு சென்றது. அதனால் அக் கோலும் அவன் தவறு முன்னம் விளைத்த வளைவு நிமிர்ந்து சீராகியது. இத்துணைத் பொருளைத் தன்னி டத்தே கொண்டதாகும், இவ்விரண்டிகள். இதன் பொருளை உய்த்துணரல் வேண்டும். இவ்வகைப் பாடல் களே உண்மைக் கவிகளாகும். இத்தகைய கவிகளிலே தான் பொருள் மலிந்து கிடக்கின்றதைக் காணலாம்.

## மணிமேகலை:

மணிமேகலை பாடிய சாத்தனார் மஹாகவி. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் பாடுமுன்பே இவர் மணிமேகலையைப் பாடினார். இம்மணிமேகலை ஒரு பௌத்த நூலாகும். இவர்களது கொள்கை அஹிம்சை. அந்தக் காவியத்தில் சொன்னயமும் பொருனயமும் நிறைந்து விளங்குகின்றது. அதில் ஓர் உதாரணம் காட்டு கின்றேன்.

அந்தணரால் யாகத்தில் பலிக்கென்று ஒரு பசு கொண்டு வரப்பட்டு அங்கே நிற்கின்றது. அதைக்கண்ட ஆபுத்திரன் என்னும் பௌத்த தருமி அதன் பாலிரங்கி

அப்பசுவை அவிழ்த்து விட்டு விடுகின்றான். அந்தணர் அப்பசுவை மீண்டும் கொண்டுவந்துயாகஞ் செய்ய எண்ணி அதைத் தொடர்கின்றனர். அப்போது அவ்வந்தணர்களை நோக்கி ஆபுத்திரன் கூறுகின்றான்:

'விடுநில மருங்கிற் படு புல்லார்ந்து
நெடுநிலை மருங்கின் மக்கட்கெல்லாம்
பிறந்த நாடொட்டுச் சிறந்ததன்றீம்பால்
அறத்தாறு கருதி யருளொடு சொரியும்
இதனுடன் கொண்ட செற்றமென்?'

இதில் ஒவ்வொரு பதமும் மிகவும் உன்னதமான பொருளையுடையதாகும். அதனால் பிரித்துப் பொருளுரைக்கின்றேன்.

விடுநிலம் மருங்கில் — மனிதனால் தனக்கு உபயோகமில்லையென்று விடப்பட்டநிலத்தில். மனிதன்ஆசை அளவு கடந்ததாயிருக்க அவன் நிலத்தை விட வேண்டுமாயின் அது ஒன்றற்கும் உதவாத நிலமேயாக வேண்டும். அது கொஞ்சமேனும் உபயோகமளிப்பதாயின் அவனது பேராசை அந்நிலத்தையும் உழுது பயிரிட்டுப் பொருள் சேமிக்கத் தூண்டும்.

படுபுல் — தானே வளர்ந்த புல்லை. புல் என்னும் சொல்லே சப்தார்த்தமாய் அவ்வாகாரத்தின் அற்பத்தை உணர்த்தும். அத்தகைய புல் ஒருவரால் நீர் பாய்ச்சி வளர்க்கப் பட்டதல்ல. இறைவனின் அருளால் மழையின் கருணையால் தானேயுண்டான புல்.

ஆர்ந்து — உண்டு. தானேயுண்டு என்றபடி கொண்டு வந்து ஊட்டுவாருமில்லை. இடங்காட்டுவாருமில்லை என்றவாறு.

| | |
|---|---|
| நெடு நிலை மருங்கின் - | பெரிய மாளிகையிலே பிறவுயிர்களின் கஷ்டம் நோக்காது போகங்கள் துய்க்கும். |
| மக்கட்கெல்லாம் - | எல்லா மக்கட்கும். இங்கு மக்கள் என்பது மக்களைப் போல் சுகத்துடன் அந்நிலை மருங்கில்வளரும் பிறவுயிர் களாகிய வளர்ப்புக்கிளி முதலியவற் றையுங் குறிக்கும். |
| பிறந்தநாடொட்டுச் சிறந்ததன்றீம்பால் | தான் பிறந்த நாள் தொடங்கித் தன்னுடைய சிறந்த, தித்திப்பான பாலை, கன்றாகும் காலத்தேயும் பால் அதற்கென்றே அதன் தாய்ப்பால் கடவுளாலளக்கப்படுதலின் அதன் பாலேயாதல் காண்க. பின் தானீன்ற பின்னர் தன்னிடத்தே உண்டாகிற பாலாதலான். |
| அறத்தாறு கருதி - | தருமநெறியையுன்னி. நீவீர் அதற்குச் செய்யும் உபகாரத்திற்குக் கைம்மா றாகவன்று. நீர் செய்யும் உபகாரம் தான் ஒன்றுமில்லையே. |
| அருளொடு சொரியும்— | உங்கள் பால் கருணையோடு சொரியும் தன் கன்றிற்கின்றி நீர் கறக்கினும் தட்டின்றிஒரு பீச்சிலே ஒருகுடம் நிறை யும்படி ''வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல்களாய்'' குடத்தால் வந்த குறையின்றி பாலால் குறைவில்லாத படி அவ்வளவு சொரியும். |
| இதனுடன் கொண்ட செற்ற மென்— | அவ்வளவு கருணாஸ் வரூபியாய் விளங்குமிப் பசுவின்பால் நீங்கள் கொண்ட பகைக்குக் காரணமென்ன? |

உங்களாலே சாரமில்லையென்று விடப்பட்ட நிலத்தில் தானே வளர்ந்த புல்லையருந்தி உங்களுக்கும், உங்கள் வீட்டில் உள்ள பிறவுயிர்களுக்கும் தான் பிறந்த நாள் தொட்டுதன்னுடைய சிறந்தஇனிய பாலை, கேவலம் தரும நெறியையுன்னிக் கருணையோடு சொரிகின்ற இந்தப் பசுவிடம் உங்களுக்கு வந்த பகை என்ன என்று வினவுகிறான். இவ்வடிகளில் ஆழ்ந்து கிடக்கும் பொருள்களை நோக்கின் சாத்தனாரின் கவித் திறமையை யாம் என்னென்று கூறிப் பாராட்டுவது ?

இவ்வாறு பொருணயம் தோன்றப் பாடலே புலமை எனப்படும். அப்புலமை சொல்லும் பொருளும் ஒன்றாய்ப் பொருந்தி, படிப்போர் காதிற்கின்பம் பயப்பதாய் படிப்பவர் படிக்குந்தொறும் நயங்கொடுப்பதாய், படிப்பவர் என்றுந் தன் மனத்தே அதைப் பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்னுமோர் ஆர்வங் கொள்ளும்படி செய்வதாயிருத்தல் வேண்டும். இத்தகைய புலமை நந்தமிழ் நாட்டகத்தே நன்கு பரவியிருந்தது. இப் புலமைக்கு சாதி வேற்றுமையில்லை. எல்லாச்சாதியாரும் புலமைசம்பந்தப்பட்ட வரையில் புலமையாலேயே மேல் கீழ் கருதப்பட்டனரேயன்றிப் பிறிதில்லை.

''வேற்றுமை தெரிந்த நாற் பாலுள்ளும்
கீழ்ப்பாலொருவன் கற்றவனாயின்
மேற்பாலவனும் அவன் பாற்படுமே

என்றது இவ்வுண்மையைப் புலப்படுத்தும்.

இனி இத்தகைய புலமையுடையாரைத் தன்னிடத்தே கொண்ட சபைதான் சங்கமெனப்படும். அத்தகைய சங்கங்கள் பாண்டிய நாட்டேயிருந்தன. அச்சங்கத்தில் புலவர்கள் தங்கள் ஜாதியை மறந்து, ஆண், பெண் வேற்றுமை நீக்கியவர்களாய், தங்கள் மதங்களையே பொருளாகக் கொண்டு வாதிட்டுக் கழியாராய், புலமை

யென்றையேநோக்காகக் கொண்டு தமிழை வளர்த்தனர். இவ்வாறு புலவர் குழுவிலிருந்து தமிழாராய்ந்த சங்கங் களில்லை என்று உரைப்பாரும் உளர். ஆனால் அவர் களுடைய கூற்றிற்கு ஆதாரம் எதுவுமிருப்பதாகக் காணப் படவில்லை. பல்வகைப்பட்ட புலவர்களும், பல்வேறு நாடுகளினின்றும் வந்து கூடியிருந்தனர் என்பதும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிலும் மேம்பட்டிருந் தனர் என்பதும் நூல்களால் அறியக் கிடக்கின்றன.

தென்கடலிலே பிறந்த முத்தும், குணகடலிலே தோன் றிய பவளமும், உயர்ந்த மலையிலே பிறக்கின்ற மணி களும், பூமிக்குள்ளே அதிக ஆழத்திலே உற்பத்தி ஆகின்ற பொன்னும், தாம் பிறக்கும் இடத்தாலே வெவ்வேறா யிருப்பினும், ஓர் உயர்ந்த ஆபரணஞ் செய்யுங்காலை எவ்வாறு யாவும் பொன் செய் கொல்லனிடத்தே வந்து கூடியவ் அணியையழகுபெறச் செய்கின்றனவா அதே போன்று சான்றோர் எஞ்ஞான்றும், எவ்வளவு தூரத் திருப்பினும் சான்றோருடன் கூடுவரென்றும் சாலார் சாலாருடனேயே கூடுவரென்றும் பொருள்பட

''பொன்னுந்துகிரும் முத்துமன்னிய
மாமலை பயந்த காமருமணியும்
இடைபடச் சேயவாயினும் தொடை புணர்ந்து
அரு விலை நன்கல மமைக்குங்காலை
ஒரு வழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பாலராப
சாலார் சாலார், பால ராகுபவே'' (புறம் 218)

என்று ஏணிச்சேரி முடமோசியார் கூறிய பாடல் சங்கத் தையே உதாரணமாகக் கொண்டு பாடியதென்று எனக் குத் தோன்றுகிறது. ''சாலார்க்கு உவமை அமைத்துக் கொள்க'' என உரைகாரர் எழுதிப் போந்தனர். இவ் வுவமையால் புலவர்கள் பொன்னுந்துகிருமணியுமாவ ரென்றும் சங்கமே அருவிலை நன் கலமாமென்றும் நன்கு விளங்கும்.

# தமிழர் தொழில்கள்

இவ்வுலகத்தை அறிவுடையோர்கள் கர்ம பூமி என்று அழைப்பர். கருமம் எனினும் செய்கை எனினும் ஒக்கும். மனிதன் உயிர் பரலோக மார்க்க மெய்துதற்குச் செயல்களைச் செய்கின்ற பிரதேசம் என்று இவ்வுலகிற்குக் கர்மபூமியென்று பெயர். இதனை நமது உடலே விளக்கும். தன்தன் பலன்களை யனுபவிக்க வேண்டிய உயிர் முதலிலேயிருந்து அனுபவிப்பது நம் உடலில்தான். அவ்வுடலில் அமைந்த உறுப்புகளொவ்வொன்றும் தத்தமது வேலைகளையிடைவிடாதியற்றுகின்றன. இவ்வாறு செய்வதை என்று உடல் நிறுத்துகின்றதோ அன்று அவ்வுடலிற்கும், அதனுள்ளே தங்கி நின்று கொண்டிருந்த உயிருக்கும் பற்றில்லையாகின்றது. உயிரற்ற உடலை நாம் பிணமென்கிறோம்.

அத்தகைய உடல்தான் தட்டின்றி வாழ எப்போதும் தன்னுறுப்புகளால் வேலை செய்து கொண்டேயிருக்க வேண்டியதாகின்றது. அவ்வாறு தன் சௌகரியார்த்தம் தன் புத்தி விசாலத்திற்கேற்றபடி, பல வகைப்பட்ட தொழில்களைப் புரிந்து தனக்கு வசித்தற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் உடலின் தன்மை. அவ்வாறு மனிதன் தட்டின்றி வாழவென்று முன்னாளில் செய்யப்பட்டனவற்றை நாம் இன்றும் நிலைபெற்று விளங்கக் காண்கிறோம். மனிதன் தான் தன் மனைவி மக்களுடன் வசிக்க நல்ல வீடும், வயிறார உண்ண உணவும், தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள உடையும் பெறவேண்டியதவசியமாகின்றது. இவை தானாகவே அவனுக்குக் கிட்டுவதில்லை. யாவற்றையும் அவனவன் முயன்று அம்முயற்சிக் கேற்றவாறு அதிகமாகவோ குறைவாகவோ பலனாகப் பெறுகிறான். இம்மூன்றும் இன்றியமையாதனவாக மற்றும் இந்திரியங்களால் நுகரப்படும் பொருள்களும் இன்பங்களும் அவனுக்குத் தேவையாகின்றன.

முன்னைய இன்றியமையாதனவற்றை யவன் பெற்றுத் தன்மனம் சந்துஷ்டியான நிலையில் அவன் பிறவின்பங் களைப் பெற முயலுகிறான். இவ்வாறு அவன் முயலும் முயற்சியில் பயிலும் முறையே கலையெனப்படுவது.

தமிழ்நாட்டில் எல்லாக் கலைகளினும் உழவே மிகவும் முக்கியமானது. மனிதன் ஜீவனத்திற்கு உணவினும் முக்கியமான பொருளின்மையால் அவ்வுணவுப்பொருளை விளைவிக்கும் முயற்சியில் அம்மனிதனாற் பயிலப்படுங் கலையாகிய உழவு முதலாவதாகக் கருதப்படுவது தகுதியே. உழவே தான் அரசாட்சியை நிலைநிறுத்துவது என்பது அக்காலத்தவர் கொள்கை. விளைபொருளிலை யாமேல் அதையடியாகக் கொண்டு மேம்பட்ட அரசும், உலகுமில்லையாதல் வெளிப்படை. அதனால் உழவுக் கலை மன்னவன் முதல், சாதாரண மனிதன் வரை எல்லா ராலும், மிகவும் மேம்பாடுடையதென்று ஒரே படித்ததாகப் போற்றப்பட்டு வந்திருக்கின்றது. கம்பன் பாடிய ஏரெழு பதை நீங்கள் ஊன்றிப் படிப்பீர்களானால் உலகமும், நாமும், அரசும், பிறவும் எவ்வாறு உழவர்களின் முயற்சி யாலே நிலை நிறுத்தப்பட்டிருக்கின்ற தென்பதை யுணர லாம்.

புற நானூற்றில் அரசனை நோக்கி "நீ நாற்படையும் மிகுத்தனை, ஆயினும் நின்னுடைய பெருமிதமும், செல் வமும், அரசும், ஆணையும் அப்படையால் வந்தனவென்று தவறாக எண்ணற்க. அவையெல்லாம்,

"..........................................உழுபடை
யூன்று சான் மருங்கினீன்றதன் பயனே"

என்று கூறுகிறார்.

உன்னுடைய வளமெல்லாம் ஏர்ச்சாலின் தொழு முனையீன்றனவே யாகும் என்று இதன் பொருளாகும். அரசனை வாழ்த்து முகமாய்க் கூறுகின்ற ஒளவை "நீ பல்லாண்டு பல்லாண்டாக வாழ்வாயாக" என்று வாழ்த் தினளில்லை. "வரப்புயர" என்று கூறியதாகச் சொல்

லப்படுகின்றது. உழவுத் தொழில் விருத்தியடைந்தாற் றான் அரசு மேம்படும் என்பதனாலே வரப்புயர என்று கூறி அதை நன்கறியாதார்க்கு விரித்துக் கூறுவாளாய்

''வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்''

என அழகாகக் கூறியது உழவின் சிறப்பைப் புலவர் களும், மன்னவர்களும், மற்றையோரும் அத் தொழிலை எவ்வாறு போற்றி வந்தனர் என்பதை நன்கு விளக்கும்.

## அக்கால மன்னவரின் கலைத்திறன்

பண்டைத்தமிழ் நாட்டு வேந்தர்கள் கலைகளின் நுணுக்கங்களை நன்கறிந்தனராய்க் காணப்படுகின்றனர். கலைகள் தாம் தன் நாடு முன்னேறி வளர்வதற்கு இன்றி யமையாத சாதனங்கள் என்பதை அவர் நன்கறிந்திருந் தனர். அக்கலைகள் பல்வேறு வகைப்பட்டதாகலின் நாட் டில் பல்வகைக் குழுவினுள்ளும் அவை பிரிந்து மலிந்து கிடந்தன. எல்லாத் தொழிலிலும் வல்லுனராய் மக்களிருப் பது அரிது. ஆகவே ஒவ்வொரு பகுப்பார் ஒவ்வொரு கலை யைப் பேணியதன் வகைகளை நன்குணர்ந்திருந்தனர். இவ்வாறு பலராலும் பேணிக் காக்கப்படும் கலைகளே தன் நாட்டை மேம்பாடடையச் செய்வது எனவுணர்ந்த மன்னன், அவ்வாறு கலைகளைப் பேணி வளர்க்கும் குடி களைப் போற்றி ஒழுகி வந்தான். ஆகவே அவன் நிழலில் குடிகள் ஒதுங்கி வாழல் வேண்டும் என்னும் சாமானிய நியாயம் நீங்கி மன்னவன் குடிகளின் நிழலில் ஒதுங்குவன் என்று கூறப்படுந்தன்மை தமிழ்நாட்டிலே எங்கும் பரவி யிருந்தது.

''இறைவனேவலால் ஏவ காண்டியால்''

என்றும் கம்பர் கூறியதையுங் கண்டு கொள்க. உயிரானது உடலிற் புகுந்து உடலை நடத்துமாப் போலக் குடிகளின் மொழிகளே அரசனது ஆணையை நடத்தா நின்றது. இதனைத் தயரதனைப்பற்றிக் கூறுமிடத்து ''உயிரெலா முறைவதோ ருடம்புமாயினான்'' என்று குடிமக்கள் எல்லாரும் துய்த்துப் பயனடையும் தேகமாகவே அவ்வரசனைக் கூறுவர். அரசன் குடிமக்களுக்குயிர் என்னும் பான்மை நீங்கிக் குடிகளே வெறுஞ்சடலமாகின்ற அரசர்க்குயிரென்று கம்பர் கூறுமழகைக் கவனியுங்கள். இவ்வாறு அரசன் ஒழுகியமை அவன் குடிமக்களிடம் உள்ள கலைகளைப் போற்றியதனாலே தான்.

அப்படிக் கலைகளைப் போற்றும் அரசன்தான் எல்லாக் கலைகளிலும் வல்லவனாய், தன்னிடம் வரும் கலைஞர்களை அவருடைய கலைகளின் மிகுதிக் கேற்றவாறு சன்மானிப்பான்.

கலைஞர்களின் திறமையின் தார தம்மியமறிந்தே அவன் கொடையளிக்க வேண்டியவனாதல் பற்றி அவன் கலைத்திறம் எல்லாரினும் மேம்பட்டதொன்றாய்த் திகழ்ந்தது. கபிலர்

''ஒரு திசையொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசையறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்!
அது நன்கறிந்தனை யாயின்
பொது நோக்கொழிமதி புலவர்மாட்டே'' (புறம்)

என அவனுக்குபதேசம் செய்கிறார். ''ஏ வள்ளற்றன்மை மிகுந்த தோன்றல்''! ஓரிடத்தேயுள்ள கொடையாளனை நோக்கி நால் திசையிலுமுள்ள கலை வல்லார் பலரும் பரிசில் பெற வருவர். அப்படி வரும் கலைஞர்களுள் தார தம்மியமறிந்து, இவன் கலை மிகுதியுடைவன், இவன்

அவனினும் குறைந்த கலையுடையவன் என்று பேதமறி தல் மிகவும் அரியதான செயலாகும். ஆனால் ஒன்றையும் நோக்காது கேட்போர்க்கெல்லாம் வரைவின்றிக் கொடை கொடுத்தல் மிகவும் எளிது. ''இவ்விரண்டனின் தன்மை களையும் நன்கறிந்து நீ பரிசளிப்பதில் பொது நோக்கை (எல்லாக் கலைஞர்களையும் சமமாக எண்ணுவதை) த்தவிர் வாயாக'' என்பது இதன் பொருள். இவ்வாறு அவர்கூறுவது நமக்கு வியப்பாகத்தோன்றலாம். ஆனால் கலை வல்லுநர் பலரினும் மேம்பாடறியாவிடின் கலை வளர்ச்சி நாளுக்கு நாள் குறைவேயடையுமன்றோ? தன்னினும் தாழ்ந்த கலையறிவுள்ள பரிசிலன் தன்னைப் போலப் பாவிக்கப் படின் இவனுள்ளத்தே மேலும் அக்கலையை விருத்தி செய்வதிலுள்ள ஊக்கம் திட்டமாய்க்குறைபடும். அவ்வாறு பரிசு கொடுப்பதில் அரசன் பொதுநோக்குடையவனாயின் கலை செழித்தோங்காது, என்று குறிப்பதற்கே கபிலர் இச்செய்யுளைப் பாடினர். இச்சிறந்த அடிகளை மனதிற் கொண்டே,

''பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
அது நோக்கி வாழ்வார் பலர்.'' (குறள்—527)

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவர் கூறினார். இவ் வாறு தாரதம்மியமறிந்து கலை வல்லார்க்கு அவரவர் தகுதிக்கேற்பப் பரிசளித்ததைச் செங்குட்டுவன் நீலகிரி மலையையடைந்த காலத்து எடுத்துக் கூறும் வரிகளி னின்றும் புலனாகின்றது.

வேளார்—குயவர்:- நம் நாட்டில் அவ்வாறு வளர்ந்த சில கலைகளின் நயங்களைக் கூறுகின்றேன். குயவர் என்று சாதாரணமாய் வழங்கப்படும் வேளார் அல்லது வேளிர் என்னுங் குலத்தவரை எல்லார்க்குந் தெரியும். ஆதிகாலம் முதல் தமிழ்நாட்டில் இவ்வேளிர் குலம் ஒரு தனிக்குலமாய் மற்றையோருடன் கலப்பின்றியிருந்து வந்திருக்கின்றது. இவர்களது தொழில் மட்குடம் மட் பாத்திரங்கள் முதலியவற்றைக்களிமண்ணினின்றும் அழகு

பெறவனைதலாகும். இது ஒரு பெரிய கலையாகும். பல விடங்களிலும் சங்கச் செய்யுட்களில் இக்கலை போற்றப் பட்டிருக்கின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இக்கலை ஒரு குழுவினர்க்குள்ளேயே அவர்க்கே தொன்று தொட்டு உரியதாய்க் காணப்படுகிறது. பண்டைக் காலந் தொடங் கியின்று வரையும் வேறு குலத்துள்ளார் இக்கலையைப் பயின்றனர் என்றாவது அல்லது பயிலுகின்றனரென்றா வது நான் கேட்டதில்லை. இவர்களைப் பற்றிக் கூறும் போதெல்லாம் சங்கச் செய்யுட்கள் வேளார் வேளார் வேட்பார் என்றே இவரை யழைக்கின்றன.

இவருடைய கொள்கைகள் மிகவும் புராதனமானது. தமிழ்நாட்டிலும் ஆரிய நாட்டிலும் இவர்கள் மிகவும் முக்கியமாகவே கருதப்பட்டு வந்துள்ளனர்.

யாகம் வளர்க்கையில் யாக சாலையிற் செய்யப் பட வேண்டிய சடங்குகளில் இவர்களாற் செய்யப் படவேண் டியதென்று ஒரு சந்தர்ப்பங் காணப்படுகின்றது. அவ்வாறு வேள்வியில் ஒரு சடங்கைச் செய்பவர் என்னுங் காரணம் பற்றியே இவர்கட்கு "வேட்பார்" என்று பெயர் கொடுக் கப்பட்டதோ என்று சங்கிக்க இடமுண்டு. ஆனால் எகிப்து பாஷையில் "வேள்" என்னும் பதத்திற்கு "Pot" பானை என்று பொருள் கூறப்படுகின்றது. இதையும் முன்னமே ஆப்பிரிக்க பாஷைகளுக்கும், தமிழ் பாஷைக்கும் அதிக சம்பந்தமிருக்கின்றதென்று முன்னே நான் கூறியவற்றை யும் கொண்டு சேர்த்து நோக்குமிடத்து "வேள்" என்றால் பானை என்று முன்னம் பொருளிருந்திருக்குமோவென்று தோன்றுகிறது. இதனைத் தமிழ் மொழிவல்ல இளை ஞர்கள் நன்கு ஆராய்வார்களாக!

மேற்கூறிய வேட்பாரிடம் நாம் பண்டைத்தமிழ் வழக்கமின்றி ஆரிய வழக்கத்தையே இன்னுங் காண் கிறோம். பண்டைக்காலத்தே இவ்வேட்பார் ஆரியத் திலும் அதிக பாண்டித்தியமுடையாராயிருந்திருக்

கின்றனர். இதை விளக்க ஒரு கதை உண்டு. அதைக் கூறுகிறேன்.

மதுரையின் தெற்கு வாயிலில் பட்டி மண்டபமென்றொரு மண்டபமிருந்ததாகக் கூறப்படுகின்றது. அப்பட்டி மண்டபம் அறிவுடையோர் கூடி ஆராயும் இடமாகத் திகழ்ந்தது. அம்மண்டபமேறுதல் ஓர் பெரிய அறிவுடையார்க்கேயுரித்து. இதனை

''பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
யெட்டினோடு மிரண்டறியேனையே''

என்று மாணிக்க வாசகர் பாராட்டுதலினின்றும் நன்கறியலாம்.

அக்காலை மதுரையிலே உள்ள குயக்கொண்டான் என்பானோர் வேட்பான் ஆரியத்தில் வல்லுநனாயிருந்தான். அவன் ஒரு நாள் பட்டி மண்டபமேறி ஆரியம் நன்று தமிழ்தீது என வுரைத்தனன். இது கேட்டு சீற்றமடைந்து,

முரணில் பொதியில் முதற்புத்தேள்வாழி
பரணக் கபிலரும் வாழி—அரணிலா
ஆனந்த வேடகையான் வேட்கோக்குயக்
கொண்டான்
ஆனந்தஞ் சேர்க சுவாகா

என்று பாடவும் அக்குயக் கொண்டானிறந்துபட்டானாகப் பின்னால் அவன் பாலிரங்கிப் பின்னால் நக்கீரர்

ஆரிய நன்று தமிழ்தீதென வுரைத்த
காரியத்தாற் காலக்கோட்பட்டானை—சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையால்
செந்தமிழே தீர்க்க சுவாகா

என்று பாடியவனை யுயிர்ப்பித்தாரென்று கூறப்படுகின்றது.

இவ்வேட்பாரின் கலைத்திறனை வியந்து பண்டைப் புலவர்கள் பாடிய பாடல்கள் சங்க கால விலக்கியங்களிலே மலிந்து கிடக்கின்றன. அவற்றிற் சிலவற்றைக் கூறுகின் றேன். கோவூர்கிழார் என்னும் புலவர் நலங்கிள்ளி என்னும் மன்னவனைப் பற்றிப் பாடியதாக ஒரு பாடல் காணப்படுகின்றது. அது வருமாறு:

"............நன்மதி
வேட்கோச்சிறார் தேர்க்கால் வைத்த
பசுமட்குரூஉத்திரள் போலவவன்
கொண்ட குடுமித்தித்தண் பணை நாடே"
(புறம் 32)

இது நன்றாக கலைத்திறன் வல்ல வேளிச்சிறுவர்கள் குடத்தில் வைத்து தங்கள் மனத்திற்றோன்றியவாறு உருவஞ்செய்யும் மண்திரளை யொப்ப நீ நினைத்த வழி யொழுகுவதாகுமிவ்வுலகு எனப் பொருள்படும்.

இதனால் அக்குடிச் சிறுவர்களும் அக்கலையில் வல்லவர் களாயிருந்தனர் என்பது பெறப்படும். ஆகவே அக்கலை பரம்பரை வழக்க க அக்குடியிலேயே பயிலப்பட்டு வந்தி ருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அக்குலச் சிறுவர்க்கு இயற்கையிலே அக்கலை வல்லமையுண்டா யிருக்கின்றது என்று புலப்படும். ஓரரசன் வழியொழுகும் குடிக்கு குயச்சிறுவர் கைவழிப்படுகின்ற மண்ணையுவமை கூறியதனால் அக்கலைக்கு அக்காலப்புலவர்கள் கொடுத் திருந்த ஏற்றம் விளங்குகின்றதை நோக்குங்கள்.

இம்மாதிரி மண்குடம் முதலிய செய்தலிலேயே அவர் அக்குடத்தைச் சித்திர வேலைப் பாடுகளமையச் செய்வர். பல்வகை வர்ணங்களுங் கொண்டு அவற்றில் தீட்டுவர். இந்த மாதிரியவர்கள் அமைப்பதை

"எழிலையாழ் செய்கைப் பசுங்கலார்"

என அழகுற உரைப்பர்.

## தமிழரின் மானம்

மானம் என்னும் ஒழுக்கம் எல்லா ஒழுக்கங்களையும் தன்னிடத்தே அடக்கிக் கொண்டது. எல்லாவற்றினும் மேம்பட்டு விளங்குகின்றது. அதை அக்காலத்து அறிஞர்கள் போற்றி வந்தமை மிகவும் அழகியதாகும். ஒருகாலை சோழன் சபைக்கு சடையப்ப வள்ளல் வந்தனர். அன்று அவர் அரையில் ஆயிரம் பொன் பெறும் பட்டொன்றை யணிந்திருந்தனர். அவர் துடையில் ஓர் சிலந்தி புறப்பட்டு வெகு காலமாய் அவருக்குக் கஷ்ட மளித்து வந்தது. அதைப்பற்றி யவைக்களத்தேயுள்ள நண்பர் ஒருவர் அது எவ்வளவிலிருக்கின்றதென்று சடையனை விசாரித்தனர். சடையன் அவருக்கு அச்சிலந்தியைக்காட்டவுன்னி, பல்லோர் குழுவியிருக்குஞ்சபையில் வஸ்திரத்தை துடை வரையுயர்த்துவது அழகில்லையாதலால், தன்னரையில் உடுத்தியிருப்பது ஆயிரம் பொன் பெறுமான உடையாயினும், மானமே பெரிதெனவுன்னி அச்சிலந்தியிருந்த விடத்திற்கு நேராக அப்பட்டைக்கிழித்துச்சிலந்தியை நண்பர்க்குக் காட்டினர். இதைப்புகழ்ந்து

> "துடையினெழு சிலந்தி தோற்று விக்கப்பட்டின்
> புடைவை கிழித்த பெருங்கை"

எனக் கூறியுள்ளமை உணர்ந்து இன்புறத்தக்கதாம்.

**நூல் நூற்றல்- நெசவு**

இவ்வாறு மானம் பெரிதென வாழ்ந்த தமிழ்மக்கள் அதற்கு இன்றியமையாத சாதனமான ஆடைகள் நெய்த் திலும் ஆடைக்கு வேண்டிய நூல் நூற்பதிலும் மிகவும் தேர்ந்தவர்களாக விளங்கினர். அத்தகைய ஆடைகள் பட்டினாலும், நூலினாலும், எலிமயிரினாலும் செய்யப் பட்டன.

> "பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
> கட்டிய நுண் வினைக் காருகரிக்கையும்"

எனப் புகழ்ந்துரைப்பர் இளங்கோவடிகள்.

இக்காருகர் என்னும் சப்தம் க்ருஹம் என்னும் வட மொழிப் பெயரின் அடியாய்த் தோன்றி எப்போதும் வீட்டி லேயுள்ளவர் என்று பெண்களைக் குறிக்குமோ என்று சங்கிக்க இடமுண்டு. ஆண்மக்கள் வெளிச்சென்று தொழில் செய்வாராக பெண்டிர் அக்காலங்களில் வீட்டில் வீண் பொழுது போக்காது நூல்நூற்றல், நெய்தல் முதலியன செய்து வந்தனர் போலும்! இவ்வாறு இவர் வீட்டிலே இழைநூற்கும் தொழில் செய்வரென்பது பற்றியே பொதுவாகப் பெண்டிர்க்கு "சேயிழை" என்னும் பெயரெழுந்திருக்குமோ என்று நான் எண்ணுகிறேன். நற்றிணைப் பாடலொன்றில்,

> "ஆளில் பெண்டிர் தாளிற்றந்த
> நுணங்கு நூல் ......... "

என்று கபிலர் கூறுவதனின்றும் கைம்பெண்கள் எப்போதும் முயன்று நூல் நூற்று வந்தனர் என்று தோன்றுகிறது.

இவ்வாறு ஸ்திரீகள் நூற்ற நூல்கள் அதிக மென்மை யாயுள்ள தென்பது "நுணங்கு நூல்" என்னும் பதத்தி னின்றும் விளங்கும். அத்தகைய மெல்லிய நூலாற் செய்யப்பட்ட ஆடைகளும் மிகவும் மெல்லியதாயும், வேலைப்பாடுகள் மிகுந்தனவாயும் இருக்குமென்பது "பட்டினும்மயிரினும்" என்று மேலே நான் கூறிய அடிகளி லுள்ள "நுண்வினை" என்னும் பதங்களால் விளங்கு கின்றது. இப்படி வீட்டிலுள்ள கைம்பெண்களாலும் மற்றைய மங்கையராலும் முயன்று நூற்கப்பட்ட அம் மெல்லிய நூலினாற் செய்த ஆடைகளையே அக்காலத் தவர் அணிந்து வந்தனர் என்பது நன்கு விளங்குகின்றது. தம் பெண்டிரால் நெய்யப்பட்ட ஆடையே ஆடவற்கு வீரமூட்டுவதாய் விளங்கி வந்தது. இப்போது நூலில்தான் சுவதந்தர மிருக்கின்றது என்று கூறும் பெரியாரை நாம் நேரிலேயே தரிசிக்கவில்லையா! இவ்வாறு சங்க நூல் களில் காணப்படும் குறிப்புகள் நம்நாட்டுப் பெண்மணிகள் நன்கு கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

பட்டு நூல் மிகவும் சேகரிக்கப்பட்டு, அப்பட்டு நெசவு மிகுதியுமிருந்ததாகக் காணப்படுகின்றது. அக்காலை இளங்கோ பாடிய படியே இன்றும் பட்டு நூல் நெசவுக் காரர்கள் மதுரையிலே மிகுதியும் வதிவதை நாம் காண் கிறோம். மயிர்க்கம்பளங்கள் நெய்யப்பட்டு வந்தன வென்பதும் அதனாற் சட்டைகள் நெய்யப்படும் என்பதும்

''துதிமயிர்த் துகிற் குப்பாயம்'' (சீவக 819)

என்று கூறும் சிந்தாமணிச் செய்யுளினின்றும் நன்கு புலனாகிறது.

**இசை-சங்கீதம்**

கவி ரவீந்திரர்தம்முடைய கீதாஞ்சலியில்''உலகெலாம்'' சங்கீதம்'' என்று கூறினார். அப்புலவரின் வாக்கிலுள்ள சீரிய பொருளை உலகம் போற்றிப் புகழ்கின்றது. இதன் உண்மையையே பதினொன்றாந் திருமுறையில்

''பாரெல்லாம் பண்ணாகச் செய்த பரஞ்சோதி''

என்று இறைவனை விளிக்கின்றார். இங்கு ஏழு ஸ்வரங் களும் ஏழுலகையும் குறிப்பதன் நயத்தை யூன்றி நோக் குங்கள்.

பண்டைத்தமிழ்க் காலந் தொடங்கி, தமிழ் மக்களி டையே புலவர்கள், பாமரர்கள் என்னும் வித்தியாச மின்றி அவர்கள் மனவெழுச்சி தோன்றப்பாடியவை யாவும் இசையாகவே யெழுந்திருக்கின்றன. பரிபாடல் பாடல்களுக்கே ஒருவர் இசை வகுக்கலாமென்று இசை வகுத்துக் காட்டியிருக்கின்றாரென்னில் மற்றப்பாக் களைப் பற்றியுரைப்பானேன்? புலவர்கள் பாடல்கள் ஒரு புறமிருக்க, சாதாரணமாய்ப் பாமர ஜனங்கள் பொழுது போக்காகப் பாடுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். அவற் றின் அழகும், சுவையும், இசையும் எவ்வளவு இன்பம் பயக்கின்றது என்பதற்கு ஓர் உதாரணம் தருகிறேன். பிச்சைக்காரி ஒருத்தி அரிச்சந்திரன் கதை சொல்லு மிடத்து சந்திரமதி காலகண்டையர் வீட்டில் நலிந்து

வேலை செய்வதற்கிரங்கிப் பாடுவதாகும் பின்வரும் அடிகள்

''சந்தனமளைந்த கையால் சாணியள்ளக்
காரணமோ
குங்குமம் அளைந்த கையால் குப்பையள்ளக்
காரணமோ
பூ முடிக்கும் கொண்டையிலே புல்லெடுக்கக்
காரணமோ''

இவ்வடிகளைப் பாடியது இலக்கணம் வல்லபண்டைத் தமிழ்ப்புலவரல்லர். நம் நாட்டுப் பாமரமக்களே. இதன் பொருள் தெளிவாகவே இருக்கின்றது. ஆனால் ஒவ்வோரடியிலும் உள்ள விரோதாலங்காரத்தின் நயத்தை உய்த்துணரத்தான் முடியுமே யொழிய வாயாற் கூறமுடியாததாகும். சந்தனத்தை அலக்ஷ்யமாய் அளைந்த நின் கைகள் இப்போதுசாணியையும்அருமையாய்எண்ணிஅள்ள வேண்டிய காரணமேதோ,என்னுமிடத்தில் அப்பாட்டைப் பாடியவள் நேரில் பாடுவதை என்னைப்போல் நீங்களும் கேட்பீர்களேயானால் கேட்ட அவ்விடத்திலேயே உங்கள் கண்கள் தானாகவே கண்ணீர் சொரியும். அவள் அத்தகைய இசையுடனும் அபிநயத்துடனும் பாடுகையில் அவள் மனதும் கரையும். இப்பாடலின் ஓசை நயம் இசையுடன் பாடவல்லார்க்கு மிகவும் இன்பம் பயப்பதாகும்.

பட்டினத்தார் ஓருரிற் சென்று கொண்டிருந்தார். அப்போது ஓரிடத்தில் அழுகுரல் கிளம்பியது. அவர் அங்குச் சென்று விசாரிக்க ஓர் அழகிய வாலிபன் தன்னிளம் மனைவியும் தாயும், மாமியும் கதறி வருந்த உயிர் நீத்தனன் என அறிந்தனர். அவர் மனத்தே எழுந்த கருணையின் வெள்ளம் பொங்கியோர் இசைப்பாடலாக வெளிவந்தது. அது வருமாறு:

''வடிவந்தானும் வாலிபம், மகளுந்தாயு மாமியும்
படிகொண்டாடு நாளிலே பழிகொண்டோட
னீதியோ!

குடிவந்தானு மேழையோ குய வன்றானுங்
கூழையோ
நடுநின்றானு மில்லையோ நகரம் சூறையானதே''

இறந்துபட்டவன் அழகுமிக்க வாலிபன். அவற்கிரங்கி அழுவார் அவன் மனைவியும், தாயும், மாமியும் இவ்வுலகம் போற்ற வாழவேண்டிய பருவத்திலே இவ்வாறு இம்மூவர் பழியையும் கொட்டிக்கொண்டு போகல் நீதியாகுமா? இவளை (மனைவி) மணக்க வந்தவன் அற்பாயுசுள்ளவனாகவா விருக்கவேண்டும்! இவனைப் படைத்த குயவன் என்ன கூழைக்கையனா? இல்லாவிடில் இவன் ஆயுளையேனவன் குறைக்கவேண்டும்? இவ்வளவும் போகட்டுமென்றாலும் எல்லாவற்றையும் நடுநின்று காண்பானோரிறைவனுமில்லை யாகினானா? ஐயோ! இந்நகர முழுவதும் சூறையிடப்பட்டாற் போற்றோன்றுகிறதே! என்று இரங்கிப்பாடலும் அவ்வாலிபன் உயிர்த்தெழுந்தானென்று கூறப்படுகின்றது. இப்பாடலின் ஓசை இசைக்கு எத்துணைப் பொருத்தமுடையதென்று கவனியுங்கள். அதன் பொருணயமும், இரக்கச் சுவையும் ஒவ்வோரடியிலும் ஒவ்வொரு பதத்திலும் நிறைந்து கிடப்பதை எவ்வாறு முழுதும் எடுத்துக்கூற முடியும்! இவ்வாறு எப்பாடல் பாடினும் இசைபெறப் பாடுதலே அக்கால மரபாகக் காணப்படுகின்றது. இசையின் நுணுக்கங்களை அக்காலத்தவர் நன்கறிந்திருந்தனரென்பது சிலப்பதிகாரம் முதலிய சங்கச் செய்யுட்களினின்றும் நன்கு விளங்குகின்றது.

### உருவமைத்தல்:

பரிபாடல் என்னும் சங்க காலத்து நூல் சித்திர நிலை மண்டபம் என்று ஒரு மண்டபம் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அம்மண்டபத்தில் வர்ணங்கொண்டு தீட்டிய பல்வகைச் சித்திரங்கள் எழுதப் பெற்றிருந்தன. சுதையினா

லாகிய பல்வகையுருவங்கள் ஆங்கே திகழ்ந்தன வென்பதை,

> ''வானவர்முதலா எவ்வகை யுயிரும் உவமங்காட்டிய
> வெண் சுதை விளக்கத்து''

என வரும் அடிகளால் காண்க. இதில் உருவமமைப்பர். அவ்வுருவங்கள் நாம் கண்ணிற் காணும் மனிதனின் தேக மட்டுமன்று. கண்ணிற்றோன்றா வானவர் உருவத்தையும் அமைக்க வல்லவர். இதனால் அவருடைய ஊக சக்தி எத்துணைத்து என்பது விளங்கும்.

அத்தகைய உருவங்களை உயிருவகத்தோடும் அமைப்பர். அச்சிலைகட்கும் அச்சிலையாற் குறிக்கப்படு வாற்கும் பேதம் தோன்றாதபடி அத்துணை தோற்ற ஒற்றுமை காணப்படுமென்று காட்டுகின்றது. 'உயிரும் உவமங்காட்டி' என்னும் அடி. அவ்வாறு செய்வதிலும் ஓருயிரை உவமங்காட்டி மற்றும் சிலவற்றை உவமங் காட்ட முடியாது திகைப்பவரல்லர் நம் தமிழ்ச் சிற்பிகள் எனக் குறிப்பதாகும் 'எல்லாவுயிரும்' என்னும் பதம்.

இத்தகைய கலைகள்—வேட்பார், நூல்நூற்பார், ஆடையைப் பட்டினும் மயிரினும் நூலினும் நெய்வார், சித்திரம் வல்லுனர் சிற்பிகள், இசைக்காரர் இவர் களுடைய கலைகளெல்லாம் நிலைபெற்று விளங்கியது, அக்கால அரசர்தம் ஊக்கத்தாலும் அவர்கள் அக்கலை களையும் கலைவல்லாரையும் போற்றியதாலுமே யாகும்.

இவ்வாறு வேந்தர்கள் கலைகளைப் போற்றி வருவது இயற்கையென்பது சீனதேசத்து ஆதிசக்கரவர்த்திகள் என்னும் நூலில் காணப்படுகின்றது.

## தமிழரின் குடும்ப வாழ்க்கை

மக்கள் இவ்வுலகிற் பிறக்கும்போதே ஒரு வகைக் கடனுடனேயே பிறக்கின்றனர். இதனை வடநூலார்

ரிணம் என்று கூறுவர். இத்தகைய கடனைக் கழித்தே தீரவேண்டும் என்பது முன்னோர் கொள்கை. அக் கடன்கள் மூவகைப்படும். பிதிர், முனி, தேவரினங்கள் என்று அவை கூறப்படும். இம்மூன்றுடன் உலகத்திற்கும் தனக்கும் அவன் செலுத்தவேண்டிய கடன்களிரண்டுள வெனக்கூட்டி அக்கடன்களை ஐவகைப்படுத்திக் கூறு வாருமுளர். இவற்றில் பிதிர்க்கடன் அவற்குத் தருப்பணம் முதலிய செய்தலானும், குடும்பத்தை அபிவிருத்திபண்ணுவ தானும் கழிவுறுகின்றது. முனிரிணம் அறிவுடையோனாய் அக்கல்வியறிவை வளர்ப்பதனால் கழிக்கப்படும். தேவ ரிணம் யாக முதலியவற்றால் தீர்க்கப்படும். உலகுக்குரிய கடன்தான் பிறர்பால்அஃபுபூண்டொழுகுதனாற்வழியும். தனக்குரிய கடனாவது இவ்வுடல் நிலையாகாததாயினும் உயிரிருந்து தன் கருமங்களை யனுபவிக்கின்றதாகலின் அதனைப் பேணியிருத்தல். இவற்றுள் கல்வியைப் பண்டையோர் கடனாகவே கருதியிருந்தனர் என்பது நோக்கத் தக்கதாகும்.

இவ்வகை (மூவகை)க் கடன்களையும் ஒருவன் தன் குடும்ப வாழ்க்கையில் செலுத்தியே தீரவேண்டும். வட நூலார், ஒருவன் வாழ்க்கையை பிரவிருத்தி நிவிருத்தி மார்க்கங்களென இருவகைப்படுத்திக் கூறுவர். இவை முறையே இல்லறத்தினும், துறவறத்தினுங் காணப் படும். இவ்விரண்டிற்கும் அடிப்படையாயுள்ளது அன் பாகும். பிரவிருத்தி மார்க்கத்தில் அன்பில் தொடங்கியது நிவிருத்தியில் அருளில் முடிகின்றது. இல்லறத்தை

''அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக் கூட்டம்'' என்றும், துறவை

''அருள்வழிப் புணர்ந்த அகற்சி'' எனவும் கூறுவர், ஆசிரியர் தொல்காப்பியர்.

வடமொழியாளர் கூறும் இரு மார்க்கங்கள் போன்றே ஆசிரியர் தமிழுக்கும் இருவகை மார்க்கம் கூறினார். அன்புடன் கூடிய வாழ்க்கையே குடும்ப வாழ்க்கையாகும். அவ் வாழ்க்கை யன்பேயடியாகப் பிறந்து, அன்பே துய்க்கும் பயனாகவுடையதாய்த் திகழ்வதாகும். இதனால் அறமென்னையென்று வினவலாம். அன்பின் வழிப்பட்ட இல்வாழ்க்கையிலே தான் துறவு ஏற்படும் என்பது தமிழர் கொள்கை. இக்கொள்கை வடமொழியார்க்கும் பிரவிருத்தி நிவிருத்தி மார்க்கத்தினும் மேம்பாடுடையதாகும். எவ்வாறு இல்வாழ்விற் றுறவு பிறக்கும்?

ஒருவன் உண்ண வேண்டிய அளவு விதிக்குங் காலை யதிக்கு எட்டுக் கவளமும், வானப்பிரஸ்தனுக்கு பதினாறு கவளமும், கிரகஸ்தனுக்கு முப்பத்திரண்டு கவளமும் விதிப்பர் பண்டையோர். ஆனால் அவர்கள்

''மாணிக்களவில்லை மற்று''

எனப் பிரமசாரிக்கு உணவெல்லையில்லை யென்று கூறினார். அப்பிரமசாரி விவாகஞ் செய்து கொள்ளின் அவனது உணவுக்கு அளவு விதிக்கப்படுகின்றது. இது அவன் தான் தன்னுடைய ஸ்வதந்திரத்தில் சிறிது விட்டுக் கொடுத்து, தன்பால் தான் கொண்டிருந்த அன்பினளவில் ஒரு பாகத்தைத் தான் மணக்கும் மனைவியின்பால் செலுத்தக் கடமைப்படுகின்றமையைக் குறிப்பிக்கின்றது. பிறருடைய நலத்திற்காகத்தான் சிறிது கஷ்டமனுபவிக்க வேண்டியவனாகிறான்.

இவ்வாறு தன் மனைவியின்பால் அவன் செலுத்தும் அன்பானது நாளடைவில் வளர வளர அவன் தன் பால் தான் வைத்த அன்பு குறைந்து கொண்டேவரும். கடைசியில் அம் மனைவி பால் வைத்த அன்பின் காரணமாகத் தான் தன்னையும் துறக்குந் தன்மையை எய்துகிறான். ''அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு'' என்று வள்ளுவர்

பொதுப்படக் கூறினர். கம்பர் மேலே நான் கூறிய மனைவி மாட்டுள்ள அன்பைக் கூறுவதைக் காண்க.

''தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற்றன்றே.'' இவ்வாறு தன்னைத் துறத்தலாகிய தன்மையைக் காமத்திலே அடைந்தவன் பின்னர் தன்னையும், மனைவியையும், மற்றுமுயிர்களையும் படைத்த இறைவன் மாட்டு அன்பு செலுத்தும் காலத்தே தன்னையும் மற்றவற்றையும் முற்றத்துறக்கும் மனவலிமையுடையவனாகிறான். நால்வகைப் புருஷார்த்தங்களிலும் ''பின்னையது பின்னைப் பெயர்தரும்'' என்பது தொன்னெறியாகும். ஆகவே இல்லறத்தே நாம் வளர்க்கும் அன்பானது இறைவனையடையும் நிவிருத்தி மார்க்கத்திற்கு வழியாகின்றது. இதனாலேயே இல்லறத்தையன்பின் வழிநிலையென்று கூறினார், தொல்காப்பியர். துறவறம் அருள் வழியாகும். அருள் வழிக்கு அன்பின் வழிதான் சாதனமாகும். அன்பு பற்றாத வழியருள் பிறத்தல் சாத்தியமில்லை.

''அருளென்னும் அன்பீன்குழவி'' என்று திருவள்ளுவர் அருளை அன்பு ஈன்றெடுக்கும் குழவியெனக் கூறுவர். இதனால் தாயான அன்பு இல்லாத வழிக் குழவியான அருள் பிறத்தல் சாத்தியமில்லை யென்பது நன்கு விளங்கும். ஆகவே அத்தகைய அருளையீனும் அன்பு வழியை வளர்க்கும் துறையான் இல்லறத்தின் மாண்பு அறியப்படும்.

தமிழர் கணவனும் மனைவியும் உடலிரண்டாயினும் உயிரொன்றே யுடையார் எனக் கொண்டவர்களாவர். மக்கள் மட்டுமேயன்றி ஆண் பெண் எனவுள்ள எல்லாச் சீவன்களிலுமே இத்தகைய பான்மையிலிருந்து வந்தது என்பது அவருடைய சீரிய கொள்கையாகும். கொள்கையினை விளக்குஞ் செய்யுட்கள் சங்க நூல்களிலுள. அவற்றில் சிலவற்றைக் கூறுகின்றேன்.

தலைவன் பொருளீட்டல் காரணமாகத் தலைவியைப் பிரிகின்றான். அவன் தன்னைப் பிரிந்து செல்லும் வழி இத்தன்மைத்தென்று தலைவி தோழிக்குக் கூறியதாக ஓர் செய்யுள் காணப்படுகின்றது.

> ''சுனைவாய்ச் சிறுநீரை எய்தா தென்றெண்ணிப்
> பிணைமா னினிதுண்ண வேண்டிக்-கலைமாத்தன்
> கள்ளத்தி னூச்சுஞ் சுரமென்ப காதலர்தம்
> உள்ளம் படர்ந்த நெறி'' (ஐந்திணை ஐம்பது)

சுனையிலுள்ள அற்ப நீரை யிருவருமுண்ணப் போதா தென்றெண்ணி, பிணைமான் நன்கருந்த வேண்டிக் கலைமான் தானுங்குடிப்பது போலப் பொய்யுறிஞ் சுறிஞ்சும் பாலைவனமாகும் என் காதலர் மனங்கொண்டு போந்த நெறி என்பது பொருள். இப்பாடலைக் கூர்ந்து நோக்கல் வேண்டும். கலைமான் தாகந்தீர வுண்ண வேண்டுமென்று நினைக்கின்றது. ஆனால், அப் பிணையோ கலையும் உண்டாலொழியத் தான் உண் ணாது. சுனையிலுள்ள நீரோ இரண்டிற்கும் போதாது. எனவே கலையானது, எப்படியாவது பிணையுண்ண வேண்டுமென வுன்னி நீரில் வாய் வைத்துத் தானும் குடிப்பது போலப் பாசாங்கு செய்து, பொய்யுறிஞ்சு உறிஞ்சுகின்றது. தன் தாகம் அடங்காவிடினும், பிணை வருந்தாது இருப்பின் அதற்குப் போதும். தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற்றன்றே என்று கம்பர் கூறியதாக மேலே சொன்னது இங்கு எவ்வாறு விலங் கினங்கட்கும் பொருந்துகின்றது என்பதைக் கவனிக்க வேண்டும். ஈண்டுக் காமம் என்றது பொதுப்பட அவ் வன்பைக் குறிப்பதாகும்.

இங்கு கலைமானுக்குக் கூறியது போலவே கலித் தொகையில் பாலைக்கலியில் ''துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப் பிடியூட்டிப் பின்னுண்ணுங் களி

றெனவு முரைத்தனரே'' என கன்றுகளால் கலக்குண்ட சிறிதாகிய நீரை முதலில் பிடிக்கருத்திப் பின்னரே களிறு தான் உண்ணும் என்றும்

''அன்பு கொள் மடப்பெடை யசைஇய் வருத்தத்தை
மென்சிறகாலாற்றும் புறவெனவு முரைத்தனரே''
(கலித்தொகை)

எனப் பாலைவனத்தின் வெம்மை பொறாது வருந்தும் பேடையினுடைய களைப்பைத் தன் மெல்லிய சிறகுகளை வீசிப் புறாக்கள் சாந்தி செய்யும் எனவும் கூறப்படுதல் காண்க. இவற்றிலெல்லாம் தான் வருந்தியேனும் தன் காதலி வாழச் செய்வதே இல்வாழ்வார்க்குக் கடனென்பது நன்கு தெரிகின்றது. இத்தகைய அன்பே தமிழ்நாட்டுக் கணவன், மனைவியர்க்குள் நிலவி வந்தது. தானுண்ணா விடில் பிணை யுண்ணாதென்று கலைமான் தெரிந்து, கள்ளத் தானூச்சுமென்பது "கொழுநனுண்ட பின் தானுண் கொள்கையே" பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையென்ற தமிழர் கொள்கையை விளக்கி நிற்கும்.

அவ்வாறு, ஒத்த அன்பினராயிருந்தாலும் தலைவன் வீரனாயில்லாத வழி தலைவி நாணுதல் மரபாகக் காணப் படுகின்றது. தலைவனும் எது செய்யினும் தன் அன்புடைக் காதலி தன்னை நோக்கி நாணும் முறைமை யில் வீரமற்றவனாக நடந்து கொள்ளான். இத்தகைய வொழுக்கம், விலங்குகளிடையேயும் முன் கூறியது போல வுண்டென்பது தமிழர் கொள்கை.

''கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்— பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார் தோட்கிள்ளி களிறு.(முத்தொள்ளாயிரம்)

மதிலிலே குத்தியதனால் முறிவுண்ட கொம்புடனும், பகையரசன் முடியுராய்ந்து அதனால் தேய்ந்த நகத் தையும் பிடிகண்டு ஏளனம் செய்யுமென்று நாணிக்களிறு புறங்கடைவாயில் நிற்கும் எனவும்,

''புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சரமெல்லாம் புறக்கொடுத்தனவே.''

என்றும், தங்கள் மெலிவு கண்டு பிடிகள் நாணி நிற்கும் படி களிறுகள் புறங் கொடுத்தோடின என்றும், கூறு வதனின்று வீரமும் வலியுமற்ற துணையைக் கண்டு பெட்டை நாணும் என்பது விளங்குகின்றது. விலங்கினங் களே இவ்வாறாயின் மக்கள்பால் இதன் தன்மை கூற வேண்டாதாயிற்று.

மேலே கூறிய, கணவனுக்கும், மனைவிக்கும் உள்ள அன்பு தங்களைப் போல, விலங்கினங்களிடையேயும், பறவைகளிடையேயும் தமிழறிஞர்கள் கண்டு போற்றிய அன்பானது ஓர் கட்டுப்பாட்டிலடங்கிற்றோன்றுவதன்று. அது தானே, இயற்கையாய்த் தோற்றுவதாகும். இவ்வழி தான் அவ்வன்பு பிறக்கும், இன்ன பொழுது தான் பிறக்குமென்னும் நியமமில்லை. அவ்வாறு இயற்கை யாகவே, அன்பு தோன்றுதல்- அவரவர் பூஜாபலனாகும்.

''விதியினாற் பெடை மணக்கும் மென்னடைய
வன்னங்காள்!''

என்று கூறினார் நம்மாழ்வார். தானே பல்காற் பயின்று கண்ட அன்பின்றித் தானேபுண்ணியவசத்தாற்றோன்றிய அன்பென்றே பொருள்படும். இத்தகைய அன்பே என்றும் ஒரேபடித்தாய்க் குறைவின்றி நிலைபெற்று நிற்பதாகும். இடையே பிரிவு ஏற்படினும் மறுபிறப்பிலேனும் அவ்வன்பை நன்கு அனுபவித்துத் துய்க்க வேண்டு மென்னும் ஒரு பேரவாவைப் பிரிவுற்றார் பாற்றோற்று விக்கும்.

தமிழர் கூறிய முறையெல்லாம் ஒருவற்கு இவ்வாறு தலையாய அன்பு தோன்றிய காலை அதை நல்வழிச் செலுத்தும் மார்க்கமேயாகும். அன்பு தோன்றிய காலை, அவ்வெள்ளம் கரை புரண்டோட அதை எப்படிச்

செலுத்தின், அது இல்லற தர்மத்தின் நோக்காகிய நிவிருத்தி மார்க்கத்திற்றம்மையடைவிக்குமென்பதேயாம். இம்முறையைக் கையாளும் தன்மையுளதாகவே மக்கள் அன்பு செலுத்தும் முறைக்கும், விலங்கினங்கள் அவ்வன்பைச் செலுத்து முறைக்கும் உள்ள பேதமாகும். இஃதின்றேல் மக்களதன்பும் விலங்குகளினன்பும் ஒரே தன்மையுடையன வாகும். இதை நோக்கியே,

"வேட்குழியெல்லாம் விளங்கிற் செலா அது
மனம் நாட்டும் வழி மணம் நாட்டினர்."

(பாரிவெண்பா)

என்று கூறப்பட்டது. கரை புரண்டோடும் அன்பு வெள்ளத்தை விலங்கினங்களைப் போன்று செலுத்தாது, நல்வழி யுய்க்கும் முறையானே மணம் என்னும் வாய்க்காலிற் பாய்ந்து ஒரு வழியே யவ்வன்பு பாயு மாயின், அவ்வாய்க்கால் அன்புக் கடலாகிய கடவுளையே சேருமென்பது அவர்களது சீரிய கொள்கையாகும். உலகில் விழும் நீர் யாவும், கடலையே யடையுமன்றோ? அதே போன்று அன்பு வெள்ளமும் அருட்கடலாகிய கடவுளையே கடைசியிற் சேரும்.

இவ்வாறின்றி யவ்வன்பு வெள்ளம் கரையின்றி ஒரு வழியே பாயாது பெருகுமாயின் ஆற்று வெள்ளம் கரை யுடைத்துச் சென்ற காலை யுலகையழித்துத் தானும் பயனின்றிக் கழியுமாறு போன்று உலகினர்க்கு இடுக்கண் விளைப்பதாகும். இப்படிச் செய்தலின்றி, அவ்வன்பு வெள்ளத்தையொரு முகமாக இறைவனென்னும் அருட் கடல் பாற் செலுத்தும் வழியே அறிஞர் செயலாகும். தயரத மன்னவன் செங்கோல் முறையைக் கூறுமிடத்தே கம்பர்,

"வெள்ளமும், பறவையும் விலங்கும் வேசைய
குள்ளமும் வுரு வழியோட நின்றவன்"

என்று அவனைப் பாராட்டுவர். வேசையர் உள்ளமே யொரு வழியோட வேண்டுமாயின், பறவையுமே தம் முன்பமை வுருவழிச் செலுத்துமாயின் அவ்வரசன் கோல் முறையும், அவன் நாட்டுயிர்களின் சீரிய அறிவும் எவ்வளவு போற்றற்குரிய தென்று நோக்குங்கள்.

இத்தகைய அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக் கூட்டமென்று தொல் காப்பியர் கூறும் பிரவிருத்தி மார்க்கமாகிய இல்லறமே தங்கள் ரிணத்தில் ஒன்றாகிய பிதிர்க் கடனைத் தீர்க்கும் அறநெறியாகக் கொண்டனர் தமிழர். அவ்வில்லறமாகிய சகடத்தை நடாத்தியினிது வாழ்வதற்குக் கணவன், மனைவியென்னும் இரு பகடு களும் ஒத்த தன்மையவாய், ஈர்த்தல் அவசியம். எனவே, பெண்டிர், ஆண்மக்கட்குச் சமமாய்க் கருதப்பட்டு வந்த னர். அவர்களில்லாமல் ஒன்றும் நடைபெறாதாகும்.

இனி, பிதிர்க்கடன் தங்கள் சந்ததியைத் தொடர்ச்சி யாகத் தமக்குப் பின்னும் நடத்தி வருதற்குரிய மக்களைப் பெறுதலினின்றும் கழிக்கப்படுகின்றதென்று முன்னமேயே கூறினேன். தங்கள் வழிமுறை வழுவுறாமலிருக்க மக்களைப் பெறுதலே, இல்லறத்தின் முக்கிய பயன். அம்மக்கட் பெறாதார் வாழ்வு பயனற்றதாகும்.

> ''மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
> நன்கலன் நன்மக்கட் பேறு''. (திருக்குறள்)

என்று குறளாசிரியர் கூறியதையுங் காண்க. ஏனெ னில், தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐவருக்கும் அருங்கடனீவதே தலையாய அற மென்று வள்ளுவர் கூறினார். இவற்றுள் முதலாவதாகக் கூறப்பட்ட தென்புலத்தார்க்குரிய கடனைத் தனக்குப்பின் ஆற்றுதற்குரிய மக்களைப் பெறாதகாலத்து அவ்வறன் செய்யப்படாதொழியும்.

இதனாலேயே,

> ''தென்புல வாழ் நர்க்கருங்கடனிறுக்கும்
> பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
> எம்மம் புகழ விடுது நும்மரண் சேர்மின்''

என்று பகைவனூர் புகுந்த அரசன் மக்களைப் பெற்று, தம் பிதிர்க்கடனைத் தீராதார் பிழைத்துச் சென்று, தம் முடைய கடனையாற்று வீராக, என்று கூறுகின்றான்.

இத்தகைய மக்களைப் பெறாதார் வாழ்வு வேறுஎன்ன பயனெல்லாம் எய்தினும் பயனில்லதாகும். எத்துணைச் செல்வம் பெற்றனராயினும் மக்களில்லாவிடில், அவர் வாழ் நாள் பயனற்ற தென்பதை,

> ''படைப்புப் பல படைத்துப் பலரோடுண்ணும்
> உடைப்பெருஞ் செல்வராயினு மிடைப்படக்
> குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
> யிட்டுந் தொட்டுங் கவ்வியுந்துழந்தும்
> நெய்யுடையடிசில் மெய்பட விதிர்த்தும்
> மயக்குறு மக்களையில்லோர்க்குப்
> பயக்குறையில்லை தாம் வாழு நாளே''
>
> (புறம்)

என்ற பாடலுணர்த்தும். எத்தனை கலங்களில்,வகைவகை யான பண்டங்களைப் படைத்துண்ணக் கூடிய செல்வ ராயினும், அவர் அவ்வாறுண்ணுங்காலை தளர் நடை நடந்து, அவ்வுணவைத் தங்கையாலளைந்து, தம் மெய் பூசி யுதிர்த்தி அன்னதம் செய்கையால் அக்குழவியை வியப்பதா ஒறுப்பதா என்றும் தம் மனத்துள்ளே மயக் கத்தை விளைவிக்கக் கூடிய மக்களைப் பெறாதார்க்கு, வாழ்நாள் பயனுடைத்தில்லை என்பது இதன் பொருள்.

மக்கள் கையளாவிய கூழும், சாவா மருந்தாகிய தேவாமிர்தத்தினும் பெற்றோர்க்குச் சுவையுடைத்தாகும்

இதனை,

"அமிழ்தினினு மாற்ற வினிதே தம்மக்கள்
சிறு கையளாவிய கூழ்"

என்னுங் குறளால் திருவள்ளுவர் உணர்த்துவது எவ்வளவு அழகுடைத்து!

"வண்ணச் செஞ்சிறு கைவிரலனைத்தும்
வாரிவாய்க் கொண்ட வடிசிலின்மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ! கொடுவினையேன்
என்னையென் செய்யப் பெற்றதெம்மோயே!"

என்று தேவகி கண்ணனை நோக்கி வருந்தியதாக உரைப்பர் குலசேகரர்.

இவ்வளவு பெற்றியுடைய மக்கட்பேறு இக்காலத்தே பலர் கருதுவதைப் போன்று, மனித முயற்சியால், கிட்டு வதொன்றல்லவென்பதே பண்டையோர் கொள்கை. அவர்கள் கோட்பாட்டின்படி மக்கட்பேறு தெய்வ அருளால் வருவதாகும். எவ்வளவோ செல்வமும், புகழும் எய்திப் பயன் துய்ப்பார் மக்களில்லாமல் வருந்துவதை யின்றும் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

கல்வியறிவு நிரம்பிய அறிஞன், அரசன் முதலாக, எட்டுணையும் பகுத்தறிதல் பெறாத கசடன் வரை, மக்கட் பேறு தெய்வத்தின் அருட்செயலாலேயே நிகழ்வதென்று கருதி வந்தனர் என்று பண்டைத் தமிழ் நூல்கள் கூறும்.

"குன்றக் குறவன் கடவுட் பேணி
ஓம்பினன் பெற்ற காதற்குற மகள்,"

"மலைவாழ் குறவன் கடவுளைப் பேணித்தவங் கிடந்து பெற்ற அழகிய குறப் பெண்" என்று கூறுவதைக் காண்க.

இத்தகைய மக்கட்பேறு அவசியமென உணர்ந்த தமிழ்மக்கள், அம்மக்களென்னும் பயிர் விளையும் புல மாகிய மகளிரை அதிக அன்புடன் போற்றி வந்தனர். அவரின்றேல். மக்கட்பேறு இல்லையாதல் யாவருமறிந்

தகே. மக்கட்பேறு கடவுள் அருளால் விளையுமென்னும் எண்ணம் உள்ளவராதலான், அவ்வருட்பயிர் விளை புலனாகிய பெண்டிரை எவ்வளவு பேணியிருப்பரென்று உய்த்துணருங்கள்.

> "பெண்ணென்றுந்தூயபெரு நிலந்தானில்லாயின்
> மண்ணென்று மீண்டு முயர்வானத்தும்—எண்ணில்
> கடைக்கண்ணு நிற்குங் கடவுளுக்குமாமோ
> படைப் பென்னுந் தெய்வப் பயிர்."

என்ற பாடலையும் நோக்குக.

இவ்வாறு பெற்ற மக்களைத் தாயார் பேணி வளர்த்த முறை, வெகு அழகிதாகத் தமிழ்நாட்டிலே காணப்படுகின்றது. மக்களைப் பேணியதில், தாயே மிகவும் ஊக்கமெடுப்பாள். அவளது வளர்ப்பே அவனது பின்னைய வாழ்க்கைக்கு அடிப்படையாகும். இவ்வாறு தாயார் தம் மக்களை வளர்த்த குடிகளில் ஒன்றாகிய முதிற்குடியின் தன்மையை நயன் விளக்குகின்றேன். இது போன்றே பல்குடியிலும் மக்களைத் தம் குடிப்பழக்கம் மாயாதபடி வளர்க்கும்படி அவர் பழக்கி வந்தனர்.

மூதிற் குடியென்பது மறக்குடி. அக்குடியிலுள்ளார் யாவரும் வீரம் மிகுந்தவராவர். ஆண், பெண்ணனைவரும் இத்தன்மையவரே. இம்மறப்புகழே மிகவும் மேம்பட்டது. மற்றைய புகழ்களாகிய நியாயம் கொடையிரண்டும்நிலை பெறுவது இம்மறப்புகழாலே யாகும். இதனாலேயே,

> "மறம் வீங்கு பல்புகழ்"

என்பதற்கு உரையாசிரியர் 'பல் புகழினும் வீங்கு மறப் புகழ்' எனவுரை யெழுதினர். இத்தகைய மறப்புகழே மேலெனக் கொண்ட அம்மூதிற்குடிப் பெண்டிர், தம் மக்கட்குத் தம்முடைய வீரத்தையே அவர் உணவுடன் ஊட்டினர். அவர் வளர்ந்து அப்புகழை நாட்டிடுதலே அத்தாயார்க்குச் சிறந்த மகிழ்ச்சியை யளிக்கும். மக்கள்

அப்புகழை யோம்பாது, வீரமின்றித் திரிவரேல் அதைப் போன்று தாயார் மனதிற்குத் துன்ப முண்டாக்குவது வேறில்லை. இவ்வாறு துன்பமுண்டாக்கிய மகனைப் பெற்றோமேயென்று தாயார் வருந்தியதாகக் கூறும் பாடல்களில் சில கூறுகிறேன்.

படையழிந்து மாறினன் உன் மகன் என்று பிறர் கூறக் கேட்ட தாய், அவ்வாறு அவன் மாறியிருப்பின், அவனை ஊட்டிய முலையை யறுப்பனென்று வஞ்சினங் கூறிப் போர்க்களம் புக்கு, அங்கே கிடந்த பிணங்களி டையே தன் மகனுடலைத் தேடுவாள். ஓரிடத்தில் தன் மகன் இறந்து கிடந்தமை கண்டு, தான் அவனைப் பெற்ற காலையில் அடைந்த இன்பத்தைக் காட்டிலும் பன் மடங்கதிகமாக வின்புற்று மகிழ்ந்தாளென்று பொருள் படும். மகன்

''படையழிந்து மாறின னென்று பலர்கூற
மண்டமர்க்குடைந்தன னாயினுண்ட வென்
முலையறுத்திடுவென் யானெச் சினை இக்
கொண்டவாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துடிவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
வீன்றஞான்றினும் பெரிது வந்தனளே''

(புறநானூறு)

பாடலை நோக்குங்கள்:

இன்னும்

''வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
நேரலா வதனகத் துன்னீன்றனனே
பொருந்தா மன்ன ருஞ்சமமுருக்கி
யக்களத் தொழிதல் செவ்வாய் மிக்க
புகர்முகக் குஞ்சர மெறிந்த
அதன் முகத்தொழிய நீபெறந்தனையே

எம்மில் செய்யா வரும் பழிசெய்த
கல்லாக் காளை நின் னீன்ற வயிறே—

தகடூர்யாத்திரை.

யானையை யெறிந்த வேலை, அதனுடன் போக்கி, வெறுங் கையனாயில்லம் புக்கனையே! நினது வீரம் தோன்ற அக்களிறைக் கொன்று நின் வேலுடன் வந்தனையல்லை. இத்துணை வீரமற்ற நின்னைப் பெற்ற வயிற்றை என் செய்வது என்று வயிற்றிலறைந்து கொண்டனள் ஒரு தாய் என்று கூறுகிறார்.

தந்தை போரிற் களிறெறிந்து முந்தா நாளிறந்தமையையும், தன் கணவன் நெருநல் மாய்ந்ததையும் கண்டும் அஞ்சாளாய் இன்று எண்ணெய் பூசித் தன் ஒரே மகனைப் போர்க்களத்திற்கனுப்பும் வீரமிக்க தாய்மார்களே மூதிற்குடியில் வாழ்ந்தனர்.

இதே போன்று ஒவ்வொரு குடியிலும், தாய்மார்கள் தம்மக்கள் அறிவுடையோனாய், உலகிலுள்ள மற்ற அறிவுடையோர்கள் போற்றும் வண்ணம் வாழ வேண்டுமென்பதையே நோக்காகக் கொண்டு அவர்களைப் பேணினர். தாம் பெற்ற மக்கள் எல்லார் பாலும் ஒத்த அன்பு செலுத்த வேண்டியதே தாய்க்குக் கடமையாயினும் அம்மக்களும் மிகுதியும் அறிவு யார் பாலுளதோ அவர் மாட்டே தாய் மிகவும் அன்புடையவளாவாள் என்பது

''பிறப்போ ரன்னவுடன் வயிற்றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயு மனந்திரியும்''

(புறம் 183)

என்னும் அடிகளால் விளங்கும்.

தன் மகனைச் சான்றோனென்று பிறர் கூறக் கேட்ட தாய், தான் அவனை ஈன்ற காலைப் பெற்ற உவகை யினும் அதிகமாக உவப்பாளென்று கூறும்

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோனெனக்கேட்ட தாய்''

என்ற குறளை நோக்குங்கள்.

நம் தமிழ்ப்பெண்டிரின் திறம் இன்னதாகலின், மக்கள் அவர்களை ஒரு தெய்வம் போல் பேணி வந்தனர். காயத்தை ஒரு கோயிலாகக் கொண்டு தெய்வத்தை அதனுள் உறைபவனாகக் கொண்ட தமிழர், தம் அகத்தை ஒரு கோயிலாகவும், அம்மனைக் கிழத்தியாகும் பெண்டிரைத் தெய்வங்களாகவும் கொண்டனர். அவரை ''இல்லுறை தெய்வங்கள்'' என்று சங்கநூல்கள் கூறுகின்றன. பெண்டிர் கற்புடையார்களாற்றிகழ்ந்தமையே யவர்க்கித் தகைய ஓர் மாண்பையளித்தது. கணவன் தன் காதலி நன்கு வாழத்தான் தன் சௌகரியங்களையே யன்றித் தன்னையும் துறப்பன் என்று முன் நான் கூறியது போலவே, மனைவியும் கணவனின்புறுமாறு தான் தன் சௌகரியங்களைத் துறப்பாள். கண்ணகியைப் பற்றிக் கூறுமிடத்தே இளங்கோவடிகள் கணவனாகிய கோவலன் துன்பமே தன் துன்பமென்று வாடுதலன்றி ''தன் துயர் காணாத் தகைசால் பூங்கொடி''என்று கவுந்தி கூறியதாக வுரைப்பர். கவுந்தி, மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாக அனுப்புங் காலத்தே கண்ணகியின் மேன்மையை யுரைப்பவள்,

''கற்புக் கடன் பூண்ட வித்தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்''

என்று கூறுகின்றாள். இவ்வாறு கணவனும் மனைவியும் தம்மில் பரஸ்பரம் அன்பு மிகவுடையராய் ஒருவர் துன்பம்

மற்றவரும் தம்மதெனப் பேணுவாராய் வாழ்ந்து இல்லறம் நடத்தி வந்தனர்.

### விருந்தோம்பல்

இல்வாழ்க்கையில் விருந்தோம்புதல் ஓர் பெரிய ஒழுக்கமாகக் கருதப்பட்டு வந்தது. எதையுண்ணினும் விருந்தினரை யூட்டித் தானுண்டலே மேன்மையாகும் என்பது பண்டைத் தமிழர் கொள்கை. சாவா மருந்தேனும் பிறரையருத்தித் தானுண்டு வந்தனர் தமிழர். எத்துணை வறுமையினும் விருந்தோம்பல் பயிலப்பட்டு வந்திருக்கின்றது. விருந்தோம்பலே, அவர்களது செல்வமாகும்.

உரலிலடங்காத வூணுமதற்கு
விரலிலடங்கா விருந்து நிரல்பட
மாரியாலே வுண்ட மாடமும் வைப்பூர்க் கோன்

சீரியான் சிங்கன் திரு'' (பழம் பாடல்)

என்ற பாடல், இவ்வுண்மையை நன்கு வற்புறுத்தும்.

இத்தகைய நற்குடும்ப வாழ்க்கையே மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், ஆரோக்கிய திடகாத்திரத்திற்கும் ஏதுவாய் விளங்கி வந்தது. பிசிராந்தையார் என்னும் புலவர் தமது நரையின்மைக்குக் காரணங் கேட்ட மற்றையோர்க்குக் கூறுதலை நோக்குங்கள்:

''யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்காகிய ரென வினவுதிராயின்
மாண்ட வென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான் கண்டனைய ரென் னிளையரும்
வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை,''
யான்றவிந்தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழுமூரே'' (புறம் 181)

"வயது முதிர்ந்தும் நரையின்றியிருக்கும் காரணம் வினவு வீராயிற் கேளுங்கள். என் வீட்டில் மனைவியும் மக்களும் அறிவு நிரம்பினர். என் இளையரும் என் சொல்வழி யொழுகி நிற்பர். எம்மை யாளும் வேந்தனும் அறநெறி தவறானாய் எம்மைப் புரப்பன், எம்மூரில்அறிவு மிகுந்து, அற்ப ஆசைகள் அவிந்து அடக்கமிக்க சான் றோர் பலர் வாழ்கின்றனர். இவையே எனது நரையின் மையின் காரணமாகும்" என்பது இதன் சுருக்கமான பொருளாகும்.

எனவே, அறிவில்லா மக்களும், மனைவியும் சொல்வழி யொழுகாத இளையரும், அறநெறி தவறிக் கொடுங் கோலோச்சும் மன்னனும், கல்வியறிவில்லாத மக்களுள்ள ஊரும், இருப்புழி மனிதன் மனச் சமாதானமின்றிக் கவலைமிக்கு அதே காரணமாய்ச் சீக்கிரத்தில் முதுமை யடைவரனென்பது தானே பெறப்படுகின்றது. மக்கள் எப்போதும் தாய் தந்தையர் பணியையேற்று ஒழுகி வந்தனர் என்பது குறிக்கத் தக்கதாகும்.

"கையுங்காலுந் தூக்கத் தூங்கும்
ஆடிப் பாவை போல
மேவின செய்யும் புதல்வன் தாய்க்கே"

என்னும் ஐங்குறுநூறு அடிகள் இவ்வுண்மையை விளக்கி நிற்கும்.

### பண்டைய தமிழரின் ஒழுக்கம்:

ஒழுக்கமே மதமென்பது நம்முடைய பழந்தமிழர்களது கொள்கை. மதமானது மனத்திற்றோன்றுவது. அத்த கைய மனோபாவத்தை நடைமுறையிற் காண்பிப்பதே ஒழுக்கம். எனவே ஒருவனது நடைமுறையிற் காணப்படும் ஒழுக்கத்தால், அவனது மனோபாவமான மதத்தை நாம் நன்கறிந்து கொள்ளலாம். இத்தகைய ஒழுக்கத்தைத் தமிழர் மூவகையாகப் பகுத்துக் கொண்டனர். முதலாவது,

தன்னைப் பற்றியவொழுக்கம். இரண்டாவது பிறரிடம் நடந்து கொள்ளும் ஒழுக்கம். மூன்றாவதாகத் தன்னையும் பிறரையும் ஆக்கியோனாகிய கடவுளைப் பற்றிய வொழுக்கம், இவற்றையே வட நூலாரும், யக்ஞம், தானம், தபஸ் என மூவகையாகக் கூறுவர்.

இவ்வாறு மூவகைப்பட்ட ஒழுக்கத்திற்கும், அன்பே அடிப்படையானது என்பது தமிழருடையகோட்பாடாகும். எவனும் முதலில் தன்னிடத்திலேயே அன்பு செலுத்து கிறான். அவ்வன்பு பெருகிய காலத்தே தன்னைப் போல் பிறரையும் நேசிக்கும் மனப்பான்மையுண்டாகின்றது. இவ்விரண்டன்பும் முற்றிய காலத்தே எத்தகைய அன்பிற் குத் தன்னையும், பிறரையும் பாத்திரர்களாகக் கொண்ட னரோ, அவ்வன்பே யுருவாகக் கொண்ட இறைவனை நேசிக்கும் மகத்தான வெற்றியவரிடையே தோன்று கின்றது. இவற்றில் இரண்டாவது கூறப்பட்ட பிறவுயிர் களிடைக் காட்டும் அன்பு முதலாவதாகக் கூறிய தன்னை நேசிக்கும் அன்பைவிட ஒருபடி உயர்ந்ததாகும். மூன்றா வது கூறப்பட்டது முன்னைய இரண்டையும் காட்டிலுமு யர்வுடையதாகும். முன்னைய இரண்டும் பரிபக்குவமடை யிற்றான் மூன்றாவதாகிய அன்பு உண்டாகும். இறை வனைத் தம்மால் அன்பு செலுத்தற்குரியவொரு பொரு ளாகக் கொள்ளாது அவ்வன்பாகவே கொள்ளுதலின் அளவு கூற நம்மாலியலாது.

'அன்பே சிவம்' என வரும் திருமந்திரமும்,

''கோல மலர்ப்பாவைக்கு அன்பர்! என்
அன்பேயோ!''

என நம்மாழ்வார் கூறியதும் நன்குணரத் தக்கன. இத்தகைய அன்பின் தன்மை ஒருவராலளவிடற்கரிய தாகும்.

இதையொட்டியே,

"அன்பெனு மொன்றின் தன்மை யமரரு மறிந்த தன்றால்"

என்று அன்பின் தன்மையைப் போற்றுவார் கம்பர்.

இத்தகைய தலையாய ஒழுக்கமாகிய தவவொழுக்கத்தை விளக்கும் திருவள்ளுவர்,

"உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு"

என்று கூறினர். வருந்துன்பங்களைத் தான் சகித்து பிறவுயிர்க்கண் துன்பம் விளைவியாதிருத்தலே தவத்தின் ஸ்வரூபம் என்பது இதன் பொருள். இந்தச் சிறந்த கொள்கையையே புத்த பகவான் தமது மதத்திற்கு ஆணிவேராகக் கொண்டார். கணவன் மனைவியரை இருதலைப் புள்ளிற்கு உவமை கூறுவர் புலவர். அப்புள் ஒருடலும், இருதலையும் உடைத்தாகும். உயிரும் ஒன்றேயாதல் வெளிப்படை. இதே போன்று, கணவன் மனைவியர் பார்வைக்கு இருவராகக் காணப்படினும், மனோபாவத்திலும், அன்பினால் பிணைக்கப்பட்ட தன்மையினும் ஒருவரேயாவர். இதையே,

பிரிவின்றி யேய்ந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளினோ றாயிரம்மே"

என்னுமடிகள் விளக்கி நிற்கும்.

இவ்வாறு ஒருயிரும், ஒருடலும், இருதலையும் கொண்ட புள்ளின் தலைகளிரண்டும் ஒன்றுடன் ஒன்று போர் செய்யின், யாது பயன் விளையும்? அதே போன்று, கணவன், மனைவியர் தம்மில் மாறுபடின், அது இருவருக்குமே தீங்கு விளைக்கும் என்பதே முன்னோர்கள் உபதேசித்தது. இதனை விளக்குகின்றேன். அவ்விருதலைப் புள்ளின் உடல் ஒரு போர்வையால் மூடப்பட்டுப் பார்ப்பவருக்கு அதன் தலை களிரண்டுமே வெளியிற்றெரி

கின்றன. அவை யொன்றோடொன்று போர் புரிகின்றன. இந்நிலையில் அப்போர்வையை விலக்கி விடுவோமாயின், என்ன காணப்படும்? தலையிரண்டாயினும் உடலுயிர் ஒன்றேயாதல் காண்கிறோம். எனவே, ஒருதலை மற்றொரு தலையை நலியுமாயின், அது நலியுந் தலைக்கும் இன்னல் விளைப்பதாகும் என்பது நன்கு புலப்படும். இதனையே,

> ''ஒருயிர்ப் புள்ளி னிருதலையுளொன்று
> போ ரெதிர்ந்தற்றால் புலவல்''

என்று வரும் அடிகள் விளக்கும். அதனால், கணவன் மனைவியராகிய இருவரில் ஒருவர் புலப்பின் அது இருவருக்கும் மன வருத்தத்தையே விளைக்கும். ஆகையால், புலவற்க என்று கூறிய நயத்தை நோக்குங்கள். பண்டைத் தமிழர் குடியுள் கணவன் மனைவியரிடையின், இத்தகைய சீரிய அன்பே நிலவி வந்தது.

எனினும், இவ்வளவு மேன்மையுற வாழ்ந்த குடி மக்களுள்ளே, ஆண்மக்கள் பரத்தையர் மனைச் செல்லுதல் என்று ஒரு வழக்கமிருந்ததாகப் பல இடங்களிலும் சங்க நூல்கள் கூறுகின்றன. பரத்தையிற் பிரிவு என்னும் ஒரு துறையும் வகுக்கப் பட்டிருக்கின்றது. பரஸ்பரம் அன்புடன் கணவன் மனைவியிருந்திருப்பின், அவரில் ஆடவர் பரத்தையருடைய இல் சேறல் எத்துணைப் பழிப்பிற் கிடமாகும் என்பதை யோசியுங்கள். அவ்வாறு பரத்தையரில் சேர்ந்து, தங்கித் திரும்ப மனை வருங்காலையில் தலைவியவனுடன் புலத்தல் உண்டென ஊடற்றுறையில் வரும் செயயுட் களில் பலவிடங்களில் யாம் பார்க்கின்றோம்.

இவ்வாறு அவன் பிரிவுற்ற காலை அவன் கற்புடை மனைவி, மனம் வருந்தி அவன் சுகமே திரும்ப வேண்டுமே யென்ற கவலை மிக்கவளாய்த் துன்புறுவாள். செஞ்

சொற்கவியின்பம் போன்று, துய்க்குந் தொறும் புத்தின்பம் அளிப்பளாகிய தலைவியை விடுத்துத் தலைவன் பரத்தையர் வழிச் சேர்தல் மிகவும் பழித்தற்கிடமானது. அவ்வாறு பரத்தையரில் வழிப் போந்த தலைவன், ஆங்கே பாணன் பாடல் முதலியவை கேட்டுக் களியாட்டயர்வனென்று கூறப்படுகின்றது. அவ்வாறு தலைவனைத் தன்னின்று பிரிக்கும் பாணனைத் தலைவி பழித்தலும் உண்டு. அதுவே பாணனைப் பழித்தல் என்னும் துறையாவது.

> ''ஈட்டு புகழ்நந்தி பாண நீ யெந்தையர் தம்
> வீட்டிருந்து பாடவிடியளவும் - காட்டிலழும்
> பேயென்றாள் அன்னை பிறர் நரியென்றார் தோழி
> நாயென்றாள் நீயென்றேன் நான்.''
>
> (நந்திக் கலம்பகம்)

இரவில் பாடல் கேட்டது. என் தாய் ஏதோ பேய் கூக்குரலிடுகின்றது என்று கூறினாள். அருகிலிருந்தவர்கள் பேயல்ல, நரி ஊளையிடுகின்றது என்று கூறினர். என் தோழியோ பேயுமல்ல, நரியுமல்ல, நாய் குரைக்கின்றது என்று தீர்மானமாகக் கூறினாள். ஆனால் அவர்களெல்லாரும் உண்மை தெரியாது உரைத்தனர். அவர்களையெல்லாம் தவறு என்று கூறி உண்மையயறிந்த நான், 'நீ பாடிய சத்தம்தான் அக்குரல் என்று கூறினேன்' என்று நயமாக அவனைப் பழித்தல் காண்க.

சங்ககாலப் புலவர்களில் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் ஒழிந்த ஏனையோர் யாவரும் இப்பரத்தை வழித் தலைவன் சேர்தலைக் கூறினரேயன்றி யவன் அங்கு செல்லும் காரணத்தை உணர்த்தினாரில்லை. படிக்குங்காலை தலைவன் பரத்தையர் வழிப் போகார்த்தமே கருதிச் சேர்தல் போன்ற நமக்குத் தோற்றும். ஆனால், முன்னே நான் கூறியபடி இல்லறவொழுக்கம் மேம்பட்டிருப்பின், இவ்வாறு இவர்கள்

சேர்தல், ஒழுக்கமாகுமா? இத்தவறான ஒழுக்கத்தை யறிவுமிக்க புலவர்கள் இத்துணை தூரம் பாடியிருப்பார் களா என்றுநாம் ஆராய வேண்டும். இப்படிப் பரத்தையற் பிரிவின் கொள்கையைத் திருவள்ளுவர், தமது குறளிலே விளக்குகின்றார். எங்கும் வரைவின் மகளிரை 'அளறு' என்று இகழ்ந்துரைக்கும் தேவர், மக்கள் உணர்ந்துய்ய வேண்டித்தாம் பாடிய குறளில், மக்கள் அவ்வளற்றில் வீழ்ந்தழுந்துவதைப் பற்றிக் கண்டியாதிருப்பரா? என்று நோக்குவோமாயின், தேவர் கருத்தை,

''இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்லது அவரளிக்கு மாறு''

என்னுங் குறளால் நன்கறியலாகும். காரணமொன்று மில்லையாக, அவர்மேல் ஏன் கோபித்துக் கொள்கிறாய் எனத் தோழி வினவ, தலைவி ''அவரிடம் குற்றமொன்று மில்லையாயினும், அவர் நான் ஊட என் ஊடலைத் தணிக்கவளிக்கும் தலையளியின் சிறப்பானது என்னைக் காரணமின்றியும் அவருடன் ஊடும்படி செய்யும். அச்சிறந்த தலையளியை யான் அனுபவித்தற் பொருட்டு, என்பது இதன் பொருள்.

இதனால் பரத்தையிற் பிரிவென்பது, மக்கள் வரைவின் மகளிர்பால் போகார்த்தம் கருதிச் செல்லுதல் என்ப தில்லை. அது கலைகள்பால் மனம் நாடுதலின், அக்கலை களையனுபவித்தற்கே தலைவன் பரத்தையரில் செல்வ னென்றுவிளங்கும். பரத்தைஎன்பது புறம்பாயுள்ளது என்று போகத்திற்குப் புறம்பான கலை நுகர்வையே குறிக்கு மென்று பொருள்பட வள்ளுவர் கூறியது அவரது அறிவு மேம்பாட்டை எத்துணை அழகாக விளக்குகின்றதென்று பாருங்கள்.

இவ்வாறு வள்ளுவர் கூறுவதாயின், சிலப்பதிகாரத்தில் கோவலன் மாதவிபால் இன்பமே பொருளாகக் கருதிச் சேர்ந்தனன் என்று கூறப்படுகின்றதே, இவ்விரண்டையும்

எவ்வாறு ஒற்றுமைப்படுத்துவது என்று வினவுதல் கூடும். ஆனால் மாதவியொரு சாதாரணக் கணிகையாகக் கூறப்படவில்லை. அவள் ஒரு விலை நலப் பெண்டிரன்று. அவளும் கோவலனைத் தான் கணவனாக வரித்தவள் போன்று அவனுடைய மற்றொரு கற்புடை மனையாட்டி யாக விருந்ததாகவே இளங்கோவடிகள் உரைப்பர். கற்புடை மனைவியின் தன்மைகள் யாவும் மாதவியிடம் நாம் விளங்கக் காண்கிறோம்.

> ''காதலரிறப் பிற்கனையெரி பொத்தி
> யூதுலைக் குருகினுயிர்த் தகத்தடங்கி
> யின்னுயிரீவர்.''

என்று மாதவி கூறியதாகச் சாத்தனார் மணிமேகலையிற் கூறுவர். இவ்வாறு இன்னுயிரீரையவன் இறந்தா னென்னுஞ் சொற் கேட்ட அளவிலேயே ஈயாராயின் அவர் நளியெரியில் மூழ்கியேனும், உயிர் துறத்தல் வேண்டும். அதுவுமின்றேல் தவத்துறை புகுந்து, நோற்றுடம்படுதல் வேண்டுமென்று மணிமேகலையில் தன் தாயான சித்திராபதிக்குரைக்கின்றமையானும், தானும் துறவெய்தித் தன்னருமைமகள் மணிமேகலையை யும் துறவறமெய்துதற்குடம் பட்டமையாயினும் மாதவியை நாம் ஒரு பரத்தையாகக் கருதி, அவள் பாற் கோவலன் சேர்ந்தமையை, தலைவன் பரத்தையர்பால் போகமே கருதிச் சேர்வர் என்னும் தவறான கொள்கைக்கு ஓர் எடுத்துக் காட்டாகக் கொண்டு இவ்வாறு தலைவன் பரத்தையரில் வழிச்சேர்தலைப் புலவர்கள் ஒப்புக்கொண் டனரென்று கூறுவதைக் காட்டிலும் தவறு வேறொன்று மில்லை.

தமிழ்நாட்டில், முற்காலத்தே, ஆடவர் ஒரே பெண் டிரை மணந்து, இல்லறம் நடாத்தலே சிறப்புடைத் தெனக் கருதப்பட்டு வந்தது. புராண வாயிலாக நாம் ஒருவன் பன்மனையாளுடையான் என்று படிப்பினும்,

அவ்வாறு பன்மனையாளுடைமை மிகவும் சிறப்புடைய தாகக் கருதப்படவில்லை. அவ்வாறு வாழ்வான் வாழ்வு மிகவும் கஷ்டங்களையுடையதாகவே யிருந்ததாகச் சரித்திரங்கள் கூறா நிற்கும். எத்துணைச் செல்வமுடைய னாயினும், பன்மனையுடையனாமேல், அவனும் தரித் திரம் என்பது என்னவென்பதை வெகுவிரைவிலே யறி வான் என்பதை,

"நிரப்பிடும்பை பல் பெண்டிரான னறியும்"

என்னுமடிகளுணர்த்தி நிற்கின்றன.

அவ்விடும்பை பன்மனையாட்டிகளை மணந்தவனை மட்டுமின்றியவன் மைந்தரையும் ஆட்டுவிக்கும். பிறந்த மகன் உலகம் படைத்த வொருவனே யாயினும் அவ்விடும் பைக் காளாகின்றான் என்னும் உண்மையை,

"அண்ணறயரதனா ராவி பிரிந்தொழிய
விண்ணும் பரவும் விழுக்கடவுண்-
முண்ணிறைகான்
றன் மனையோடேகித் தணந்த பெருங்கதை தான்
பன்மனை யாலாய பயன்."

என்னும் பாரி வெண்பா நன்கு புலப்படுத்தும். இதனால் ஒரே மனைவியுடன் அன்பு பூண்டு இல்லறம் நடத்துதலே மேன்மையுடைத்து. அதுவே இன்பம் தருவதாகும். பன் மனையால் துன்பமே விளையும் என்னும் இவ்வுண்மைகள் நமக்கு நன்கு வெளியாகின்றன.

உலகம் தமக்காகவே நிற்கின்றதென்னும் சுயநல நீங்கிப் பிறர்க்குரியதுன்பங்களை நீக்குவதே கடனெனக் கொண்டு விளங்கினர், அக்கால மக்கள். விருந்தோம்பல் என்னும் ஒழுக்கம் அவர்கட்குள்ளே மிகவும் போற்றப் பட்டு வந்தது. தாம் எவ்வகைந் துன்பத்திற்காளாயினும், விருந்தினர் முகங்கோணாமல் உபசரித்தல் அவர்வழக்கம்.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று"

என்னுங் குறளால் தேவர் விருந்தோம்பலின் மேம் பாட்டை விளக்குகின்றனர். விருந்து புறத்தே நிற்க, தான் தமியனாய் உண்ணும் பொருள் தேவாமிர்தமா யினும், ஒருவன் வேண்டற்பாலதன்று. அத்தகைய பெறுதற்கரும் பொருளாயினும் விருந்தினரையூட்டி பின் னையே தானுணல் வேண்டும் என்பது இதன் பொருள். பரிமேலழகர் சாவாமருந்து என்பதற்கு தேவாமிர்தம் என்று பொருள் கூறினார். ஆனால், பரிப்பெருமாளென் னும் உரையாசிரியர் அதனை உயிர் போகாக் கஞ்சி யென்று உரை கூறுவார். தான் உண்ணும் பொருள் தான் பசியால் உயிர் போகுந்தறுவாயில் அதனைக் காப்பாற்ற வுன்னியுண்ணலுறும் கஞ்சியாயினும், அதனையும் விருந்து புறத்தேயிருக்கத் தமியனாயுண்டல் வேண்டற் பாலதன்று. விருந்தையூட்டிப் பின் தன்னுயிர் பேண அக்கஞ்சி பற்றா மல், தான் உயிர்விட நேரினும், அச்செயல் சிறந்ததாகும் என்பது இதன் பொருள். விருந்தினர் மோப்பக் குழையும் அனிச்சம் பூவினும்மானவுணர்ச்சிவுடையராதலான், அவர் மனது வருந்திக் குழையும்படி, மக்கள் முகந்திரிந்து நோக்கார்.

மக்களது ஒழுக்க நிலையாலேயே யிவ்வுலகம் இயங்கு கின்றது என்பது பண்டைத் தமிழர் கொள்கை. ஒவ்வொரு வனும், தனக்கென வாழாமே, பிறர் துன்பம் நீக்க முயலு தலே, தலையாய வொழுக்கமாகக் கருதப்பட்டது. அவ் வாறு பிறர் துன்பம் நீக்கும் மனப் பெற்றியுடையாரிருத்த லாலேயே உலகம் நிற்கின்றது. எனில், அப்பெற்றியுடை யாரில் வழியுலகம் அழிவுறும் என்பது தானே புலப்படு கின்றது? இதனை,

''உண்டாலம்ம விவ் வுலகமிந்திர
ரமிழ்தமியைவ தாயினு மினிதெனத்
தமியமுண்டது மிலரே முனிவிலர்
துஞ்சலுமிலர் பிறர் அஞ்சுவதஞ்சிப்
புகழெனினுயிருங் கொடுக்குவர் பழியெனி

னுலகுடன் பெறினுங் கொள்ளா ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலு நருண்மையானே.''
(புறம் 182)

தேவாமிர்தம் கிடைப்பினும், தாம் தனித்தேயுண்ணு வம் என்னும் பெற்றிலராய், எவ்வுயிரிடையும் சீற்ற மின்றிப் புகழென்னில் அதை நாட்டத் தம்மின்னுயிரையும் ஈயவல்லராய் பழிப்பென்னில் அதனால் தமக்கு இவ்வுலக முற்றும் கையுறுமாயினும், அதனை வேண்டாராய், ஒரு காலத்தும் மனச் சோர்வு சிறிதுமின்றி, தனக்குச் சுய நலம் பேணி யொன்றையும் செய்யா முயற்சியாராய் பிறர்க்கு நன்மை செய்ய முயல்வதிலேயே மிகவும் வலிய முயற்சி யுடையராய், விளங்குபவர்கள் இருத்தலினாலேயே இவ்வுலகம் உண்டு. இவர்களின்றி மேல் உலகம் இல்லை யாகும் என்பது இதன் பொருள். இப்பாடல் ஒருவாறு பண்டைத் தமிழ் மக்களின் ஒழுக்க முறையைத் தொகுத் துக் கூறும். பிறர்க்கென முயலும் சீரிய பெற்றிலரா யினும், பிறர்க்கின்னா செய்யாமையொன்றே சாலும். அதுவே யறநெறியாகும் என்னும் உண்மையை,

''நல்லது செய்தலாற்றீராயினும்
அல்லது செய்த லோம்பு மினதுதான்
எல்லாரு முவப்பதன்றியு
நல்லாற்றுப் படூஉ நெறிமாறதுவே'' (புறம் 195)

என்னும் புறநாற்று அடிகள் நன்குணர்த்தும்.

இதுவரையும், பொதுவாக மக்களின் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறினேன். இனியப் பொது மக்களைக் காப்ப வரின் ஒழுக்கத்தைப் பற்றிச் சிறிது கூறுகிறேன்.

பொது மக்களைக் காக்கும் அரசன் தெய்வத்திற்குச் சமானம். சிருஷ்டிக் கிரமத்தில் காக்குந் தொழிலிற்குரிய

திருமாலின் அம்சமே அரசர்கள் என்பது பண்டையோர் கோட்பாடு.

''திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண் டேனே யென்னும்''

என்று நம்மாழ்வார் கூறியது இப்பொருளை நன்கு விளக்கி நிற்கும். கடவுளைப் போன்றே நிக்ரஹ அநுக்ரஹசக்தி அரசனுக்குண்டு. நல்லவை செய்தாரை யளித்தலும், அல்லவை செய்தாரை யொறுத்தலுமே யவன் கடமையாகும்.

அரசுத் தொழில், ஓர் இன்ப வாழ்வன்று என்பது தமிழர் கொள்கை. அரசன் இவ்வுலகில் உயிர்கள் துன்புறா வண்ணம் காக்கவேண்டிய ஒரு பெரும் பொறையைத் தாங்க வேண்டியவனாகின்றான். அவ்வாறு அதிகப் பளுவுள்ள பொறையைத் தாங்கி நன்னெறி செல்லுகை இலேசானதல்ல. வெளியிற் பார்ப்பவருக்கு அரசன் போக போக்யங்களையனுபவித்துக் கொண்டு வாழ்கின் றானென்று தோன்றலாம். ஆனால் உண்மையில் அவன் வாழ்க்கை கடினமானதாகும். அரசனைப் பாரமிழுக்கும் பகட்டிற்கு உவமை கூறுவர் தமிழ்ப் புலவர்கள்.

'உழுத நோன் பகடு அழிதின்றாங்கு' என வரும் புறநானூற்றடிகளாலும்

''மடுத்த வாயெல்லாம் பகடன்னா னுற்ற

விடுக்கணிடர்ப்பா டுடைத்து'' என வரும் குறளாலும் இஃதறியப்படும்.

''பகடு மருங்கொற்றி, மூக்கூன்றி, தாடவழ்ந்து'' மக்களேறிய வண்டிகளை அரிதினுய்க்குமாறு போல, அரசன் தன்னிடர்ப்பாடுகளனைத்தையும் சகித்துத் தன்னை நம்பி வாழும் குடிகளைக் காத்தல் கடனாகும். இதனால், அவனுடைய வாழ்க்கையின் இடர்ப்பாடுகள் அரிதின் விளங்கும்.

இவ்வாறு மிகவும் துன்பங்களையே யுடையதாகும் அரச வாழ்க்கை யென்பதைக் கொண்டே, கம்பர்.

..............யாரும் வேண்டா அரசாட்சி

பூண்டிவ் வுலகுக் கிடம் கொடுத்த புல்லியேன்" என்று கூறுவர்.

இதனாலே, அரச வாழ்வு ஒருவன் வேண்டிப் பெறுவதற்குரியதல்ல, அதனை நன்கு நடத்தத் தெரிந்தவருமே யதன் பொறையை யாரிடம் இறக்கி வைப்போம் என்றெண்ணுவர்.

இவ்வாறு மிகவும் இடர்ப்பாடுடைய அரசை, ஆளும் மன்னன் குடிகளின் நலமொன்றே பேணி வாழ்தல் வேண்டும். அத்தகைய அரசே நல்லரசாகும். குடிகளிடமிருக்கும் இறையை யக்குடிகள் நன்மைக்கேயவன் செலவிடுதல் வேண்டும். அஃதின்றித் தன் போகார்த்தமாகவே யவற்றைச் செலவழிப்பனாயின் அவன் நாடு விரைவிலழிவுறும். அரசர் இறையைக் குடிகளுக்கே யுரியதாக்குவர் என்னும் உண்மையைக் கம்பர்,

''மண்ணுயிர்க்கு நல்குரிமை மண்பாரம் யான் சுமக்கப்
பொன்னுயிர்க்குந் தாரோய் பொறையுயிர்த்தவாறிதுவோ?"

என்று இராமர் தயரதனிறந்தமை கேட்டுப் புலம்புகின்றதாக வரும் அடிகளில் அமைப்பர். எனவே அரசுரிமை மண்ணுயிர்க்குரியதேயன்றியரசன் போகத்திற்குரியதன்று என்பது பெறப்படும்.

அவ்வாறு செய்யாமல் கொடுங்கோல் நடத்தும் வேந்தன் அரசு நிலையாதென்பதைக் கொடுங்கோல் வேந்தனொருவனை நோக்கி, மார்க்கண்டேயனாரென்னும் புலவர் பாடியதாக ஒரு புறநானூற்றுச் செய்யுள் கூறும்.

''விலைநலப் பெண்டிரிற் பலர் மீக்கூர
வுள்ளேன் வாழியர் யானெனப் பன்மா

னில மக னழுத காஞ்சியு
முண்டென்றுரைப் பராலறிந்திசினோரே''
(புறம் 365)

இதனையே இன்னும் விரிவாக

''காய்நெல்லறுத்துக் கவளம் கொளினே
மாநிறை வல்லதும் பன்னாட்காகும்
நூறு செறுவாயினுந் தமித்துப் புக்குணினே
வாய் புகுவதனினுங் கால் பெரிது கடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடியாத்து நாடு பெரிது நந்து
மெல்லியன் கிழவனாகி வைகலும்
விசையறியாக் கல்லென் சுற்றமொடு
பரிபுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க பலம் போலத
தானுமுண்ணான் உலகமுங் கெடுமே" (புறம் 184)

என்னும் செய்யுளுரைக்கும்.

வயலில் விளைந்த நெல்லையறுத்துச் சேர்த்து, அதனை யானைக்கு ஊட்டின், அதன் வயிறு நிறைவது மன்றி யவ்வுணவு பல நாளைக்கும் போதுவதாகும். அவ்வாறின்றி யானையே பயிரிற் புக்குண்ணாவிடின், அதன் வாய்க்குள் செல்லும் நெல்லை விடப் பன்மடங்கு அதிகமாக அதன் கால்கள் அழிக்கும். அதுபோல, அரசன் நெறியறிந்து இறை கொள்ளின், அது பெருகி யதனால் நாடும் செழிப்புறும். அஃதின்றி அவன் நெறி தவறி வரிசையறியாது ஒலிமிக்க சுற்றத்தோடே மக்கள், நலிவெய்த இறுப்பனாகில், அவனுக்கும் அது பற்றாது. உலகமும் கெடுவதாகும் என்பது இதன் பொருளாகும்.

இதனால், அரசன் இறை கொள்ளுங் காலத்தே, ஒரு வழியிறுக்காது, தாரதம்மியமறிந்து, மக்கள் அவ்விறையினால் நலியா வண்ணம், கொள்வனென்பதும், அவ்வாறின்றி நெறிதவறியிருப்பின் அது அவனுக்கும், அவனா

ளும், நாட்டிற்கும் அழிவையே யுண்டாக்குவதாகும் என்பது நன்கு புலப்படுகின்றது. அரச நெறி யறியாத பேதை யொருவன் அரசனாயின் அதனால் அவன் குடிகள் லி வெய்த பகைவர்கள் பொலிவெய்துவர். இதனையே

> ''ஏதிலாராத் தமர்பசிப்பர் பேதை
> பெருஞ் செல்வ முற்றக்கடை''

என்னும் குறள் உணர்த்தி நிற்கும்.

பேதையொருவன் பெருஞ் செல்வமுறின், அவன் தாய் தந்தையும் உற்றாருறவினர் முதலியோர் உண்ண வுணவுமின்றித் தவிக்க, அயலார் தம் விலாப்புடைக்க வுண்டு மகிழ்வர் என்பது பொருள். ஏதிலார் ''ஆர'' என்பதிலும் தமர் ''பசிப்ப'' என்பதினின்னும் தோன்றும் பேதம் பேதை பெருஞ் செல்வமுற்றால் விளையும் விளைவை நன்கு தோற்றுவிக்கும். பேதை பெருஞ் செல்வமுறுதல் துர்லபமென்பதைக் குறிக்கவே உற்றக்கடையென்று கூறப்பட்டது. இப்பொது வழக்கத்தை வைத்து, அரசன் பேதையாகின் வரும் விளைவை நன்குணர்ந்து கொள்ள லாம்.

மேலே, அரசனை போர் யானைக்கு புறநானூற்றில் உவமை கூறியதாகச் சொன்னேன். எனவே யானையை நெறியறிந்து செலுத்தப் பாகனொருவன் வேண்டியதை யொப்ப அரசனை நெறிதவறாது ஒழுகச் செய்யமந்திரிகள் வேண்டும். யானை யெவ்வாறு மதம் கொண்டகாலை தன்னெறி தவறித் தன்னையும், பிறரையும் அழிக்க வல்லதோ, அதே போல மன்னவனும் செல்வமிக்குழிச் செருக்குற்றுச் செய்வது நன்று தீதென வுன்னாது, அவ்வழி சேர்ந்தொழுகித் தன்னையும் கெடுத்துக் கொள்வதன்றித் தான் காக்க வேண்டிய குடிகளையும் கெடுக்கலுறுவான். அவ்வாறு அவன் நெறிதவறி யொழுகாவண்ணம் அவனைச் செலுத்துபன் அறிவுடை மந்திரியாவான். அவன் தவறு செய்துழியவனை யிடித்துக் கூறி நல்வழி

யுய்த்தல் மந்திரி கடன். அவ்வாறு அறிவுடை மந்திரியில் லாத அரசன் சீக்கிரத்தில் நெறிதவறித் தானே கெடுவன், வேறு அவனைக் கெடுப்பவரொருவர் வேண்டாவென்னும் பொருளே

> ''இடிப்பாரை யில்லாதவே மரா மன்னன்
> கெடுப்பாரிலானுங் கெடும்''

என்னுங் குறளாலுணர்த்தப் படுகின்றது.

இதுகாறுங் கூறியவற்றால், தமிழரின் ஒழுக்கம், அன்பையே அடிப்படையாகக் கொண்டதென்பதும், அத்தகைய அன்புடனேயே, தமிழர் ஒழுகி வந்தனரென் பதும், மக்கட்கு மனையொன்றே யென்பதும், அவள் மாட்டு அவன் ஒற்றுமையுடனும் அன்புடனும் ஒழுகி வந்தானென்பதும், பரத்தையிற் பிரிவென்பது போகார்த்த மாக வன்றிக் கலை நுகர்தற் பொருட்டே யென்பது, விருந்தினரையும் மக்கள் அகமலர்ந்து உபசரித்தன ரென்பதும், அரசன் குடிகளை யோம்பி, நுகந்தாங்கும் பகடு போல் வருந்தியுழைத்து, இறையைத்தானே துய்க் காது, மன்னுயிர்க்குரிமை நல்கலே தன் கடனாகக் கொண் டொழுகி வந்தன னென்பதும், அவன் ஒரு யானைபாகற் கடங்கி நடக்குமாறு போல, ஓர் அறிவுடையமைச்சன் சொற்கேட்டொழுகி வந்தனனென்பதும் தென்ளிதில் விளங்குகின்றது.

## தமிழரின் மதம்

இக்காலத்தே, தமிழ் நாட்டில் பல்வேறு சமயத்தவர் மலிந்திருக்கக் காண்கின்றோம். ஆனால், இச்சமயத் தாரின் பூர்வநிலை யாதாகும்? அக்காலத்தே ஜைனர், பௌத்தர், வைணவர், சைவர், அத்வைதிகள் முதலிய பலரிருந்ததாக நூல்கள் கூறுகின்றன. இவ்வரைப்பட்ட பலதிறத்த மதத்தினுள்ளும், தமிழ் நாடு எம்மதத்தை யுடைத்தாயிருந்தது என்று ஆராய வேண்டிய தவசிய மாகின்றது.

மனிதன் கண்ணுக்கு ஸ்தூலமாக உலகினுள்ள பொருள்களை அனுபவிக்கின்றான். ஆனால் அவ்வாறு அனுபவிக்கும்காலை, அதனின்றும் வேறான சில வெண்ணங்கள் அவன் மனத்தே யுதிக்கின்றன. அதையொட்டிய சில வினாக்கள் தானாகவே யவனுளத்தில் எழுகின்றன. அவ்வினாவை, அவன் தன் அறிவிற் கெட்டிய மட்டும் ஆராய்ந்து, ஒருவித முடிவிற்கு வருகிறான். அவன் எவ்வழியில் ஆராய்கின்றானோ, அதே வழியிற் சென்றால் மட்டுமே, அத்தகைய வினாவிற்கு, விடையெய்த முடியும் என்னுங் கொள்கை யவற் குண்டாகின்றது. அவ்விதக் கொள்கையே யவனது மதமாகும்.

மனிதன் இவ்வுலகில் எல்லா வற்றையும் தன் முயற்சியாலேயே பெறுகின்றான். அவ்வாறு முயல்கையில் ஏதோ ஒரு பொருள் கிட்ட முடியாதாகின்றது என்று வைத்துக் கொள்வோம். அவன் தன்னாலான வரையில் முயன்றும், அது கிட்டாதாக, அவன் மனத்தே, தன் முயற்சிக்கும் புறம்பான, அதனினும் அதிக வலியுள்ள வஸ்து வொன்றுண்டென்று தீர்மானிக்கின்றான். அவ்வளவு அதிக வலியுள்ள பொருள் யாதாயிருக்கலாம் என்று அவன் மனது ஆராய்கின்றது. தன் முயற்சியாலாகாத ஒரு செயல் தானே, நிகழ்வதை யடிக்கடி காணுந் தோறும், அச்செயல் வேறொருவனாலே யாக்கப்படுகின்றது என்று நன்கு விளங்குகின்றது. அத்தகைய வொருவனின் சகாயத்தை யெவ்விதம் பெறுவது என்று ஆராய்ந்து ஒருவித முடிவிற்கு வருகிறான். அம்முடிவே மதமாகும். இவ்வாறின்றி, மதம் என்பது, உலகந் தோன்றிய போதே கூடப் பிறந்தது என்று கூறுவது பொருந்தாது. மதங்கள் உலகந்தோன்றி, வெகு காலத்திற்குப் பின்னாலேயே தோன்றியிருக்க வேண்டும்.

மனிதன் முதலிற்றான் தோன்றியதையுணர்கின்றான். பின்னர்த் தன்னைப்போல்பலர் தோன்றியிருப்பதை யுணர்கின்றான். இவ்விரண்டையும் உணர்ந்த காலை, அவன்

மனத்தே நாம் எவ்வாறு, ஏன் தோன்றினோம்? அதே போல் பிறர் எவ்வாறு ஏன் தோன்றினர்? என்ற வினா எழுகின்றது. அவ்வினாவை ஆராயுங்காலை நம்மையும், பிறரையும் யாரோ எக்காரணத்திற்காகவோ தோற்றுவிக்கின்றனர் என்ற உண்மை புலப்படுகின்றது. அவ்வாறு தோற்றுவிப்பவனே தெய்வம் என அழைக்கப்படுகிறான். இத்தகைய தெய்வம் ஒன்று உண்டு என்னும் உணர்ச்சி பூர்வமாக உண்டாவதுக டினம்.

''தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி''

என்பர் மணிவாசகர். உண்டாகி என்பதனால் அவ்வுணர்ச்சி சித்தம் உண்டாதல் எளிதன்று என்பது புலப்படுகின்றது. தன் முயற்சியில் தோல்வி யேற்பட்டக் கால், அவன் தன்னிலும் வலியுள்ளனாய், தன்னையும், பிறரையும் ஆக்கியவனாய் இருப்பவனொருவனுண்டு. அவன் செயாலேயே தான் அவனுக்கு அப்பொருள் கை கூட வேண்டும் என்றுணர்கின்றான்.

இவ்வாறு தெய்வ மொன்றுண்டு என்னுஞ் சித்தம், நிராசையினால் ஏற்படுமென்பர் அறிவாளர். ''நிராசை யுண்டேல் தெய்வமுண்டாம்'' என்று கூறப்படுகின்றமையில், ஆசையுண்டேல் தெய்வமுண்டாகாது என்பது தானே பெறப்படுகின்றது. நிராசை யென்பது யாதொன்றிலும் ஆசையின்மை யென்று பொருள்படும். ''விடுமின் முற்றவும் என்பர் நம்மாழ்வார். யாவற்றையும் விடாவிடின் ஈசனையடைய முடியாதென்பதே எல்லா அறிஞர்களது கொள்கையாகும்.

இத்தகைய நிராசை அல்லது பற்றறுத்தல் எவ்வாறு மனிதனுக்குண்டாகும் என்று ஊன்றி நோக்கின், அது நிலையாமையாலே உதிக்கின்றதாகக் காணப்படும். தினந் தோறும் மனிதன் பலவிதமான கேடுகள் மக்கட்கு விளைவதைத் தன் கண்கூடாகக் காண்கின்றான். தன் சரீரமே நாளாக நாளாக வளர்வுற்றுப் பின்னர் படிப்படி தேய்வுறு

வதை யுணர்கின்றான்· மக்கள் நோய்வாய்ப்பட்டு வருந்துதலையும், கடைசியில் அவர்களிறத்தலையும் பார்க்கின்றான். யாவரும் ஒரு காலத்தேயிறந்து தீரவேண்டும் என்னும் உண்மை யவன் மனத்திற்குப் புலப்படுகின்றது. அந்த நியாயத்தாலே, தானும் ஒரு காலத்தே யிறக்க வேண்டுமென்னும் பயம் தன்னடைவிலுண்டா கின்றது.

> "நெருநலுள னொருவனின்றில்லை யென்னும்
> பெருமை யுடைத்திவ் வுலகு" (குறள்)

என்னு மொழியினுண்மையை யவன் நன்குணர்ந்து ஒருவனிறந்த காலை யவனைத் தூக்கிச் செல்பவர்களும், ஒரு காலத்திறக்க வேண்டியவர்களே யென்றுணர்கிறான். இவ்வாறு பல்காலும் "செத்தாரைச் சாவார் சுமந்து" செல்வதைக் காணுந்தோறும், அவன் மனத்தே தன்னுடலும் இவ்வாறு ஒரு நாள் தன்க்குப் பின்னால் சாகப் போகிறவர்களால், சுமந்து செல்லப்படும் என்றுணர்கின்றான். அவ்வாறுண்டாகும் உணர்ச்சி, அவன் அறிவுள்ளவனாயிருப்பின், அவன் மனத்தே யாதொரு பயத்தையும், கவலையையும், எழுப்பாது. அவ்வாறின்றி, அவன் அறிவிலியாயின் அவன் சதாகாலமும் தன்னைப் பிறர் சுடலைக்குச் சுமந்து செல்லு நாளை யுன்னி யச்சங் கொண்டு வருந்துவன்.

அறிவுள்ளான் மனத்தே தோன்றும் உணர்ச்சியானது, அவனுக்கு உடல் நிலையாதது என்று நன்கு தோற்றுவிக்கின்றது. உடல் நிலையாததாயின் பின் ஏன் அதன் அலங்காரத்தின் பொருட்டுப், பல்பொருளை நாம் வருந்தித் தேட வேண்டும்? அப்பொருள் கிட்டாக்காலை, கவர்ச்சியுற வேண்டும் என்ற வினாக்கள் தானேயெழுகின்றன. அவ்வாறு சங்கையுண்டாய போது, அதிகமாக உடலில் வைத்த ஆசையை யவன் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிட முயல்கிறான்· தன் உடலின் நிலைமையில்

உள்ள நம்பிக்கை முற்ற முற்ற அதன்பால் அவன் வைத்த ஆசையும் குறைந்து கொண்டே வருகின்றது. நிலையாமையிலுள்ள நம்பிக்கை பூர்ணமானவுடன் நிராசையும் பரிபக்குவமாகின்றது. நிராசை பக்குவமாயின் தெய்வமுண்டென்பதொரு சித்தம் அவன்மனத்தே நிறைகின்றது.

ஆகவே, தெய்வமுண்டென்பதொரு சித்தமுண்டாக வேண்டின், அடிப்படையாக மக்கள் உணர வேண்டியது நிலையாமையே யாகுமென்பது தமிழர் கொள்கை. நிலையாமையே தோன்றி, முற்றிய காலையிலே தான் நிலைத்த தொன்றாகிய தெய்வத்திடையே பற்றுண்டாகும்.

இத்தகைய நிலையாமைக்குக் 'காஞ்சி' யென்றொரு திணைப் பெயரீந்தனர் தமிழர். நிலையாமைக்குத் தனிப் பெயரிட்டு, அதையொரு திணையாகப்பாராட்டியது தமிழ் மொழி யொன்றிலேயன்றி வேறெம் மொழியிலுங் காணப் படவில்லை. இத்தகைய சிறப்புடைய காஞ்சித்திணையிற் பாடப்பட்ட பாடல்கள் பல பண்டைய நூல்களிற் காணப் படுகின்றன. நிலையாமையைப் பல புலவர்களும் தம்தம் பாடல்களிற் கூறியிருக்கின்றனர்.

"ஒரு நால்வர் சுமக்குங் கூட்டை நான்
ஒருவனோ சுமப்பே னிம்மாயக் கூட்டை"
(முத்துத் தாண்டவர்)

என்னுமடிகள் இந்நிலையாமையை நன்கு விளக்குகிறது.

"தேக நிலை யாத நிலை செத்த பிண மோதுஞ்
செல்வநிலையாதபடி சொல்வரிர வாளர்
போக நிலையாமை வலி போ முதுமை கூறும்
புத்தி நிலையாத முறை பித்தர் மொழி வாரான்
மோகநிலை யாமை சொல மூடமன முண்டு
முற்று நிலையாமை மறை கற்றவர்கள்
சொல்வார்

சோக நிலையாத நிலை சொல்லிய ருள் வாரார்
சோலைமலை மேவி வளர் நீல நெடுமாலே!''

என்னுந் திருவடி மாலைப்பாடல் எல்லாவற்றினுடைய நிலையாமையையும் நன்கு எடுத்துரைக்கின்றது.

உலக வாழ்வே துயர் விளைப்பதாகும். ஒருவன் துன்புறின், அவனுற்றார் வருந்துகின்றனர். அவன் அவ்வாறு துன்புறுகின்றமை கண்டு, அவன் பகைவர்கள் சந்தோஷமடைகினறனர். இது என்ன உலகவியற்கை! என வெறுத்து,

''நண்ணா தார் முறுவலிக்க நல்லுற்றார்
கரைந்தேங்க
எண்ணாராத் துயர் விளைக்கு மிவை யென்ன
வுலகியற்கை''

என்று கூறுவர் நம்மாழ்வார்.

''ஓரில்நெய்தல் கறங்க வோரி
லீர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைதலுண்கண் பனி வார்புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பிலாள
னின்னா தம்ம விவ்வுலக
மினிய காண்கி தனியல் புணர்ந்தோரே.''

ஒரு வீட்டிலே சாப்பறை யொலிக்கவும், மற்றொரு மனையில் அதே காலையில் மங்கல முரசு முழங்கவும், பிரிந்தவர்கள் கண்ணீர் சொரியவும், புணர்ந்தவர் பூமாலை சூடவும், இவ்வாறு ஒரு சாரார் துன்புறவும், மற்றவரின் புறவும் படைத்த இறைவன் பண்பறியான் கொல்! இவ் வுலமே இன்னாதாகும். அறிவுடையார் இத்தகைய வின்னா வுலகினுள்ளும் இனியது காண்க என்பது இதன்

சுருக்கமான பொருளாகும். இதனாலே உலகம் பல்வகை யானும் இன்னாதாகக் காணப்படினும், அதே காரணமாக அதனிடம் வெறுப்புடன் வாழ்தல் இயலாதாகலின், அத்தகைய வின்னா வுலகத்தின் தன்மையினின்று இனிய தாகிய வொன்றையறிய முயல்வதே அறிவுடையார் தம் செயலாகும். இவ்வுண்மையை,

''யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலுந் தணி தலு மவற்றோரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்த
லினிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலை இ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று
நீர் வழிப் படூஉம் புணை போலாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனமாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலுமிலமே
சிறியோரை யிகழ்தல தனினுமிலமே!'' .

(புறம் 279)

எல்லா ஊரும் நமது ஊரே. எல்லா மக்களும் நமதுற் றார்களே. நன்மையும் தீமையும் பிறரால் நமக்களிக்கப் படுவதொன்றன்று. நாம் துன்புறுதலும், அத்துன்பம் தணிதலும் அத்தன்மையினவே. இறத்தலும் நாம் புதி தாகக் காண்பதொன்றல்ல. வாழ்வு இனிமையுடைத் தென்று யாம் கூறோம். ஆனால் அதனிடம் முனிவுண்டாய காலை அது இன்னாதென்றும் கூறவில்லை. ஆற்றின் ஒழுக்குடன் செல்லும் புணைபோன்று ஆருயிரானது நன்னெறி வழியொழுக வேண்டும் என்பது கற்றறிந்தார் பால் கண்டு தேர்ந்தனம். அதனால் மாட்சிமைமிக்க பெரி யாரை யாம் பாராட்டுவதுமில்லை. சிறியாரை யிகழ் வதோ, அதனிலுமில்லை என்பது இதன் ஸ்தூலமான

பதப்பொருள். இப்பாடலால், பல பொருள்கள் அறியக் கிடக்கின்றன.

யாதும் ஊரே! யாவருங் கேளிர் என்ற பதங்கள் உலக முழுதும் யாவர்க்குமுரியது என்னும் பெரிய தத்து வத்தையுணர்த்தா நிற்கும். யாவரும் கேளிர் என்றதனால் ஒரு சாதியார் மற்றையோரிடம் வாதாடலோ, அன்றி ஒரு நாட்டார் மற்ற நாட்டினருடன் போரிடுதலோ மிகத் தீமை பயப்பதாகும் என்று பெறப்படுகின்றது. எனவே, சம உரிமையுடன், சகோதரத்வ பாவமே உலக மக்கட்கு வேண்டுமென்பது தெளிவாகின்றது. டால்ஸ்டாய்என்னும் தத்துவஞானி ''தேசபக்தி'' என்று புனைபெயர் பூண்டு உலகை யழிக்காதீர்கள்'' என்று கூறியதாகச் சொல்லப் படுகின்றது. இவ்வுண்மையே ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் புறநானூற்றடியில் பொதிந்து கிடக் கின்றது.

மனிதன் தனக்கு வரும் நன்மை தீமை களைத்தானே ஆக்கிக் கொள்ளுகிறானென்பதையே ''தீதும், நன்றும் பிறர்தர வாரா'' என்னுமடி விளக்கும். வாழ்தலினிதென மகிழாவிடினும் முனிவுடன் அது இன்னாதென்று கூறல் முடியாது. அவ்வாழ்வை நன்னெறிப்பட நடத்தல் வேண்டும்.

சிறியோரை யிகழ்தல் அதனிலுமிலம் என்று கூறிய தனால் ஒருவேளை மாட்சியிற் பெரியாரை வியந்திருந் தாலும் இருக்கலாம். ஆனால், சிறியோரை யாண்டு மிகழ்ந்ததில்லை யென்று கூறா நிற்கும்.

எனவே, ஒரு நல் வாழ்வினிலக்கணம் பின்வரு மாறிருக்க வேண்டுமென்று இப்பாடல் விளக்கும்.

''உலகம் யாவருக்கும் பொதுவான தென்றும், அதில் வாழும் மக்கள் ஒருவர்க் கொருவர் பந்துவே யாகின்றரென்றும் கொண்டு, நமக்கு வரும் நன்மை, தீமைகள் பிறரால் விளைவனவல்ல, அதேபோலவே

நாமடையும் துன்பமும், அதன் நிவிருத்தியும் தன்படியே நிகழ்பவை யென்றுணர்ந்து சாதலுக்கு அஞ்சாராய், இவ்வுலக வாழ்வே பயனென்றுன்னாது, அன்றியவ் வாழ்வின் நிலையாமை தெரிந்தகாலையதை முனியாது, சிறியாரை யாண்டும் இகழாமல் திறவோர் காட்சியிற் றெளிந்தபடி ஆருயிரை நன்னெறியுய்த்தலே அறிவுடையார் செயலாகும்.

இப்பாடலிலும், சாதலும் புதுவதன்றே என்றதனால், நிலைமை யுணர்த்தப்படுகின்றது. இந்நிலையாமையை யறியுங் காலத்தே யின்னாலம்ம விவ்வுலகம் என்று தோன்றும். ஆனால், இந்நிலையாமையறிவால் நிலைத்த தொன்றாகிய ஈசனையும், அவனை எட்டு முறையையு மறிதலே அவ்வின்னா வுலகத்தினினியது காண்டலாகும். மதுரைக் காஞ்சியென்னும் நூல் முழுவதும் இந்நிலை யாமையையே கூறும்.

இவ்வாறு நெறியொழுகிய தமிழர் யார், யாரை வணங்கினர் என்று ஆராய்ந்து பார்த்தல் அவசியமாகின்றது. மனிதனுக்கு இன்றியமையாதனவான ஒளி, காற்று முதலியவற்றை வணங்கல் அக்காலத்தே யிருந்திருக்கின்றதென்றே தோன்றுகின்றது. பஞ்ச பூதங்களை வணங்கல் உண்டென்பதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன.

''இன்னிசை யெழிலியை யிறப்ப வுமியைவதோ''
''கனைகதிர்க்கனலியைக் காமுறவியைவதோ''
''வளி தருஞ் செல்வனை வாழ்த்தலும் வல்லதோ''

எனவரும் பாலைக் கலியடிகள் இதனை உணர்த்தும்.

இவ்வடிகள் பொருள் வயிற்றலைவன் பிரிய அவன் செல்லுஞ் சுரத்தே வெயிலும், காற்றும் அவனை வாட்டுமேயென்று தலைவி வருந்துவதாகக் கூறப்படுங் காலை வருகின்றன. அங்குத்தலைவி, தோழியை

நோக்கி, என் காதலற்கு அதிக வெப்பஞ் சுடாதபடியும் அதிக வாடை துன்புறுத்தா வண்ணமும் சூரியனையும், வாயு பகவானையும், வாழ்த்தல் இயைவதோ என்று வினவுகின்றாள். அவ்வாறு வணங்கி வாழ்த்தும் வழக்க மின்றாமேல் இவ்வினா, எழுவதற்கிடமில்லையன்றோ?

இன்னும் சந்திரனை வணங்கும் வழக்கம், பெண்களி டையே மிகுதியுமிருந்ததாகக் காணப்படுகின்றது. தமிழ்த் துறைகளிலே 'பிறை தொழுகென்றல்'' எனவொரு துறை யுண்டு. அது குறிப்பது யாதெனில்,

''தலைவி தன் மனக்குகந்த மணாளனொருவனை வரிப்பள்.. அவன் யாரென்றோ, அல்லது அவ்வாறு அவள் மனதில் ஒருவனை மணாளனாக அடைவதென்று சங்கல் பித்துக் கொண்டிருக்கின்றனளென்றோ ஒருவருமறியார். தோழிக்குந் தெரியாது. ஆனால், தலைவியின் முகத்திலும் ஒழுக்கத்திலும் காணப்படும் மாறுபாடுகளையும், குறி களையுங் கொண்டு தோழி, தலைவி யாரோ ஒருவனை வரித்தனள் என்றுணர்கின்றாள். அவ்வையந்தீர்தற் பொருட்டு, நிலா முற்றத்திலே தலைவியுடனிருக்குங் காலை பிறை தோன்ற, தோழி தலைவியைப் பிறையை வணங்கும்படி கூறுவாள். பிறையைத் தொழுவாளாயின், அவள் மனத்தே ஒருவனையும் வரிக்கவில்லையென்று தோழியுணர்வாள். அவ்வாறின்றி தலைவி, பிறையைத் தொழ மறுப்பாளாயின் அவள் தன் கணவனாதற்குரி யானை நிச்சயித்து விட்டாளென்று தோழி யுணந்து கொள்வாள்."

இத்துறை கன்னிப் பெண்டிர், மதியை வணங்கி வந்தனர் என்பதற்குப் போதிய சான்றாகும்.

இதனால் வாயு, சந்திரன், சூரியன் இவர்களை வணங்கல் அக்காலத்தே பயிலப்பட்டு வந்ததென்பது தெற்றென விளங்குகின்றது.

தமிழர் தமது நிலத்தை ஐந்திணைப்படுத்திக் கூறுவர். முல்லை, பாலை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனத் திணைகள் ஐந்து வகைப்படும். தமிழர்ஒவ்வொரு திணைக் கும் உரித்தானவிடமென்று ஐவகை நிலத்தினையும் குறிப் பர். ஒவ்வோர் நிலத்திற்கும் ஒவ்வோர் தெய்வம் தொழு தற்குரியதென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால், தொல்காப்பியத்தில் நிலத்தை நால்வகையாக மட்டுமே கூறப்பட்டது. பாலை தனியாகக் கூறப்படவில்லை. ஒவ்வொரு நிலத்திலும் சாரமற்ற தாவர வர்க்கங்கள் கூட வளராத பாகத்தைப் பாலையாகக் கொள்ளவேண்டும். எனவே காடும், காடு சார்ந்தவிடமும் முல்லையாகவும், மலையும், மலைச்சார்ந்தவிடமும், குறிஞ்சியாகவும், நாடும், நாடு சார்ந்தவிடமும் மருதமாகவும், கடலும், கடல் சார்ந்தவிடமும் நெய்தலாகவும் கூறப்படும். இவற்றிற்கு முறையே திருமால், முருகன், இந்திரன், வருணன் முதலியோர் தெய்வமாகக் குறிப்பிடப் பட்டனர்.

(இவை சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் ஆற்றிய சொற்பொழிவுகளின் சுருக்கம்)

□

# 2. ஆதிமந்தியார்

இவர் பெண்பாலர் என்பதும், இவர் நல்லிசைப் புலமைவாய்ந்தவர் என்பதும்,

> மக்க ணுதலிய வகனைந் திணையுஞ்
> கட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்'

என்னும் அகத்திணையியற், சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர்,

> 'மள்ளர் குழீஇய விழவி னானும்
> மகளிர் தழீஇய துணங்கை யானும்
> யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
> யானுமோ ராடுகள மகளே யென்கைக்
> கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
> பீடுகெழு குரிசிலு மாடுகள மகனே. (குறுந்—31)

என்னும் பாடலை எடுத்தோதி, 'இது காதலற் கெடுத்த ஆதிமந்திபாட்டு' எனவுரைத்தமையானும், இச்செய்யுள் சான்றோராற் றொகுக்கப்பட்ட குறுந்தொகையுளொன் றாதலானும் அறியப்படும். இதனுள், 'காதலற்கெடுத்த' என்றது, கணவரைக் காணப்பெறாத என்றவாறு. ஈண்டு, கெடுத்த என்பதனை 'அரசுகெடுத் தலமரு மல்லற் காலை' (சிலப்-அந்தி) எற்கெடுத்திரங்கி' (மணி-5) 'யானைதன் வயப்பிடி கெடுத்து மாழாந்த தொத்து' (சிந், கன-34) 'ஒருபொற் பூங்கொடி யென்னு நீராளை யிங்கே கெடுத்தேன்' (சிந். கன-38) என்னு மிடங்களிற்போலக் கொள்க. இவர் காதலனைக் காணப்

---

செந்தமிழ்க் கட்டுரைத் தொகுப்பான "நல்லிசைப் புலமை மெல்லியலார்கள்" என்ற நூலிருந்து எடுக்கப்பட்டது.

பெறாதவா றென்னையெனிற் கூறுவேன்: இவர், திருமாவளவனெனச் சிறந்த கரிகாற்சோழனின் அருமை மகளாவர். சேரநாட்டு மன்னனாகிய ஆட்டனத்தி என்பானை மணந்தவர். இவர், தங்காதலனுடன் கரிகாற் சோழனாற் கழாஅர் என்னும் சிறந்த ஊரிற் காவிரி முன்றுறையிற் சிறப்பித்துக் கொண்டாடப்பட்ட புதுப் புனல் விழாவுக்குச் சென்றாராக, ஆங்குக் கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினனாய், இயற்கை வனப் பாலும் செயற்கையணியாலும் கண்டாரனைவரும் விரும்புந் தகையனாய், யாரினும் மேம்பட்டு ஆடுதற் றொழிலாற் சிறந்த தம் உயிர்க்காதலனாகிய அவ் வாட்டனத்தியை நீர்விளையாடுகையிற் காவிரி வவ்வி தனால், அவனை நாட்டிலும் ஊரிலும் சேரியிலும் வீரர்தொக்க வில்விழவுகளிலும் மகளிர் தொக்க துணங்கையாடிடங்களிலும் யாண்டுந் தேடிக் காணப் பெறாது, புனல்கொண்டொளித்ததோ கடல்கொண்டு புக்கதோ என்று கலுழ்ந்த கண்ணராய் மருண்டசிந்தை யாராய் அலமந்து, அக்காவிரி ஓடும் வழியெல்லாம் ஓடிக் கடல்வாய்ப்புக்கு அவனையே கூவி யரற்றினார்க்கு, அக்கடலே அவ்வாட்டனத்தியைக் கொணர்ந்துவந்து முன்னிறுத்திக் காட்டிய வளவில், ஆங்கவனைத் தழுவிக் கொண்டு பொற்கொடி போலப் போந்தார் என்ப. இதனாற் காதலற்கெடுத்தவாறு உணர்க. இவ்வரியகதை நெடுந்தொகையினும் சிலப்பதிகாரத்தும் எடுத்தாளப் பட்டுள்ளது. இது பரணர் முதலிய நல்லிசைப்புலவரால் ஆங்காங்கெடுத்துப் பாராட்டப்படுவது. தலைவர் பிரி வுக்குத் தலைவியர் வருந்துமிடனெல்லாம் இவ்வாதிமந்தி யார்க்கு நேர்ந்த பெருந்துயரே எடுத்து உவமை கூறப் படுவது. இக்கதையோடொட்டி ஆராயுமிடத்து, மேற் குறித்த பாடல் இவரது பெருந்துயர்நிலையிலுரைத்த தென்பதும், தம்முடைய நாயகன் நாடுகெழு குரிசிலாகிய மாண்டக்கோன் என்பதும், அவன் மைந்தர்க்கு மைந்த

னாய் மகளிர்க்குச் சாயலாய் இருபாலாராலும் விரும்பப் படுவதனாதலால், மைந்தர் வில்விழவாடிடங்களிலும் மகளிர்துணங்கையாடிடங்களிலும் மற்றுமவன் இருத்தற் குத்தக்குழியெல்லாந் தேடிக் காணதுழன்றாரென்பதும், வில்விழவாடுகளத்தும் துணங்கையாடுகளத்தும் அவனைத் தேடுதல் காரணமாகப் பல்காற் சுற்றித்திரிதலாற் றாமும் ஆடுகளமகளே போறலின், 'யானுமோ ராடுகள மகளே' என்றாரென்பதும், தங்கணவன் ஆடுதற் றொழி லிற் சிறந்தோன் என்பதும், அவனைக் காணாமையாற் றம்மேனி பெரிது மெலிந்தார் என்பதும் தெளியப்படுதல் காண்க. இவர் தங்கணவன் யாவரும் விரும்பும் பேரழ குடையனாதலால் காவிரி அவனது நலனயந்து வவ்விய தென்று சிறப்பித்துக் கூறுவர். இவர் பெயரும் இவரது காதலன் பெயரும் சிறுபான்மை முதற்சொல்லொழித்து மந்தி எனவும் அத்தி எனவும் வழங்கவும்படும். இவற்றை யெல்லாம்,

'காதலற் கெடுத்த் சிறுமையொடு நோய்கூர்ந்
தாதிமந்தி போலப் பேதுற்
றலந்தனெ னுழல்வேன் கொல்லோ'.
(வெள்ளி வீதியார். அகம்-45)

'கச்சினன் கழலினன் றேந்தார் மார்பினன்
வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியற்
சுரியலம் பொருநனைக் காண்டி ரோவென
வாதி மந்தி பேதுற் றினையச்
சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகு
மந்தண் காவிரி போல.' (பரணர். அகம்-76)

'கழா அர்ப் பெருந்துறை விழவி னாடு
மீட்டெழிற் பொலிந்த வேந்துகுவவு மொய்ம்பி
னாட்ட னத்தி நலனயந் துரைஇத்
தாழிருங் கதுப்பிற் காவிரி வவ்வலின்
மாதிரந் துழைஇ மதிமருண் டுழந்த

வாதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி யன்ன மாண்புகழ் பெறீஇயர்.
(பரணர். அகம் 222)

'அணிகிளர் சாந்தி னம்பட் டிமைப்பக்
கொடுங்குழை மகளிரி னொடுங்கிய விருக்கை
யறியா மையி னழிந்த நெஞ்சி
னேற்றிய லெழினடைப் பொலிந்த முன்பிற்
றோட்டிருஞ் சுரிதன் மணந்த பித்தை
யாட்ட னத்தியைக் காணீ ரோவென
நாட்டி னாட்டி னூரி னூரிற்
கடல்கொண் டன்றெனப் புனல்கொண் டன்றெனக்
கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த
வாதி மந்தி' (பரணர். அகம் 236)

' ... ... ... உரைசான்ற
மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
றன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவி றோளாயோ வென்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட வவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்'

(சிலப்பதிகாரம், வஞ்சினமாலை)

என்பனவற்றாற் கண்டு ஆராய்ந்து கொள்க நெடுந்தொகை41-ஆம் பாட்டில், நன்னன் ஏற்றை நறும்பூணத்தி முதலிய சிலர், சேரன் படைத்தலைவராகக் கூறப்படுதலால், அத்தியை வஞ்சிக்கோன் என்றலும் பொருந்தும். கரிகால் வளவன் புதுப்புனல் விழவு கொண்டாடுதல் சிலப்பதிகாரத்துக் கடலாடுகாதையினுங் கண்டது. 'விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன், றண்பதங் கொள்ளுந் தலைநாட் போல' என்பதன் உரையா

னுணர்க. அறிவாற் கலைமகளே எனச் சிறந்த ஔவை யார் பாடியருளிய, 'நெடுமலைச் சிலம்பின்' என்னும் நெடுந்தொகையில், வெள்ளி வீதியைப் போல கன்றுஞ் செலவயர்ந் திசினால் யனே' என வருதலானே வெள்ளி வீதியார் ஔவையாரின் முற்பட்டவராதல் அறியப்படுவது. அவ் வெள்ளி வீதியார், 'ஆதி மந்தி போலப் பேதுற்றலந்தனெ னுழல்வேன் கொல்லோ' (அகம்.45) என்றமையானே, இவ்வாதிமந்தியார் அவர்க்கும் முற்பட்டவராதல் தெளியப்படும். செந்தமிழ்ச் சரிவாராய்ச்சி செவ்விதிற் புரிந்த இக்காலத்தறிஞர்* கரிகாற்சோழன் காலம் கி.பி. 55 முதல் 95 இறுதியாமெனத் தெளிவித்தலால், இவ்வாதிமந்தியாரும் அவன் மகளெனல் பற்றி அக்காலத்தவரே யாதல் தெரிந்து கொள்க. இவரது நுண்ணிய அறிவும் திண்ணிய கற்பும் இவற்றான் ஒருவா றறியத்தக்கது. இனி, வெள்ளி வீதியாரைப் பற்றி ஓதுவேன்.

---

* மகா-ள. ள. ஸ்ரீ வி. கனகசபைப் பிள்ளையவர்களுடைய 'Tamils Eighteen Hundred Years' Ago Madras Review—Page 433

# 3. வெள்ளி வீதியார்

இவர் பெண்பாலார் என்பதும், நல்லிசைப் புலமை யுடையார் என்பதும் நச்சினார்க்கினியர், 'மக்கணுதலிய வகனைந் திணையுஞ், சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர், என்னுந் தொல்காப்பிய அகத்திணையியற் சூத்திரவுரையில்,

'கன்று முண்ணாது கலத்தினும் படாஅது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇய வேண்டுந்
திதலை யல்குலென் மாமைக் கவினே. (குறுந்-27)

இது வெள்ளி வீதியார் பாட்டு. 'மள்ளர் குழீஇய... மகனே' இது காதலற்கெடுத்த ஆதிமந்தி பாட்டு. இவை தத்தம் பெயர் கூறிற் புறமாம் என்றஞ்சி வாளாது கூறினார்' எனக்கூறிய வாற்றான் நன்குணரலாகும். தம்பெயர் கூறிற் புறமாமென்றஞ்சி வாளாது கூறிய இச் செய்யுள், பெண்பாற் கூற்றாதலுங் கண்டுகொள்க. ஔவையார் பாடியருளிய, 'ஓங்குமலைச் சிலம்பின்' என்னும் அகப்பாட்டில்,

'நெறிபடு கவலைய நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்
செலவயர்ந் திசினால் யானே' (அகம். 147)

என்பதனால், செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் நிரம்பா நீளிடைபில் யானும் வெள்ளிவீதியைப் போலச் செல்லத் துணிந்தேன் எனக் கூறியவாற்றானும், நச்சி

னார்க்கினியர். 'இதனுள் வெள்ளிவீதியைப் போலச் செல்லத் துணிந்து யான் பலவற்றிற்கும் புலந்திருந்து பிரிந்தோரிடத்தினின்றும் பிரிந்தபெயர்வுக்குத் தோணலந் தொலைய உயிர்செலச் சாஅய் இரங்கிப் பிறிது மருந்தின்மையிற் செயலற்றேனென மிகவும்இரங்கியவாறு மெய்ப்பாடு பறறியுணர்க' (தொல்-பொ-அகத் 15) எனக் கூறியவாற்றானும், இவர் தம் அருமைத் தலைவனைப் பிரிய நேர்ந்துழித் தமித் துயிர்வாழ்த லாற்றாது, அவனு டனுறை வேட்கை மீதூர்ந்து அவன் சென்றுழிச் செல்ல வேண்டிக் காடும் பிறவுங் கடந்து சென்றனரென்பது உய்த்துணரப்படுவது. 'முந்நீர் வழக்க மகடூஉவோ டில்லை' (தொல்-பொ-அகத்-34) என்னும் புல னெறி வழக்கிற்கு மாறாய்த் தலைவனைப் பிரிந்துறைய லாற்றா உழுவலன்பால் அறிவிற் சிறந்த பெருந்தகை மகளார் ஒருவர் நிகழ்த்திய அருஞ்செயலாதலின், ஔவை யார் என்னும் அருந்தமிழ்ச் செல்வியார், கற்பின்பாற் றலைவி, பிரிந்ததலைவன்-பாற் செல்லத் துணிந்தமைக்கு எடுத்துக்காட்டினராவர். இவ் வெள்ளி வீதியார் புல னெறி வழக்கெலா முணர்ந்த நல்லிசைப் புலமை மெல்லிய லாரா யிருந்தும் தம் தலைவன் மாட்டு வைத்த அன்பு மிகுதியான் அவற்றையிகந்து அவன் பாற் செல்லத் துணிந்தமையானே இஃதெடுத்தாளப்பட்டதாகும். இவர் பாடல்களுட் பெரும்பான்மையாகப் பிரிவு பற்றி வருவன- வெல்லாம் இவர் தம் தலைவனைப் பிரிந்த காலத்துப் பாடியனவேயாம். புலனெறிவழக்கினாற் பிரிவுடன்பட்டும் ஆற்றலாகாப் பிரிவுத் துயரான் அறிவு மயங்கி அவனைக் காண்டல் வேட்கையே மீதூர்ந்து பெரும் பாலைநிலமெல் லாஞ் செல்லத் துணிந்த இவரது அரிய பெரிய அன்பின்ற கைமை யாவரானும் அறியலாவது. 'அன்பென்ப தொன் றின்றன்மை யமரு மறிந்த தன்றால்' என்றார் கம்ப நாடரும். அயோத்தியரிறை பின்னே வைதேகி என்று ரைக்கும் அன்ன நடை அணங்கு காடெலாம் நடந்ததும்,

இத்தமிழ்நாட்டுக் கண்ணகி என்னும் கற்புடையாட்டி கோவலன் பின் சென்றதும் இப்புலனெறி வழக்கிற்கு மாறாயினும் அன்பின்றகைமையான் ஆன்றோரெல்லா ரானும் புகழ்ந்து பாராட்டப்படுதல் போல, இதனையுங் கொள்க. இதனோடொட்டியாராய்வுழி, மேல் தம்பெயர் கூறிற் புறமாமென்றஞ்சி வாளாது கூறிற், 'கன்று முண் ணாது' என்னுஞ் செய்யுள், இவர், தம் தலைவன் பிரிய லுற்றபோது தம்மையும் உடன் கொண்டு செல்லாமைக்குக் கவன்று பாடியதாக உய்த்துணரப்படும். இனித் தலைவி, கற்பினுற் பிரிவாற்றாது எம்மையும் உடன்கொண்டு சென் மினெனக் கூறுவனவும் உண்டென்பது, முற்குறித்த 'முந்நீர் வழக்கம்' என்பதற்கு நச்சினார்க்கினியருரை நோக்கி யறிக.

'என்னீ ரறியாதீர் போல விவைகூறி
னின்னீர வல்ல நெடுந்தகா யெம்மையு
மன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு' (கலித்தொகை)

என்று தலைவி கூறுமாற்றான் உணர்க. இவ்வாறு தலைவி கூறுவன தலைவன் செலவழுங்குதற்குக் காரண மாவனவஃலது உடன்கொண்டு சேறற்கான வில்லை என்பர். இவர் அவ்வாறன்றித் தலைவன்பாற் செல்ல வேண்டி நெறிபடு கவலைய நிரம்பா நீளிடையினுஞ் சென்றமையானே அருமை பற்றி இவர் பெருஞ்செயல் எடுத்தாளப்பட்டதாகும் என்பது தெள்ளிது. இனி, இவர் தலைவனுடன் செல்ல வேண்டினரல்லது, அவன் பிரிந்த பின்பு அவன் பாற் செல்லத் துணிந்தனரில்லையெனின், அஃது எல்லா மகளிர்க்கும் ஒத்தலான் இவரது செயலொன் றையே சிறப்பித்து, 'வெள்ளி வீதியைப் போல நன்றுஞ் செலவயர்ந் திசினால் யானே' எனக் கூறார் என்க.

இனி, இவர் தந்தலைவனைப் பிரியலுற்றுழிப் பாடியருளிய இக் 'கன்று முண்ணாது' என்னுஞ் செய்யுளொன்றே இவரது நல்லிசைப் புலமையினை நன்கு புலப்படுத்தும். இது சொல்லானும், பொருளானும் சுவை பெரிது பயப்பதென்பது ஆய்ந்தறியத்தக்கது கன்று வயிறாரவுண்ட பின்னே கலத்திற் கறத்தல் அறமென்னுங் கருத்தாற் கன்றுண்டலை முன்னும் கலத்திற்படுதலைப் பின்னும் வைத்தோதினார். 'கறவைகன்றார்த்திக் கலநிறை பொழியும்' என மணிமேகலை துறவினும் (அறவாணர் தொழுத காதை) 'கன்றருத்தி மங்கையர் கலநிறை பொழிதர எனச்சிந்தாமணியினும் (நாமகள்-40) கூறுதல் காண்க.

* 'விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாட் டொட்டுச் சிறந்தன் றீம்பா
லறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்'

தன்மைத்தாகலின் 'நல்லான்' என்றார். நல்லான் றீம்பால் கன்று முண்ணாமற் கலத்தினும் படாமல் வெறிதே நிலத்தே உகுந்தொழிந்தாற் போல எனது மாமை நிறத்தொடு கூடிய அழகு எனக்குமாகாமல் என் தலைவற்கும் உதவாமற் பசலையான் உண்டு கழிய வேண்டும் என்றார் என்க. என்னை என்பது,

'என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்'

என்புழிப் போல, என்றலைவன் என்னும் பொருட்டு பொருண்மேற் சேறல் முதலாயின. மனைவியோடில்லை என்பதனால், மகளிர்க்கு இவ்வரிய பிரிவுத்துயர் அநுபவத்திலேயுறுவது என்னுங் கருத்தால், 'வேண்டும், என்று கூறினார். இவ்வாறு இவர் பாடியருளிய செவ்விய கூரிய

* மணிமேகலை ஆபுத்திரன்றிற மறிவித்தகாதை. விடு நிலம்-மக்களால் விளைவிற்குதவாமல் விடப்பட்ட நிலம்.

தீஞ்சொல் வவ்விய பாடல்கள் நற்றிணையில் 3-ம், குறுந்தொகையில் 8-ம், நெடுந்தொகையில் 2-ம், திருவள்ளுவ மாலையில் 1-ம், ஆகப் பதினான்குள்ளன. இவற்றுள்,

வாடலுழுஞ்சில்' என்னும் நெடுந்தொகைச் செய்யுட்கண் இவர், திதியன் என்பவன் குறுக்கை யென்னும் ஊர்ப் புறத்து * அன்னியொடு பொருது அவ்வன்னியின் காவன் மரமாகிய புன்னையினை வேரொடு தடிந்த கதையினையும், காதலற்கெடுத்த ஆதிமந்தி கதையினையும், † சேரனொருவன் வேலாற் கடலோட்டிய கதையினையும் எடுத்துக் கூறியுள்ளார். திருவள்ளுவ மாலையுள்,

> 'செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
> பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
> அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
> யிதற்குரிய ரல்லாதா ரில்.'

என்பது இவர் பாடியது. இதன்கண் வேதத்தினைச் செய்யா மொழி என வழங்கியதனால், இவர் வேதம் நித்தியமெனவுங் கருதிய கோட்பாடுடையரென்பதறியப் படுவது. இவ்வெண்பா வானேஇவர் வேதவழக்கொடுபட்ட கொள்கையினரென்பதும் எளிதினுணரத்தகும். திருக்

---

படுபுல்-ஒருவர் முயற்சியானன்றித் தானே யுண்டாய புல். அப்புல்லும் விளைத்தாற்போல யாண்டும் ஒத்துண் டாகாமையான் 'மருங்கின்' என்றார். ஆர்ந்து-ஒருவர் கொணர்ந்திடுதலின்றித் தானே சென்று மேய்ந்து எ-று. 'நெடுநில மருங்கின் மக்கள்" என்றதனால் அங்ஙனம் விட்ட நிலமும் மிகச் சிறிதாதலறியப்படும். மக்கட்கெல் லாம் என்றது குழவி முதல் முதியோரிறுதியாக எல்லா மக்கட்கும் எ-று. பிறந்தநாட் டொட்டு-அம்மக்கள் தோன்றிய நாட்டொடங்கி. இதனாற் சாந்துணையும் என்பது கூறாமலுணரப்படும். கொலையுந் துன்பமு மில்லாமல் எய்தவருந் தீவிய உணவாகலாற் 'சிறந்த தன் றீம்பால்' என்றார். தான் புல்லையுண்டும் பிறர்க்கு இனிய பாலையளித்தலின் 'அறந்தரு நெஞ்சோ டருள் சுரந் தூட்டும்" என்றார் எனவுணர்க.

குறளைப் பொய்யாமொழி என்னும் பெயரான் வழங்கி னாரும் இவரே யாவர். இவர்,

'காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்
தாதி மந்திபோலப் பேதுற்
றலந்தனெ னுழல்வேன் கொல்லோ' (அகம்-45)

என்பதனால், இவர் ஆதிமந்தியார்க்குப் பிற்பட்ட காலத் தவர் என்பதும், ஔவையார், 'வெள்ளி வீதியைப் போல, (அகம்-147) என்பதனால் அவ் ஔவையாருக்கு முற் பட்டகாலத்தவரென்பதும் நன்குணரத்தகும். இவரது நல்லி சைப் புலமையின் பல்வளம் பலருமறிய இவரது இன்பப் பகுதியின் பொருட்பாடல்களை ஈண்டுத் தருகின்றேன். இவற்றானும் இவர் தங்கணவனைத் தேடி எங்கும் உழன்றமை ஆராய்ந்து கொள்க.

## நற்றிணை

(1) சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே
துறைபோ கறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே
யெம்மூர் வந்தெம் முண்டுறைத் துழைஇச்
சினைக்கெடிற் றார்கையை யவரூர்ப் பெயர்தி
யனையவன் பினையோ பெருமற வியையோ
ஆங்கட் டீம்புன லீங்கட் பரக்குங்
கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே
இது காமமிக்க கழிபடர்கிளவி—(74)

---

*இவ்வன்னியுடைய ஊர் அன்னியூர். அது, தேவாரத் திருப்பதிகளுள் ஒன்று.

† இவன் சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டு வன். (புறம் 366)

(2) திங்களுந் திகழ்வா னேர்தரு மிமிழ்நீர்ப்
பொங்குதிரைப் புணரியும் பாடோ வாதே
யொலிசிறந் தோதமும் பெயரும் மலிபுனற்
பல்பூங் கானன் முள்ளிலைத் தாழை
சோறுசொரி குடவையிற் கூம்புமுகை யவிழ
வளிபரந் தூட்டும் விளிவி னாற்றமொடு
மையிரும் பனைமிசைப் பைதல வுயவு
மன்றிலு மென்புற நரலு மென்றிவ்
விரல்கவர்ந் துழந்த கவர்வின் யாழ்
யாம முய்யாமை நின்றது
காமம் பெரிதே களைநரோ விலரே.

இது காமமிக்க கழிபடர் கிளவி: மீதூர்ந்த தலைமகள் சொல்லியது. (335)

(3) நிலவே, நீனிற விசும்பிற் பல்கதிர் பரப்பிப்
பான்மலி கடலிற் பரந்துபட் டன்றே
யூரே, யொலிமரூஉஞ் சும்மையொடு மலிபுதொகுபீண்
கலிகெழு மறுகின் விழவய ரும்மே (டிக்
வானே, பூமலர் கஞலிய பொழிலகந் தோறுந்
தாமமர் துணையொடு வண்டிமி ரும்மே
யானே, புனையிழை ஞெகிழ்த்த புலம்புகொ
ளவலமொடு
கனையிருங் கங்குலுங் கண்படை யிலனே
அதனால், என்னொடு பொருங்கொலிவ் வுலக
முலகமொடு பொருங்கொலென் னவலமுறு
(நெஞ்சே.

இது வேட்கை பெருகத் தாங்ககில்லாளாய் ஆற்றாமை மீதூர்கின்றாள் சொல்லியது. (385)

## குறுந்தொகை

(4) 'கன்று முண்ணாது..............கவினே'

இது பிரிவிடையாற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. (27)

(5) * காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
யகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

இஃது இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது. (44)

(6) * இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நொண்டுகொளற் கரிதே.
இது கழற்றெதிர்மறை. (58)

(7) * நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டி னாட்டி னூரி னூரிற்
குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரு முளரோநங் காத லோரே.

---

* இதனை அகத்திணைக்கேற்ற துறைவகையின் அமைத்துக் கருத்துரை கூறினாரேனும் வெள்ளிவீதியார் தங்கணவனைப் பிரிந்து தேடிச்செல்வழித் தங் கால்கள் நடக்கலாகாது செலவு தப்பியமையினையும் தங் கண்கள் அவனையே தேடி ஒளியிழந்தமையினையும் விசும்பின் மீனிற் பலர் பிறரைக் கண்டும் அவ்விசும்பிற் றிங்கள் போன்ற தம் கணவனைக் காணாமல் உழன்றமையினையுமே இது குறிப்பதென்று கொள்க. இவ்வாறே தருமிக்குப் பொற் கிழியளிப்பான் வேண்டிச் செண்பகமாறன் உளக்கருத்தமைத்து இறையனாராற் பாடப்பட்ட 'கொங்குதேர் வாழ்க்கை' என்னுஞ் செய்யுளும் இக்குறுந்தொகையிற் கோக்கப்பட்டு அகத் திணைக்கேற்ற துறைவகை பெறுவதும் ஈண்டு நோக்கிக்கொள்க.

* இதனானும் இவ் வெள்ளிவீதியார் தங்கணவனைத் தேடியுழன்றமை நன்குணரப்படும்.

இது பிரிவிடையழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது : நீ யவர் பிரிந்தாரென் றாற்றாயாகின்றதென்னை? யான் அவருள்வழி யறிந்து தூதுவிட்டுக் கொணர்வேன்; நின் ஆற்றாமை நீங்குக எனத் தோழி தலைமகளை ஆற்றுவித்தது. தோழி தூது விடுவாளாகத் தலைமகள் தனதாற்றாமையாற் கூறியதூஉமாம் (130)

(8) அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போ ரிருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னு மாக்களொ
டின்றுபெரி தென்னு மாங்கண தவையே.

இது தலைமகன்றமர் வரைவொடு வந்து சொல்லாடாநின்றுழி வரைவு மறுப்பவோ எனக் கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது. (146)

(9) அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டமர்ந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறை
தீம்புன னெரிதர வீந்துக் காங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைநில்லாதே.

இஃது உடன்போக்குணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது. (149)

(10) சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டிற்
றெற்றென விறீஇயரோ வைய மற்றியா
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர், பசுமீன் சொரிந்த மண்டை போல

வெமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே.

இது கற்புக்காலத்துத் தெளிவிடை விலங்கியது; இனித்தோழி வரைவு நீட்டித்தவழி வரைவுகடாய தூஉமாம். (189)

11 வெண்மணல் விரிந்த வீததை கானற்
றண்ணந் துறைவன் றணவா வூங்கே
வாலிழை மகளிர் விழவணிக் கூட்டு
மாலையோ வறிவேன் மன்னே மாலை
நிலம்பரந் தன்ன புன்கணொடு
புலம்புடைத் தாகுத லறியேன் யானே.

இது பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிரழிந்தது. (386)

### அகநானூறு

(12) வாட லுழுஞ்சில் வளைநெற் றந்துண
ராடுகளப் பறையி னரிப்பன வொலிப்பக்
கோடை நீடிய வியன்பெருங் குன்றத்து
நீரி லாராற்று நிவப்பன களிறட்
டாளி லத்தத் துழுவை யுகளுங்
காடிறந் தனரே காதலர் மாமை
யரிநுண் பசலை பாஅய்ப் பீரத்
தெழின்மலர் புரைதல் வேண்டு மலரே
யன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
றொன்னிலை முழுமுத றுமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை வயிரிய
ரின்னிசை யார்ப்பினும் பெரிதே யானே
காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்
தாதி மந்தி போலப் பேதுற்
றலந்தனெ னுழல்வென் கொல்லோ
பொலந்தார்க்

கடல்கால் கிளர்ந்த வென்றி நல்வேல்
வான வரம்ப னடன்முனைக் கலங்கிய
வுடைமதி லோரரண் போல
அஞ்சுவரு நோயொடு துஞ்சா தேனே.

என்பது, வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. (45)

(13) பாம்புடை விடா பனிநீ ரிட்டுத்துறைத்
தேங்கலந் தொழுக யாறுநிறைந் தனவே
பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன வல்லுகிர் வயப்பிணவு
கடிகொள வழங்கா ராறே யாயிடை
யெல்லிற் றென்னான் வென்வே லேந்தி
நசைதர வந்த நன்ன ராள
னெஞ்சுபழு தாக வறுவியன் பெயரி
னின்றிப் பொழுதும் யான்வா ழலனே
யெவன்கொல் வாழி தோழிநம் மிடைமுலைச்
சுணங்கணி முற்றத் தாரம் போலவுஞ்
சிலம்புநீடு சோலைச் சிதர்தூங்கு நளிர்ப்பி
னிலங்குவெள் ளருவி போலவு
நிலங்கொண் டனவாற் றிங்களங் கதிரே.

என்பது, இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது. (362)

(14) 'செய்யாமொழி'— (திருவள்ளுவமாலை 23)

பொருள் விரித்துணருந் தெருளுடைய மனத்தர்க்கெல்லாம் இப்பதினான்கு பாடல்களும் பதினான்குலகேயாம் எனின் அது வியப்பன்று; இத்துணையுங் கூறியவாற்றான் வெள்ளி வீதியார் வரலாறு ஒருவாறு உணரப்படும்.

□

# 4. வஞ்சி மாநகர்

பெரும்புலவர் 1917இல் சங்க நூல்களில் கூறப்படும் சேரர் தலைநகரான வஞ்சி எங்குளது என்பது பற்றி வஞ்சி மாநகர் என்ற தலைப்பில் விரிவான நூல் எழுதினார். இப்பொழுது திருச்சி மாவட்டத்திலுள்ள கருவூரே வஞ்சி யென்று நிலைநிறுத்தினார். அந்நூல் முழுவதையும் பதிப் பிக்க இயலாமையால் அதனைச் சுருக்கி இங்கு தந்துள் ளோம். இக்கருத்தையே பண்டிதர் மு. இராகவையங்கார் 'சேரன் செங்குட்டுவன்' என்ற நூலிலும் வலியுறுத் தினார். பின்னால், கருவூரில் கண்டு எடுத்த சிலா சாசனங் களும், பிராமி கல்வெட்டுகளும், அமராவதி ஆற்றுப் படுகையில் அகப்பட்ட சேர, ரோமானிய நாணயங்களும் மோதிரங்களும் இவ்வுண்மையை மேலும் மெய்ப்பித்தன.

மூவேந்தரில் சேரனை ''குடபுலங் காவலர்'' என நூல்கள் சிறப்பிக்கும். இச்சேர நாட்டில் கொங்கு நாடும் அடங்கும். பலவிடங்களில், கொங்கனைச் சேரனென்றே சங்கச் செய்யுள்கள் குறிப்பிடுகின்றன. அருணகிரியாரும் ''சேரர் கொங்குவைகாவூர் நன்னாடதில் ஆவினன்குடி'' என்று பாடுகிறார். இவ்வாவினன்குடிக்கும், கொல்லி மலைக்கும் இடையே காவிரி, ஆன்பொருநை(அமராவதி), குடவனாறு எனப் பெயரிய ஆறுகள் உள்ளன. வஞ்சி என்று இலக்கிய வழக்கிலும், கருவூர் என்று உலக வழக் கிலும் விளங்கிய சேரர் தலைநகர் ஆன் பொருநை நதிக் கரையில் உள்ளது.

சங்க நூல் கருவூரை
''கடும்பகட்டு யானை நெடுந் தேர்க்கோதை
திருமா வியன் நகர்க் கருவூர்'' (அகம் 93)
''வஞ்சிப்புறம் திலலைக்கும்
கல்லென் பொருநை மணலினும்'' (புறம் 347)

''காவிரியன்றியும் பூவிரி புனலொரு
மூன்றுடன் கூடிய கூடல் அளையை" (பதிற்-50)

சேரர் தலைநகர் என்றும்,வஞ்சியென்றும், ஆன்பொருநை நதிக் கரையில் உள்ளது என்றும், காவிரி,ஆன்பொருநை, குடவன் ஆறு மூன்றும் சேர்ந்த கூடல் அருகில் உள்ளது என்றும் தெரிவிக்கும்.

கருவூர் மேல் கடற்கரையிலுள்ள அஞ்சைக் களம் என்று கூறுவாரும் உண்டு. இது இலக்கியச் சான்றுகளுக்கும், சிலாசாசன வழக்குகளுக்கும் முரண்படும். சேரர் தலைநகர் வஞ்சி சோழ நாட்டு எல்லையில் இருந்தது என்பதைப் புறநானூறு 13ஆம் பாட்டு நன்கு விளக்கும். இப்பாட்டுக் கூறுவதாவது : சோழன் முடித்தலைக் கோப் பெரு நற்கிள்ளி கருவூர் செல்வாளைக் கண்டு, சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறையின் வேண்மாடத்தி விருந்த உறையூர் ஏணிச்சேரி முட மோசியார் கூறுகிறார்:

''களிற்று மிசையோனாகிய சோழன் களிறு மதம் பட்டதால் உன்னாட்டு எல்லையில் புகுந்துள்ளான். இவன் உன்னை எதிர்க்க வரவில்லை. அவனைநீ அழிக்க வேண்டாம்'' என்று தம் நாட்டு அரசனைக் காப்பாற்றுகிறார். சோழ நாட்டுஎல்லை அருகில் சேரன் மாளிகை இருத்தலால்தான் இது நிகழ்ந்தது என்பது புலனாகும். வன்னி மரமிகுதியால் வஞ்சுளாரண்யம்(பேரூர்ப்புராணம்)என்றும் பால்வள மிகுதியால் ஆனிலையென்றும் இக்கருவூர் வருணிக்கப்படும். திருஞான சம்பந்தர் நாயனார்புராணத்தில், சேக்கிழார் ''செல்வக் கருவூர் திருவானிலை' என்று இந்நகரின் செல்வச் சிறப்பைக் குறிப்பிடுவர். வையைத் துறைவன் என்று பாண்டியரையும், பொன்னித்துறைவன் என்று சோழனையும், பொருநைத்துறைவன் (ஆன் பொருநை-அமராவதி) என்று சேரனையும் கவிகள் கூறுவர்.துறைமுக நகரான முசிறி சுள்ளியம் பேரியாறு கடலில்

கலக்குமிடத்தில் உள்ளதாகச் சங்க நூல் (அகம்-149) கூறும்.

சங்கரசோழன் உலாவுடையார் ''வஞ்சிக்கும், ஓதை மகோதைக்கும், மாமதுரை இஞ்சிக்கும், கொற்கைக்கும்'' என்று அகநகரான வஞ்சி மாநகரையும், மதுரையையும், கடல்நகரங்களான மகோதை அஞ்சைக் களத்தையும் பாண்டிய நாட்டுக் கொற்கையையும் பிரித்துக் கூறுவார். மணிமேகலையும்,

''விரிநிரை வந்து வியன் நகர் விழுங்க
ஒருதனி போயினன் உலக மன்னவன்
அருந்தவன் தன்னுடன் ஆயிழை தாயரும்
வருந்தாது ஏகி வஞ்சியுட் புக்கனர்''

என்று கூறுதலால் காவிரிப் பூம்பட்டினம் கடலால் அழிந்து பட்டபோது, மணிமேகலையின் தாயாரும் அறவண அடிகளாரும், கடற் கோளால் அழிவு ஏற்படாது அக நாட்டுரான வஞ்சிமாநகர் புக்கனர் என்று பொருள் கொண்டால், வஞ்சி, கடற்கரை நகரன்று என்று தெளிவாகும். இதையே சிலப்பதிகாரத்திலும், பதிற்றுப்பத்திலும் பல இடங்களில் பார்க்கலாம். நீலகிரி, பழனிமலை, கொல்லிமலை சேர நாட்டைச் சேர்ந்ததாகச் சங்க நூல்கள் தெரிவிக்கும். இன்றும் இப்பகுதியில் சேரன் கோடு, சேரன்பாடி என்ற ஊர்களும், சிலப்பதிகாரம் கூறும் குணவாயிலும் (குண வாசல்) உள்ளன.

கருவூர்ப் புலவர்கள் எண்ணிக்கை சோழர் உறையூர்ப் புலவர் தொகைக்கும் மேம்பட்டது. சேரர்க்குரிய பொதினி மலையே நெடுவேள் குன்றமாம். இப்பழனிமலைச் சாரலில்தான் கண்ணகி தன் பூதவுடம்பு நீக்கிக் கணவருடன் தேவருலகம் சென்றனள் என்று சிலப்பதிகாரம் கூறும். கருவூரையடுத்து தும்பிவாடி (யானைக் கட்டடம்) மாநிலை முதலிய ஊர்கள் தலைநகரின் சிறப்பை ஒட்டி வந்த ஊர்களேயாம். (மாநிலை-குதிரைகள் தங்குமிடம்)

தலைநகராகையால் "நிதி துஞ்சு மாநகர்" என்று இந்நகரைக் கவிகள் சிறப்பிப்பர். இதன் அருகிலுள்ள புகலூர் மலையிலுள்ள பிராமி சாசனங்கள் கருவூரைச் சேரர் தலை நகர் என்று விளக்கும்.

இளங்கோ அடிகளும் தம் சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் இவ்வஞ்சிமாநகரைக் குறிப்பிட்டுள்ளார். சேரர் தம் தலைநகரத்தில் பத்தினித் தெய்வமாகக் கோயில் கொள்ளும் சிறப்பால், சேர இளவலாகிய இளங்கோ,

"கொங்கச் செல்வி குடவரையாட்டி" எனக் கண்ணகியைச் சிறப்பிப்பர். கண்ணகி "வென் வேலான் குன்றின் விளையாட்டியான்அகலேன்(வேட்டுவவரி:சிலப்பதிகாரம்) என்று கூறுவதை நினைத்து தென்தமிழ்ப்பாவை என்று வர்ணிப்பார். சேரன் செங்குட்டுவன் வட நாடு புகுதற்கு முன் ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்தோன் (திருமால்) பிரசாதம் கொண்டு சிலர் வாழ்த்தினர் என்று சிலப்பதிகாரம் கால்கோள் காதையில் இளங்கோ குறிப்பிடுவார். இதைச் சிலர் திருவனந்தபுரம் என்றும் இரவிபுரம் (பாஸ்கரபுரம்) என்றும் கூறுவர் என்று அரும்பத உரைகாரர் கூறுவர். முதல்நாள் இரவு வாளும், குடையும் சித்தப் படுத்தி மறுநாள் காலைப்பிரஸாதம் பெற வேண்டுமாயின் ஆடகமாடமும் (பொற்கோயிலும்), தலைநகரும் ஒரே இடத்தில் இருக்க வேண்டியதாகிறது. பிற இலக்கியச் சான்றுகளும் ஆடகமாடம் கருவூரில் இருக்கிறது என்பதை வலியுறுத்தும். இன்றும் குலசேகரர் பாடிய வித்துவக் கோடும், (அறிஞர் கூட்டம்) திருமால் கோயிலும், வஞ்சியம்மன் கோயிலும் கருவூரில் உள்ளன. பாஸ்கரபுரம் கருவூரின் மற்றொரு பெயராகும்.

### சிலா சாசன வழக்கும் அகழ்வாராய்ச்சிச் சான்றுகளும்:

தமிழ் நாட்டிலேயே கருவூரில் தான் அதிகமான ரோமானிய நாணயங்கள் கிடைத்துள்ளன. அவை

ரோமானிய அரசர்கள் அகஸ்டஸ், டைபேரியஸ், கிளாடியஸ் போன்ற கி. பி முதல் நூற்றாண்டைச் சேர்ந்த அரசர்களின் நாணயங்களாகும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தாலமி என்னும் மேற்றிசையாளர் தாமெழுதிய பூகோள நூலில் கேரளப் பதிகளின் தலைநகராகக் கருவூர் என்று கூறி, அதை உள்நாட்டு ஊராகவும் குறிப்பிட்டுள்ளார். 'மங்கல மடந்தை கோட்டம்' என்பது தேவந்தியின் வரலாறு உரைக்கும் மாடலன் கூற்றாக இளங்கோ கூறுவர். இது கொங்கு நாட்டில் பழனிமலைத் தொடர் மலைமேல் அமைந்த மங்கலா தேவி கோயிலாகும். இக் கோயிலுக்குக் குலசேகரர் என்ற சேர அரசர் (கி·பி. 1669) கம்பங்கூடலூரில் நிலம் அளித்த செய்தி சென்னைக் கருவூலங் (No 288, 1928 & 29) களில் உள்ளது.

கருவூரையடுத்த புகலூர்க்குன்றில் கிடைத்த தமிழ்ப் பிராமிசாஸனமே கருவூரை வஞ்சிமாநகர்என்றுதுணியவும் அஃது செல்வச் சிறப்புப் பெற்ற நகரென்று அறியவும், சேரர் வரலாறு கூறும் பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட சேர வமிசத்தினர் பெயர்களை அறியவும் நமக்கு உதவியது. சங்க இலக்கியங்கள் யாவும் உண்மையே. அவற்றில் கூறப்பட்ட அரசர்கள் பற்றிய செய்திகள் யாவும் உண்மையே எனபதை நிலை நிறுத்தியது. இப்பிராமி சாசனத் தொடர் இரண்டு காலகட்டங்களில்கண்டுபிடிக்கப்பட்டது.

1927 இல் கண்ட தொடர் :

''கருவூர்ப் பொன் வாணிகன்'' ''கோசிபன் ஆதன்'' இந்நகரைச் சங்க இலக்கியம் கூறும் கருவூராகக் காட்டும். குலோத்துங்க சோழன் கல்வெட்டு ''வஞ்சிமாநகரான கருவூர்'' என்று கூறும் (MadrasEp Rep 355 of 1927—28) பின் பல்வேறு காலகட்டங்களில் கண்டு எடுத்த சான்று

களைப் பின் குறிப்பாக இங்குசேர்த்துள்ளோம். 1965 இல் புகளூர்க் கல்வெட்டு முழுவதும் திரு ஐ. மகாதேவன் அவர்களால் வெளியிடப்பட்டது.

''அமணன் யாற்றூர் செங்காயபன் உறை
கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
பெருங் கடுங்கோன் மகன் இளங்கடுங்கோ
இளங்கோ ஆக அறுத்த கல்''

இது சரித்திர முக்யத்துவம் வாய்ந்த தொடராகும். சேரவமிசத்தவரான இரும் பொறை வழியினர் மூவரைக் குறிப்பிடுகிறது. ஆதன் செல்லிரும் பொறை 13ஆம் புறப் பாட்டில் கூறப்பட்ட அரசனாக இருக்கலாம். கடுங்கோ, சிக்கராப்பள்ளி துஞ்சிய செல்வக் கடுங்கோவாழியாதனாக இருக்குமானால் பதிற்றுப்பற்று ஏழாம்பத்தில் புகழப்படு கின்றான். ஜைனர்கள் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றி ருந்தனர் என்றும் தெரிகிறது. ''கொல்லிப் பொறையன்'' என்று வில் பொறித்த காசும் கொல்லிக்காவலன் சேரரே என்பதை நிரூபித்தது. அமராவதிப்படுகையில் சமீபத்தில் கண்டெடுத்த தங்க மோதிரம் கி. பி. முதல் நூற்றாண்டில் செய்தது. எழிலே உருவான ஆணும் பெண்ணும் இணைந்து நிற்கும் வடிவம். இவளைப் போன்ற எழில் நங்கையே சங்க இலக்கியங்களில் கொல்லிப் பாவையாகக் கபிலர், பரணர், ஔவையார் போன்ற புலவர்களால் பாடப்படுகிறாள். இது போன்றே இன்னும் சில மோதி ரங்கள் கிடைத்தன. இவற்றில் தித்தன் என்ற வேளிர் அரசன் குறிப்பிடப்படுகிறான். இவன் கருவூரை அடுத்து ஆண்ட குறுநில மன்னன். (தித்தன்—ரா. இராகவையங் கார்- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1949).

இன்னும், அமராவதிப் படுகையிலும், கருவூரை யடுத்த ஊர்ப்பகுதிகளிலிருந்தும் கிடைக்கும் சான்றுகள், கருவூரே சேரர் தலைநகரான வஞ்சிமாநகர் என்பதை நிலைநிறுத்தும். சங்க காலத்துக்குப் பின் கொங்கு நாடு

சோழ நாட்டின் ஒரு பகுதியாகியது. வேளிர் போல் தமிழ் நாட்டில் வதிந்த கோசர்கள் கொங்குநாட்டின் ஒரு பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். கோசர் வதிந்த ஊர்களுள் முக்கியமானது கோசர் புத்தூராகும். இதுவே பின் கோயம்புத்தூராக மருவியது. (கோசர் : ரா. இராகவையங்கார், அண்ணாமலை நகர் 1951). மலைநாடு சேரநாட்டின் ஒரு பகுதியாகி கொடுங்கோளூரைத் தலைநகராகக் கொண்டு விளங்கியது. இன்றும் வஞ்சிபாலர் என்று மலையாள அரசர்கள் போற்றப்படுகிறார்கள்.

(1917, 1932 இல் வெளியான ஆசிரியரின் ''வஞ்சிமா நகரி''ன் சுருக்கம்)

□

# 5. கம்பர் காலம்

கம்பரது வரலாற்றால் அவரது காலம் இஃதாகுமென ஒருவாறு ஆராய்ந்து கொள்ளலாகும். ஆயினும் அதனைப் பலருந் தெளியுமாறு வெளிப்பட வைத்து விளக்கி ஈண்டுச் சில கூறுவேன். கம்பர் வரலாற்றால், அவர் சடையற்குயிர்த்துணைவர் எனவும் ஓரங்கலுருத்திரனாற் சிறப்பிக்கப்பட்டனரெனவும் தெரிதலோடு சடையவள்ளலுக்குச் சங்கரன் தந்தையெனவும் ஒட்டக்கூத்தர் அச்சங்கரனுக்கு முதலில் உதவித் தொழில் புரிந்து கொண்டிருந்தனரெனவும் தெளிதலுமாயிற்று. சங்கர சோழனுலாவுடையார்,

"கூட்டிய சீர்தந்த வெண்ணெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனுந்—தெள்ளித்தன்
முன்னாய கரினவன் முதுலக் கண்ணிதொறும்
பொன்னபிரஞ் சொரிந்த 'பூபதியும்"

எனவுரைத்ததனாற், கூத்தர், விக்கிரம சோழன் முதலாக மூவர் சோழரைப் பாடினாரென்றறியப்படுதலின், அவர் அச்சோழர் மூவர் காலத்தவரென்பது நன்கறிந்தது. அச்சோழர் மூவரும், விக்கிரமனும் அவன் மகன் குலோத்துங்கனும் அக்குலோத்துங்கன் மகன் இராசராசனும் ஆவரென்பது அக்கூத்தர் பாடியனவாற்றானுந் தெளிந்தது. இவ்வுண்மை 'கூத்தருங் குலோத்துங்கன் கோவையும், என்னும் ஆராய்ச்சியினும் நன்கு தெளிவிக்கப்பட்டதாம். (செந்தமிழ், தொகுதி 3,) மற்றும் புராதன கால ஆராய்ச்சியுடையார் பலரும் விக்கிரமன் கி பி. ஆண்டு 1118 முதல் 1132 வரைக்கும், குலோத்துங்கன்

கி.பி.1132 முதல் 1162 வரைக்கும்இராசராசன்கி.பி.1162 முதல் 1200க்கு மேற்சில ஆண்டுகள் வரைக்கும் அரசாண்டார்களெனக் கூறுவர். இதனாற் கம்பருக்குயிர்த் துணைவனான சடையவள்ளலுடைய தந்தையாகிய சங்கரனுக்கு உதவித் தொழில் புரிந்து கொண்டிருந்த ஒட்டக்கூத்தர், கி.பி. 1118க்கும் கி. பி. 1200க்கும் இடைப்பட்ட காலத்தே பெயர் சிறந்திருந்தவரென்று கொள்ளலாகும். விக்கிரமன் அரசாட்சிக் காலம் 14 ஆண்டேயாகக் கூத்தர் அக்காலத்தே புலமை நிரம்பினராகி அவனை உலாவாற் பாடினரென்பதனால், அவர் அவ் விக்கிரமன் ஆண்டெய்தற்கு முன்னே பிறந்தவராதல் தெள்ளிதாம். கூத்தர், விக்கிரமன் முதலாக மூன்றுதலை முறையரசர் காலத்தவராதலால் அவர் விக்கிரம அரசாட்சியினிறுதிக் காலத்தேதான் மிகுந்த புலமை நிரம்பியவராகி, அவனை உலாவிற்பாடினராவர் எனக் கூறுதலாகும். விக்கிரமனாட்சி 1132-க்கு மேற்படாமையால், கூத்தர் உலாப்பாடிய அவனாட்சியின் இறுதிக்காலம் 1130-க்கும் பிற்பட்டிருத்தல் பொருந்தாதாம். கூத்தர் விக்கிரமனை உலாப்பாடும் போது அவருக்கு வயது இருபதிற்குறைந்திராதென வைத்துக் கொள்ளலாகும். விக்கிரம சோழன் கூத்தருக்கு முதன் முதல் பரிசில் பல ; ல்கச் சிறப்புச் செய்தபோது அவர் 'இடுக்கட்புண்பாடு நிரப்புக் கொண்டுழன்றிரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களந், திடுக்குறஞ்சம்வெஞ் சினத்துச் செம்பியன் றிருக்கைப் பங்கயஞ் சிறக்கத் தந்தன'' என்பதனாற் தம்வறுமைப்பட்ட நிலையை எடுத்துரைத்தலின் அக்காலம், குடும்பவருத்தம் நெஞ்சிற் றேற்றி அதனைத் தீர்த்தற்கு அவர் உழன்றதோர் பெரும்பிராயகால மாகுமென்றும் ஊகித்தல் கூடும். தமிழ் நாவலர் சரிதைக்கண் 'கடித்தது நச்சரவு' என்னுஞ் செய்யுட்தலைப்பில் ''சரசுவதி தம்பலங் கொடுக்கக் கவிதையுண்டாகிய கூத்த முதலியோர் அரும்பைத் தொள்ளாயிரம் பாடும் போது விக்கிரம சோழன் கேட்டு ஒரு கவியை ஓட்டச் சொல்லென்று சொன்னபோது பாடியது''

எனவமைந்திருத்தலால், கூத்தருக்குக் கவிதையுண்டாகிய காலம் விக்கிரம சோழன் ஆட்சிக்காலமேயென்பது அறியப்படும். கூத்தர் குலோத்துங்கன் ஆட்சிக்காலமாகிய முப்பதியாண்டையும் கடந்து இராசராசனது நெடிதாட்சிக் காலத்தில் முற்பகுதியின் பெரும்பாகத்தும் இருந்தாராவரென்று அறியப்படுவதால் அவர் விக்கிரமன் காலத்திற் கவிதையுண்டானவராகி அவன் உலாவாற்பாடியபோது அதிக வயதாயினராகக் கொள்ளுதற்கும் இயையாதாம். இவற்றாற் கூத்தர் விக்கிரமனுலாப் பாடியபோது இருபது பிராயத்தினரெனவும் அது விக்கிரமன் இறுதியாட்சிக் காலமாகிய கி. பி. 1130—க்கு அடுத்ததாமெனவும் கொள்ளின், கூத்தர் பிறந்த காலம் கி.பி. 1110 எனக் கூறலாம்.

சடையவள்ளலுடைய தந்தையாகிய சங்கரனுக்கு உதவித் தொழில் புரிந்து கொண்டிருந்த கூத்தர் கி. பி. 1110—ஆம் ஆண்டினை அடுத்துப் பிறந்தவரானால் கூத்தரை அத்தொழிற்கு அமைத்துக் கொண்ட சங்கரன் கூத்தரின் மிகமுத்தோனாவனென்று ஊகித்தலாகும். கூத்தர் சங்கரனுக்கு உதவித்தொழில் புரிந்தது அவருக்குக்கவிதையுண்டாவதற்கு முன்னேயாம். அக்காலம் கூத்தருடைய இளமைக் காலமாகத் துணியப்படும். அன்றியும் கூத்தர் விக்கிரமனுலாவின் கண் அச்சோழனிருமருங்கும் 'மந்திரிகள் படைத்தலைவர் சிற்றரசர், பெருங்காணியாளர் எனப் பலர் மொய்த் தீண்ட உலாப்போந்தான்' எனக் கூறுமிடத்து விக்கிரமன் தந்தையாகிய அபயன் காலத்தே கலிங்கம் சென்று கொண்ட கருணாகரத்தொண்டைமான் முதலிய பலருடன்,

"...... ...... ...... ...மோட்டானக்
கொங்கைக் குலத்துக் குடகக் குவடொடித்த
செங்கைக் களிற்றுத் திரிகர்த்தனும்"

என்பதனால் திரிகர்த்தனைக் கூறுதலின், விக்கிரம சோழன் காலத்தே திரிகர்த்தனாகிய சடையன் சிறந்

திருந்தனன் என்பது தெளியப்படும். சங்கரன் மகனான வெண்ணெய்ச் சடையனையே திரிகர்த்தனன் என்பர் என்பது 'அராமரொடும் பாமாலை சூடும் குலமுடையானை...வெண்ணெய்த்திரிகர்த்தனையே, எனவும் ''பாரிலுள்ளோர் கண்ணாக வாழும் வெண்ணெய்த்திரிகர்த்தன்' எனவும் மேல்வரலாற்றுளெடுத்துக்காட்டிய மேற்கோள்களால் நன்கறிந்தது. விக்கிரம சோழனதிருமருங்கும் மொய்த்தீண்டிய இப்பலர் வரிசையில்,

''.................. ...........மட்டையெழக்
கர்தித் திருநாடர் கட்டரணங் கட்டழித்தி
சேதித் திருநாடர் செல்வனும்''

என்பதனாற் சேதிராயனும் கூறப்பட்டுள்ளான். சேதிராயன் என்பான் சடையனுடனிருந்து கம்பருடைய ஏரெழுபதினைக் கேட்டவன் என்பதும் அவன் அவ்வரங்கேற்றத்திடையே பாம்பாற் கடியுண்டு, பின்னர்க் கம்பருடைய தெய்வவாக்கால் உயிர்ப்பிக்கப்பட்டான் என்பதும் முன்னை வரலாற்றாற் தெரிந்தனவாம். (செந்தமிழ்த் தொகுதி 3, பக்கம் —7) இச்சேதிராயன் காலத்தே திரிகர்த்தன் எனப்பட்டான். சடையனல்லாமல் வேறில்லாமையால் விக்கிரமசோழ னுலாவிற் கூறப்பட்ட திரிகர்த்தன் சடையனே யாவனெனத் தெளிந்து கொள்க. இதனாற் கம்பர்பால் ஏரெழுபது கேட்ட சடையனும் சேதிராயனும், கூத்தர் விக்கிரமனை யுலாவாற்பாடும் போதே சிறப்புற்றிருந்தனராதல் அறியலாகும். இவ்விக்கிரமனுலாவிற் கூத்தர் சங்கரனைக் கூறாமற் சடையனையே கூறுதலால், அவர் விக்கிரமனுலாப் பாடும்போது சங்கமன் இறந்தனன் எனவும் சடையனே அக்குடியிற் தலைசிறந்தனன் எனவும் கொள்ளலாம். கூத்தருடைய இளமைக்காலத்தே அவரை உதவித் தொழிற்கு அமர்த்திக்கொண்ட சங்கரன், அவர் புலமையெய்தி விக்கிரமனைப் பாடியபோது இல்லையாயினான் என்பதனால், அச்சங்கரன் இறந்த காலம் கூத்தருடைய

16 பிராயத்திற்கும் 20 பிராயத்திற்கும் இடைப்பட்டதாகு மென்று உய்த்துணரலாகும். கூத்தர் பிறந்த காலம் கி.பி. 1110 எனக் கொள்ளப்படுதலாற் சங்கரனிறந்த காலம் கி.பி. 1127ஆம் ஆண்டினை அடுத்ததாகுமென்று ஊகிக்கப்படும்.

கம்பர், சங்கரனுடைய இளைய மகனும், சரராம னாகிய சடையனுக்குத் தம்பியும் ஆகிய இணையார மார்பன் என்பானை "என்னுடைய தம்பி சரராமனுக் கிளையான்... இணையாரமார்பனிவன்" என்று பாண்டி யனுக்கு அறியவுரைத்தலாற் கம்பராற் றம்பியென்று சிறப்பிக்கப்பட்ட இணையாரமார்பன் பிறத்தற்கு முன்னே கம்பர் பிறந்தவராதல் தெளியப்படும். இதனாற் கம்பர் பிறந்த காலம் சங்கரன் இணையாரமார்பனைப் பிறப்பித் தற்குமுன்னே யாமெனத் தேறலாம். கம்பர் தெய்வவரத் தினாற் கவிசொல்லிய நாளில் முதன் முதற் பாடிய 'மேட்டெருமை...' என்னும் வெண்பாவின்கண்ணே வெண்ணெய்நல்லூரைச் சடையனூர் என்று கூறாமல் 'நாட்டில், அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லு, முடையான் சரராமனூர்' எனவே கூறுதலாற் கம்பர் கவித்திறம் எய்தற்குமுன்னே சடையன் கொடைத்திறம் பயின்று சிறந்தனன் எனவும் அக்காலத்துச் சங்கரன் இல்லையாயினான் எனவும் துணியலாகும். கம்பர் கவித்திறமெய்தற்கு முன்னே சடையன் கொடையாற் சிறந்தனன் என்பதனாலும் கூத்தர் புலமை நிரம்பி விக்கிரமனைப்பாடும் போதே சடையனாகிய திரிகர்த்தன் சிறந்து விளங்கினன் என்பதனாலும் சடையன் கம்பருக்கு மூத்தோனாகக் கருதப்படுகின்றான்.* அங்ஙனமாயின் கம்பர் பிறந்தது, சங்கரன் காலத்தே சடையன் பிறந்த தற்குப்பின்னும் இணையாரமார்பன் பிறத்தற்குமுன்னும் ஆம் எனத் தெளியப்படும். கம்பர் கவித்திறம் எய்தற்கு முன்னே சங்கரன் இறந்துவிட்டான் என்பதனாலும் கூத்தர் இளமைக்காலமெல்லாம் சங்கரனுக்கு உதவித்

தொழில் புரிந்துகொண்டிருந்தனர் என்பதனாலும் கூத்தர் விளங்கிய விக்கிரமன் காலத்தே கம்பரும் புலமையாற் சிறந்தது புலப்படாமையாலும் கம்பர் கூத்தரும் இளைய ராகவே துணியப்படுவர். கூத்தர் பிறந்தது கி. பி. 1110 ஆம் ஆண்டினை அடுத்தும், ஆதலின், கம்பர் பிறந்தகால மும் அந்தக் கி·பி.1110-க்கும் ஆம் ஆண்டினை அடுத்தும், ஆதலின், கம்பர் பிறந்த காலமும் அந்தக் கி.பி.1110க்கும் கி.பி.1127க்கும் இடைப்பட்டதாகுமென்று தெளிந்து கொள்க. இந்நிலையிற் சடையனையும்கூத்தரையும் ஒத்த பிராயத் தினராகக் கொள்ளுதலுமாம்.

''என்னுடைய தம்பி சரராமனுக்கிளையான்'' என் புழிச்சரராமனுக்கிளையனாதலால்எனக்கும் தம்பியானான் என்பதே கருத்தன்றி, என்னுடைய தம்பியாகிய சரரா மனுக்கிளையான் என்பது கருத்தில்லையாதல், 'அடியேற் சாருஞ்சரரா மனுக்குமொரு தம்பியெனக்கம்பன் புகழும், எனச் சோழ மண்டலதகமுடையார் கூறியதனானே தெளிந்துகொள்க. அவ்விருவருக்கும் கம்பர் 10 வருடம் இளையராகக் கருதுதலும் இழுக்காகலாம். அவ்வாறு கொண்டு கருதிற் கம்பர் பிறந்த கி.பி.1120-ஆம் ஆண் டினை அடுத்ததாமென உய்த்துணரப்படும். இதனாற் கம்பர் காலத்துக்கு முதலெல்லை சங்கரனது இறுதிக் காலத்தையடுத்ததென்பதும், அதுவே விக்கிரமனது ஆட்சிக்காலமென்பதும் உணர்ந்து கொள்க.

இனிக்கம்பருக்கு அடைப்பை கட்டிச் சிறப்புச் செய்த ஓரங்கல் உருத்திரன் காலத்தை ஆராயுமிடத்து ஓரங்கற் கணபதியரசர்களுள் இவ்வுருத்திரன் என்னும் பெயரினர் இருவரிருந்தமை காணப்படும். அவருள் ஒருவன் கி.பி. 1162க்குச் சிறிதுமுன் முதல் கி,பி.1197க்குச் சிறிது பின்வரை அரசாட்சி புரிந்தனன் எனவும் மற்றொருவன் கி.பி.1288 முதல் கி.பி.1323 வரை அரசாண்டனன் எனவும், புராதனசாசன ஆராய்ச்சி செய்தார் கூறுவர்.

இவருள் பின்னோனாகிய உருத்திரன் காலந் தொட்டேதான் பிரதாபருத்திராப்தம் வழங்கியது.

இச் சங்கத்துள்ள சில பழைய தமிழ் ஏடுகளில் அவ்வவ்வேடு எழுதப்புக்க (அல்லது எழுதிமுடித்த) அப்தம் ஆண்டு திங்கள் நாள் முதலியவற்றை வரைந்த பிரதிகளும் உள்ளன. இதன்கட் கூறப்பட்ட மற்றை அப்தங்களெல்லாம் இப்போது வழங்குவனவற்றோடு கணக்கிடுமளவிற் பொருந்தியனவே யாதலால் இதன் பிரதாபருத்திராப்தமும் உண்மையுடையதேயாமெனலாம். இதன்கட்கண்ட சகாப்தம் முதலியவற்றாலிவ்வேடு நூற்றாறு வருடங்களுக்கு முற்பட்டதா மெனத் துணியலாம். இதனாலும், மற்றும் பல்வேறு சான்றுகளாலும் ஆராயுமிடத்து கம்பருடைய காலத்திற்கு இறுதியெல்லை முதலாம் உருத்திரனுடைய அரசாட்சியின் இறுதிக்காலமே யாமென்பதுணர்ந்து கொள்க.

கி.பி.1162-க்குப் பிற்பட்டகாலம் இராசராசன் காலமாதலால் கம்பர் ஓரங்கல் உருத்திரன்பாற்சென்று சிறப்பெய்தியது அவன் காலத்தேயாதல் ஒருதலையாம். இதனாற் கம்பரை முனிந்த வனும் கொன்றவனும் ஆகிய சோழன் இராசராசனே என்பதும் உய்த்துணரப்படும். இவன் காலத்தோடு சோழருடைய பேரரசாட்சி சிதைந்ததெனவும் பின் சிற்சில சிற்றரசர்களால் நாடு ஆளப்பட்டபோது ஓரங்கல்வேந்தர் படையெடுத்துச் சோணாட்டைக் கைப்பற்றிக் கொண்டு அதனை 14 ஆம் நூற்றாண்டு வரை ஆண்டனரெனவும் புராதனசாசன ஆராய்ச்சியாற் றெரிகிறது. இதனாலே "என் பாட்டம்பு நின்குலத்தைச் சுட்டெரிக்குமென்றே துணி" என்று கல்வியிற் பெரியரால் முனியப்பட்டவன் இவ்விராசராசனே யாவனென்று கொள்க. கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியதும் இவ்விராசராசன் காலமேயாகும். கூத்தர்

தக்கயாகப்பரணி பாடிய காலமும் இவன் காலமேயாம். இவ்விராசராசன் காலம் கம்பருடைய 42-வயதுக்கு மேற்பட்டதாகலின் அதுவே இவரதுளத்தூய்மைக்கும் பத்தியொழுக்கங்கட்கும் உலகியலுணர்ச்சிக்கும் வீட்டு நெறி விழைவுக்கும் ஏற்றதாகும். கி.பி. 1162க்கு முன்னெல்லாம் இவரது யௌவனகாலமாம். அக்காலங் குலோத்துங்கன் காலமே. அக்காலத்தே தான் இவர் வல்லியை விழைந்ததும் ஏரெழுபது பாடியதும் மும்மணிக் கோவை பாடியதும் ஆம். இவரது கவித்திறத்துக்கு உவந்து இவருக்குப் பெருஞ்சிறப் பெல்லாஞ் செய்தவன் குலோத்துங்கன் ஆவன். அவன் இவருடைய 42-ஆம் பிராயத்தோடு இறந்தனன். இதன் பின்னேதான் ''இராமாயணமெனும்பத்தி வெள்ளம்' கம்பருடைய அறிவுடை நெஞ்சிற் குடிகொண்டதாகும்.

இனி, ''எண்ணிய சகாத்த மெண்ணூற்றேழின்மேற் சடையன் வாழ்வு நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்பநாடன், பண்ணியவிராம காதை" என்பதனாற் கம்பர் இராமாயணம் பாடியரங்கேற்றிய காலம் சகாப்தம் 807- என்று கூறுதலாற் கம்பர் காலமே மேற்காட்டின காலத்துக்கு 200 வருடம் முற்பட்டதன்றோ வெனிற் கூறுவேன். சகாப்தம் 807— என்பது கி.பி. 885 ஆகும். அது விக்கிரமன் காலத்துக்கு நெடுந்தூரமானது. அங்ஙனமாயின் இஃது ஒட்டக்கூத்தர் காலமும் அன்று; கூத்தர்காலமன்றாயிற் சங்கரன் காலமுமன்று. சங்கரன் காலமன்றாயிற் சடையன், சேதிராயன் காலமுமன்று. சடையன் சேதிராயன் காலமன்றாயிற் கம்பர் காலமுமன்றாகும். ஓரங்கலுருத்திரன் காலமும் இதன்றாதல் கூற வேண்டா. இங்ஙனம் கம்பர் காலத்தவராகத் தெளியப்பட்ட வேறுபலர் காலங்கட்கும் இக் கி. பி.885 பொருந்தாதாதலின் அது கம்பருக்கும் பொருந்தா தென்பது ஒரு தலை. மேற்காட்டிய பிரபல பிரமாணங்களாற் றெளியப்பட்ட கம்பர் காலத்தோடு பொருந்த வைத்து நோக்கின்,

இந்த "எண்ணிய சகாத்தம்" என்ற செய்யுள் சிறிது பாடம்பிழைத்ததென்றேனும் வேறொரு பொருளுடைய தென்றேனும் கருதப்படும். பாடம் பிழைத்தலாவது 'எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின் மேல், எனவிருந் ததை 'எண்ணியசகர்த்தம் எண்ணூற்றேழின்மேல்' எனக் கொண்டதாம். அஃதாவது எண்ணி சகாத்தம் என்கிற நூற்றேழின்மேல், என்றவாறாம். ஆயிரம் என்ற பேரெண்ணையொழித்துக் கொல்லமாண்டு முதலிய வற்றை 80-ஆம் ஆண்டு என்பது முதலாகச் சிற்றெண் ணையே வழங்கல் இக்கால வழக்காதல்போலப் பண்டும் சகாப்தம் ஆயிரத்து நூற்றேழினைச் சகாப்தம் நூற்றே ழென வழங்கியதென்க. இனிவேறொரு பொருள் பெறுத லாவது "எண்ணி சகாத்தம் எண்ணூற்றேழின் மேல்," என்ற பாடமே கருதிய சகாத்தம் எண்ணப்பட்ட நூற்றே ழின் மேல் என்ற பொருள் படுதல். இவ்விருவகையிலும் ஆயிரமாகிய பேரெண்ணை யொழித்து உலகவழக்கு நெறியே தழுவிச் சிற்றெண்ணானே கூறியதாமெனக் கொண்டால், சகாப்தம் 1107 என்பது கி.பி. 1185 ஆம் ஆண்டாம். இந்தக் கி.பி.1185 ஆம் ஆண்டு கம்பருக்கு 65 ஆம் பிராயமெனக் கொள்ளப்படுமாதலின் அது கம்பர் காலமேயாதல் தேறப்படும். இந்த 'எண்ணி சகாத்தம்' என்ற செய்யுளை இவ்வாறு இணக்கிக்கொள்வது, மேற் காட்டின உண்மைப் பிரமாணங்களோடு பொருந்த நோக்குமிடத்து உசிதமேயாகும். அன்றியும், இஃது "இராமாயணமெனும் பத்தி வெள்ளங் குடிகொண்ட கோயி" லாகிய இராமாநுஜ முனிவரர் நிலைநாட்டிய வைணவம் தழைத்தோங்குகின்ற காலமாகும். கம்பர் சடகோபரந்தாதிக் கண்ணே (இராமாநுச நூற்றந்தாதி, செய்யுள் —8) "கூட்டங்கடோறுங் குருகைப் பிரான் குணங்கூற மன்ப, ரீட்டங்க டோறு மிருக்கப் பெற்றேமி நந் தெம்முடைய, நாட்டங்க டோறும் புனல்வந்து நால்ப் பெற்றேம்" எனப் பாடுதலால் இவர்காலத்தே பெரிய கோயிற்கண்ணே கூட்டம் கூட்டமாகக் குருகைப்பிரான்

குணாநுபவம்பண்ணும் பரமபத்தர்கள் மிக்கிருந்தனரென வும், அத்திருக்கூட்டத்தொடெல்லாம் தாமும் உடன் இருக்கப் பெற்றார் எனவும் இருந்து ஆனந்தக்கண்ணீர் பெருக்கினரெனவும் அறியப்படும். இங்ஙனம் கம்பர் குருகைப்பிரானார் திருவடிகளில் ஈடுபடுதற் கேற்ற காலம் அதுவேயாமென நோக்கிக்கொள்க. ஈண்டுக் காட்டிய கி.பி.1185 ஆம் ஆண்டு இராசராசன் ஆட்சியின் இடைக்காலமாதல் ஆராய்ந்துகொள்க.

இனி இவர் இராமாவதாரத்து "சென்னிநாட் டெரியல் வீரன் றியாகமவிநோதன் றெய்வப், பொன்னி நாட்டுவமைவைப்பை" எனக்கூறிய விடத்துச் சென்னி யாகிய சோழனொருவனை வீரன்' என்னும் பெயரால் வழங்கியுள்ளார். கூத்தர் இராசராசனுலா விறுதியிற் பாடிய,

"அன்று தொழுத வரிவை துளவணிவ
தென்று துயில்பெறுவ தெக்காலந்-தென்றிசையி
னீரதிரா வண்ண நெடுஞ்சிலையை நாணெறிந்த
வீரதரர வீரோத யா."

என்னும் வெண்பாவிலும் இராசராசனுக்கு வீரசம்பதமே பெயராகப் பயின்றுள்ளது. இவனை வீரராசராசன், வீரராசேந்திரன் எனவும் வழங்குவரெனத் தெரிகிறது. இதனாலும் கம்பர் இராமாயணம் பாடிய காலத்தவன் இராச ராசனெனை ஊகித்தலாகும். கம்பர் இராமாவதார இறுதியில் "அறைபுகழ்ச் சடையன்வாழி அனுமனெப் போதும்வாழி" என வாழ்த்துக் கூறுதலாற் சடையன் அவர் இராமாயணம்பாடி முடித்தகாலத்தும் இருந்தனன் என்று கொள்ளப்படும். கூத்தர் உத்தரராமாயணம்பாடிய காலமும் அதுவாம். அக்காலத்துச் சடையற்கும் கூத்தருக் கும் 75 வயதாமெனக் கொள்ளலாகும்.

இனி "ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூறொ ழித்து'' என்னும் வெண்பாவினை வைத்து நோக்கின் கம்பர் இராமாயணம் பாடியது சகாப்தம் 1100. (அஃதா வது கி.பி.1178) எனத் தெரியலாகும். அஃது எண்ணிய சகாத்தம்" என்ற செய்யுளாற் கொள்ளப்பட்ட சகாப்தம் 1107க்கு (அஃதாவது கி.பி. 1185க்கு) ஏழுவருடம் முற் பட்டதாமெனக்கருதப்படும். 'எண்ணியசகாப்தம்' என்ற செய்யுள் அரங்கேற்றக்காலமாக வைத்துக்கொண்டால் கம்பர் இராமாயணம் பாடிமுடிந்தகாலம் அவ்வரங்கேற் றத்திற்கு 7 வருடம்முற்பட்டதாமெனத் தேறலாம்.

இங்ஙனம் பலவாற்றானோக்கினும் கம்பர் காலம் 1120—க்கும் 1200க்கும் இடைப்பட்டதாதல் தெளியலாம்.

□



1870 - 1946